www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2009
ரூ. 7.00

## வேறுபாட்டைக் கண்டுபிடி







## சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத் திருத்தம்:

# பொடாவின் மறு அவதாரம்!

படிப்பகம்

www.padippakam.com



# விவசாயத்தை நாசமாக்கும் தாராளமயம் நாட்டைக் கவ்வியிருக்கும் பேரபாயம்

**இஸ்லாமிய பயங்கரவாதத்தால் கொல்லப்பட்ட 'இந்தியர்களின்' எண்ணிக்கையை விட, சந்தை பயங்கரவாதத்தால் கொல்லப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை மிக அதிகம்.**

ஒரு நாளைக்கு 46 பேர்; கடந்த 2007-ஆம் ஆண்டில் மட்டும் 16,632 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்திய ஆட்சியாளர்கள் பின்பற்றி வரும் தாராளமயக் கொள்கை தோற்றுவித்த பயங்கரவாதத்தால் கொல்லப்பட்ட இவர்கள் அனைவரும் நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள். தேசிய குற்றப் பதிவுத்துறை அண்மையில் வெளியிட்டுள்ள புள்ளிவிவரக் கணக்கீட்டின்படி, நாடெங்கும் கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போகும் விவசாயிகளின் எண்ணிக்கையில், மகாராஷ்டிரா மாநிலம்தான் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது.

தாராளமயத்தால் ஏற்பட்ட விலைவீழ்ச்சியாலும், இடுபொருட்களின் விலையேற்றத்தாலும், கந்துவட்டிக் கடன் கொடுமையாலும் தற்கொலை செய்து கொண்டுள்ள இவர்கள் அனைவருமே சிறு விவசாயிகள். ''வெள்ளைத் தங்கம்'' எனப்படும் பருத்தி சாகுபடி செய்து திவாலாகி, மாண்டுபோன சிறு விவசாயிகளே, இப்படித் தற்கொலை செய்து கொண்டவர்களில் மிக அதிகம்.

மகாராஷ்டிராவின் விதர்பா பிராந்தியத்தில் மட்டும் கடந்த 2007-ஆம் ஆண்டில் 4,238 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயுள்ளனர். நாடு தழுவிய அளவில் கொல்லப்பட்ட மொத்த விவசாயிகளில் ஏறத்தாழ கால்பங்கினர் விதர்பா பிராந்திய விவசாயிகள்.

தாராளமயம் தோற்றுவித்த இப்பயங்கரவாதத்தால் கொல்லப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கையில் மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம், சட்டிஸ்கர் ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன. போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கமும் கேரளாவும் இதற்கு அடுத்த நிலையில் உள்ளன. இம்மாநிலங்களில் மட்டும் கடந்த 2007-ஆம் ஆண்டில் 11,026 விவசாயிகள் மாண்டு போயுள்ளனர். இது, அவ்வாண்டில் நாடெங்கும் தாராளமயம் காவு கொண்ட மொத்த விவசாயிகளின் எண்ணிக்கையில் 66 சதவீதமாகும்.

மகாராஷ்டிராவில் சிறு விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் அதிகரித்த நிலையில், கடந்த 2006-ஆம் ஆண்டில் அங்கு சென்று விவசாயிகளைச் சந்தித்த பிரதமர் மன்மோகன் சிங் ரூ. 5,000 கோடிக்கு நிவாரண உதவிகளைப் பரபரப்பாக அறிவித்தார். விதர்பா பகுதிக்கு அதிகாரிகள் படையெடுப்பு, ஆய்வுகள், விசாரணைக் கமிஷன்கள் என ஆட்சியாளர்கள் சூரத்தனம் காட்டினர். ஆனால், இவையனைத்தும் விவசாயிகளின் தற்கொலைகளுக்குக் காரணமான தாராளமயத்தைத் தடுத்து நிறுத்த எதையும் செய்யவில்லை.

இதனால், கடந்த 2006-ஆம் ஆண்டில் மட்டும் நாடெங்கும் 17,060 விவசாயிகள் மாண்டு போயுள்ளனர். தாராளமயம் திணிக்கப்பட்ட பத்தாண்டு காலத்தில் மட்டும் - அதாவது, 1997 முதல் 2007 வரை - நாடெங்கும் 1,82,936 விவசாயிகள் கடன் சுமை தாளாமலும் வாழவழியின்றியும் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயுள்ளனர்.

இஸ்லாமிய பயங்கரவாதம்தான் நாட்டைக் கவ்வியுள்ள பேரபாயம் என்று ஆட்சியாளர்களும் பத்திரிகைகளும் தொடர்ந்து பீதியூட்டி வருகின்றன. உண்மையில், தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மிகக் கொடிய பயங்கரவாதம்தான் நாட்டையும் மக்களையும் பிடித்தாட்டிக் கொண்டு பேரழிவை விளைவித்துக் கொண்டிருக்கிறது.



கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் சடலங்களைக் கண்டு கதறும் உறவினர்கள்.(கோப்புப் படம்)

அதிர்ச்சியூட்டும் உண்மைகள் வெளியான பின்னரும், இம்மறுகாலனிய பயங்கரவாதத்தை மூடிமறைத்து திசை திருப்பவும், இப்பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் மக்களை ஒடுக்குவதற்கான முகாந்திரத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், இஸ்லாமிய பயங்கரவாதம், நக்சல் பயங்கரவாதம் என்ற பீதியை ஆளும் கும்பலும் பத்திரிக்கைகளும் திட்டமிட்டே ஊதிப் பெருக்குகின்றன.

● மணி



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 3**

ஜனவரி 2009

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 20

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,
தொலைபேசி : 94446 32561


## சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத் திருத்தம்:

# பொடாவின் மறு அவதாரம்!

கடந்த நவம்பரில் மும்பையில் நடந்த தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, தேசிய புலனாய்வு அமைப்பு (NIA) ஒன்றைத் தொடங்குவதற்கான சட்டம், ஏற்கெனவே இருந்த சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை (UAPA -''ஊபா'') திருத்தி புதிய சட்டம் எனமிரு பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களை இந்திய அரசு அவசரமாக உருவாக்கியுள்ளது. உருப்படியாக எந்த விவாதமுமின்றி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ள இச்சட்டங்களின் மூலம், நாட்டை அரசு பயங்கரவாத போலீசு ராஜ்ஜியமாக காங்கிரசு கூட்டணி அரசு மாற்றியமைத்துள்ளது.

அணுவிசை பாதுகாப்பு, விமானக் கடத்தல் தடுப்பு, கொடிய பேரழிவுக்கான ஆயுதங்கள் தடுப்பு, நக்சல் தீவிரவாத ஒழிப்பு உள்ளிட்ட நாட்டின் பாதுகாப்பு தொடர்பான 8 வகை சட்டங்களால் தண்டிக்கப்படக் கூடிய பயங்கரவாதக் குற்றங்கள் நிகழ்ந்திருந்தால், அவற்றை இனி தேசிய புலனாய்வு அமைப்பு விசாரிக்கும். இந்த அமைப்பின் சட்டப்படி, சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு, அவை இரகசியமாக விசாரணையை நடத்தும். சி.பி.ஐ. போன்ற மையப் புலனாய்வு அமைப்புகளின் விசாரணைக்கு மாநில அரசின் ஒப்புதல் தேவை என்று ஏற்கெனவே இருந்த நடைமுறை மாற்றப்பட்டு, தற்போதைய தேசிய புலனாய்வு அமைப்பு மாநில அரசின் ஒப்புதல் இல்லாமலேயே விசாரணை நடத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகளை வெறும் தகவல் தெரிவிக்கும் உறுப்புகளாக மாற்றிவிட்ட இச்சட்டம், மாநில அரசுகளின் பெயரளவிலான உரிமைகளைக் கூட முடக்கி, மைய அரசிடம் வரம்பற்ற அதிகாரத்தைக் குவிக்கிறது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு திருத்தச் சட்டமானது, பயங்கரவாத ''பொடா'' சட்டத்தின் மறு அவதாரமாக புதிய கொடிய விதிகளுடன் கொண்டு வரப்பட்டுள்ளது. ''பொடா'' சட்டத்தைப் போலவே, இச்சட்டத்தின் மூலம் குற்றம் சாட்டப்பட்டவரை 180 நாட்களுக்குப் பிணை வழங்காமல் கொட்டடியில் அடைத்து வதைக்க முடியும்; பயங்கரவாத குற்றம் நடந்த இடத்தில் குற்றம் சாட்டப்பட்டவரின் கைரேகையோ, அல்லது வேறு ஏதாவது தடயமோ இருந்தால் நீதிமன்றம் அவரைக் குற்றவாளிதான் என்று கருதி இச்சட்டப்படி கைது செய்ய முடியும்; தான் நிரபராதி என்பதைக் குற்றம் சாட்டப்பட்டவர்தான் நிரூபிக்க வேண்டும். நாட்டின் ஐக்கியம் - ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தினாலோ, அல்லது அச்சுறுத்துவது போல ''பாசாங்கு'' செய்தாலோ கூட இச்சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்ய முடியும். ஒரு புலனாய்வுக்குத் தொடர்புடையது என்று கருதி போலீசு விவரம் கேட்டால் எவரும் முழுமையான தகவல் தரவேண்டும்; இல்லையேல் இச்சட்டப்படி கைது செய்ய முடியும். பயங்கரவாதிகளுக்கு வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு தருபவர்களுக்குக் கடும் தண்டனை, தகவல் தொடர்பை இடைமறித்துக் கேட்டு அதை ஆதாரமாகக் காட்டி ஒருவரைக் கைது செய்ய போலீசுக்கு அதிகாரம், குற்றம் சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்க கடும் விதிமுறைகள் - என போலீசு-நீதித் துறைக்கு எல்லையற்ற அதிகாரமளிக்கும் வகையில் இப்புதிய ''பொடா'' சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் பயங்கரவாத இயக்கத்தின் உறுப்பினரா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கான வரையறை இச்சட்டத்தில் தெளிவாக இல்லாததால், இவர் பயங்கரவாத இயக்கத்தில் உறுப்பினராக இருந்தார் என்று குற்றம் சாட்டி, போலீசார் யாரையும் கைது செய்ய முடியும்.

ஏற்கெனவே ''தடா'', ''பொடா'' பயங்கரவாதச் சட்டங்கள் தலைவிரித்தாடிய போது, அப்பாவி முஸ்லிம்கள் தான் பெருமளவில் கைது செய்யப்பட்டு வதைக்கப்பட்டனர். பல்லாயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டவர்களில் வெறும் 5 சதவீதத்தினர் மீதுதான் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ''பொடா'' சட்டத்தை உயிர்ப்பிக்க மாட்டோம் என்று வாக்களித்து ஆட்சிக்கு வந்த காங்கிரசு துரோகக் கூட்டணி அரசு, தீவிரவாத எதிர்ப்பில் கடுமையாக இருப்பதாகக் காட்டிக் கொண்டு, புதிய பெயரில் ''பொடா'' சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதன் மூலம் அரசு பயங்கரவாதத்தைச் சட்டபூர்வமாக்கி, நாட்டைத் திறந்தவெளி சிறைச்சாலையாக மாற்றியுள்ளது.

ஏற்கெனவே மகாராஷ்டிராவில் ''பொடா'' சட்டத்துக்கு இணையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நடைமுறையில் உள்ளபோதுதான், தற்போதைய மும்பைத் தாக்குதல் நடந்துள்ள நிலையில், கடுமையான சட்டங்களால் பயங்கரவாதத் தாக்குதல்களை முறியடித்து விட முடியாது. இத்தகைய பயங்கரவாதங்கள் குறிப்பிட்ட அரசியல் காரணங்களுடன் எழும் நிலையில், அவற்றுக்கு அரசியல் தீர்வு காண முயற்சிக்காமல், அடக்குமுறைச் சட்டங்களால் இவற்றை வீழ்த்திடவும் முடியாது. இத்தகைய அரசு பயங்கரவாத கருப்புச் சட்டங்களுக்கு எதிராகப் போராடாமல், நாட்டு மக்களின் குடியுரிமை - ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் முடியாது. •

படிப்பகம்

www.padippakam.com

# மும்பய்த் தாக்குதல்:
# கண்ணீரிலும் வர்க்கமுண்டு

**ஊடகங்கள் மும்பய்த் தாக்குதலைக் கண்டிப்பதில் மேட்டுக்குடி திமிர்தான் பொங்கி வழிகிறது.**

**''நாங்கள் தினந்தோறும் இறக்கிறோம்''**

— மும்பய் தாஜ் விடுதியில் பதுங்கியிருந்த முசுலீம் தீவிர வாதிகளுக்கும், அரசுப் படைகளுக்கும் இடையே மோதல் நடந்து கொண்டிருந்த நேரத்தில், இந்தியா டி.வி., இம்ரான் பாபர் என்ற தீவிரவாதியிடம் தொலைபேசி மூலம் உரையா டல் நடத்தியபொழுது, ''நீ சுற்றி வளைக்கப்பட்டு விட்டாய்; சரணடையவில்லை என்றால் கண்டிப்பாக இறந்து விடுவாய்'' எனக் கூறியதற்கு நாங்கள் தினந்தோறும் இறப்பதாகப் பதில் அளித்தாராம்.

இந்தத் தொலைபேசி உரையாடல் அந்தத் தொலைக்காட் சியில் நேரடியாக ஒலி/ஒளிபரப்பப்பட்டது. இந்த உரையா டல் உண்மையிலேயே நடந்ததா, அல்லது அந்த டி.வி., தனது வர்த்தக நோக்கங்களுக்காக ''செட்டப்'' செய்ததா என்ற சந்தே கம் எழுப்பப்படுகிறது. ஆயினும், காசுமீரில், ஆப்கானில், ஈராக்கில் முசுலீம்கள் அன்றாடம் கொசுக்களைப் போல, இந் தியாவால், அமெரிக்காவால், பாகிஸ்தானால், ''நேடோ'' படைகளால் கொல்லப்படுவதை யாரும் சந்தேகிக்க முடியாது.

இந்த மரணங்கள் நமது நாட்டு மேன்மக்களின் மனசாட் சியை ஒருபோதும் உலுக்கியது கிடையாது. இந்த முசுலீம் களின் மரணங்களை விட்டு விடுங்கள். காங்கிரசு கூட்டணி பதவியேற்ற பிறகு, கடந்த நாலரை ஆண்டுகளில் இந்தியா வில் 25,000 குண்டு வெடிப்புகள் நடந்திருப்பதாக வும், அதில் 7,000 அப்பாவிகள் கொல்லப்பட்டிருப்ப தாகவும் கூறப்படுகிறது. அதற்கு முந்தைய பா.ஜ.க., கூட்டணி ஆட்சியில் நடந்த 36,259 குண்டுவெடிப்பு களில் 11,714 பேர் கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப் படுகிறது.

இந்தக் குண்டு வெடிப்புகளில் இறந்து போனவர் களில் ''இந்துக்களும்'' உண்டு. ஆனாலும், இந்தி நடிகை பிரீத்தி ஜிந்தா, சிமி காரவெல், ஷோபா டே போன்ற நமது நாட்டு மேன்மக்கள், இந்தக் குண்டு வெடிப்புகளுக்கெல்லாம் மிஞ்சிமிஞ்சிப் போனால் ஒரு அய்யோ பாவத்தை மட்டுமே வாயிலிருந்து - கவனியுங்கள், மனத்தில் இருந்து அல்ல - உதிர்த்திருப் பார்கள்.

ஆனால், மும்பய்த் தாக்குதலுக்குப் பிறகோ, அவர்களின் மனசாட்சி சாமியாடுகிறது. இத்தாக்குத லில் இறந்து போனவர்களுக்காக மும்பயில் டிசம்பர் 3 அன்று நடந்த அஞ்சலிக் கூட்டத்தில், ''பாதுகாப்பு இல்லை; வரி இல்லை'' - அதாவது, ''எங்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால், வரிகட்ட மாட்டோம்'' என இந்த மேன்மக்கள் முழங்கினர். ''நமது கோபத்தைச் செயலாக மாற்ற வேண்டும்'' என்றும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த மேன்மக்களின் கோபம், சிவராஜ் பாட்டில் உள்ளிட்ட சிலரின் பதவிகளைக் காவு வாங்கிவிட்டது. இந்தக் கோபத்தைக் கண்டு அரண்டு போன மன்மோகன் சிங், ஏ.கே. அந்தோணி, பிரணாப் முகர்ஜி ஆகியோர் தங்களின் அமைச்சர் பதவிகளைத் துறந்துவிட முன்வந்தார்களாம்.

மும்பயைச் சேர்ந்த காங்கிரசின் இளம் எம்.பி.யான தியோரா, ''தான் அரசியல்வாதியாக இருப்பதற்கு வெட்கப் படுவதாக'' இந்த மேன்மக்கள் முன் கூறி, பாவ மன்னிப்புக் கோரியுள்ளார். ராகுல் காந்தியோ இன்னும் ஒருபடி மேலே போய், ''தன் கன்னத்தில் தெருவில் போகும் யாரோ ஒருவர் அறைந்தால், எப்படி அவமானப்படுவோமோ, அதுபோல் உணர்வதாக''க் கண்ணீர் வடிக்காத குறையாக, காங்கிரசு கட்சி யின் செயற்குழு கூட்டத்தில் உரையாற்றியிருக்கிறார்.

ஒரிசாவில் இந்துமதவெறிக் கும்பலால் நூற்றுக்கும் மேற் பட்ட பழங்குடியினக் கிறிஸ்துவர்கள் கொல்லப்பட்டு, ஆயிரக்கணக்கான பழங்குடியினக் கிறிஸ்துவர்கள் அகதி களாகத் துரத்தப்பட்ட பொழுது வராத கோபம்;

கயர்லாஞ்சியில் போட்மாங்கே குடும்பத்தினர் ஆதிக்க சாதி வெறியர்களால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டபோது ஏற்படாத அவமானம், மும்பய்த் தாக்குதலைக் கண்டபிறகு மேன்மக்களுக்கும், அரசியல்வாதி களுக்கும் ஏற்படுகிறதே, அது ஏன்?

**மும்பய்த் தாக்குதலைக் கண்டித்து மும்பய் நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், ''பாதுகாப்பு இல்லையென்றால், வரி இல்லை'' என அரசை மிரட்டும் மேட்டுக்குடி கும்பல்.**





படிப்பகம்

www.padippakam.com

இந்த முறை பொதுச் சொத்துக்கள் மட்டுமின்றி தாஜ் ஹோட்டல், ட்ரைடண்ட் ஹோட்டல், நாரிமன் ஹவுஸ் போன்ற அவர்களின் சொத்துக்களும் தாக்கப்பட்டன. இந்த முறை கொல்லப்பட்டவர்களில் சாதாரண இந்திய மக்கள் மட்டுமின்றி, ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள், யூதர்கள் போன்ற மேன்மக்களும் அடக்கம்.

•••

காசுமீரில், தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகக் கூறப்பட்டு, பல முசுலீம்களின் வீடுகள் குண்டு வீசித் தகர்க்கப்பட்டிருக்கின்றன; புகழ் பெற்ற மசூதிகள் கூட எரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தீவிரவாதிகளின் இலக்குக்கு ஆளான தாஜ் ஹோட்டலுக்கும், டிரைடண்ட் ஹோட்டலுக்கும் அப்படிபட்ட சோகமயமான முடிவு ஏற்படவில்லை. குண்டுவீசித் தாக்கப்படவில்லை என்பதற்கு அக்கட்டிடங்கள் ''பெரியவை'' என்பது மட்டும் காரணமில்லை. மாறாக, அவை, இந்திய ஆளும் கும்பலின் வரிசையில் முதலிடத்தில் இருக்கும் ரத்தன் டாடாவின் சொத்து; ஓபராயின் சொத்து. உள்ளேயிருந்தவர்களோ, இந்திய அரசு கிள்ளுக்கீரைகளாக எண்ணும் காசுமீர் முசுலீம்கள் அல்ல; மாறாக, ''மேன்மக்கள்'' என்பதுதான் இராணுவத்தின் கையைக் கட்டிப் போட்டுவிட்டது.




**மேட்டுக்குடி கும்பல் நடத்திய அலங்காரமான ஆர்ப்பாட்டத்தில் அரசியல்வாதிகள் தீவிரவாதிகளாக அறிவிக்கப்படுகிறார்கள். அப்படியென்றால், அதிகார வர்க்கம்...?**

மும்பய்த் தாக்குதலில் ஈடுபட்ட முசுலீம் தீவிரவாதிகள் பொதுமக்களை, எவ்வித வேறுபாடும் இன்றி கண்ணில் பட்டவர்களையெல்லாம் சுட்டுக் கொன்றார்கள். அதேசமயம், இப்பிரச்சினையைக் கண்டித்து வரும் முதலாளித்துவ பத்திரிகைகள், தனியார் தொலைக்காட்சிகள், மேன்மக்கள் யாவரும் தங்களின் வர்க்கநலனில் இருந்துதான், மேட்டுக்குடி மனோபாவத்தில் இருந்துதான் இப்பிரச்சினையைக் கையாண்டு வருகின்றனர்.

ஒரே சமயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடும் சத்ரபதி சிவாஜி ரயில் நிலையத்தின் மீது நடந்த தாக்குதல், தாஜ் ஹோட்டலைப் போல தொலைக்காட்சிகளிலோ, பத்திரிகைகளின் அட்டை படத்திலோ முக்கியத்துவம் பெறவில்லை. தாஜ் விடுதிக்குள் தீவிரவாதிகள் மூன்று நாட்கள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியது மட்டும் ஊடகங்களின் முக்கியத்துவத்திற்குக் காரணமில்லை. தாஜ் விடுதியின் மீது ஒரு துரும்பு பட்டிருந்தாலும், அது தலைப்புச் செய்தியாக இடம் பிடித்திருக்கும். ஏனென்றால், தாஜ் விடுதி அவர்களின் சொத்து!

இத்தாக்குதலுக்கு முன்பாக, படித்த நடுத்தர வர்க்கத்தினருள் பெரும்பாலோருக்குக் கூட தாஜ் விடுதி பற்றித் தெரிந்திருக்காது. பலான பலான விஷயங்கள் நடக்கும் தாஜ் விடுதி ரத்தன் டாடாவின் வம்சாவளியினருக்குச் சொந்தமானது என்பதற்காகவே, அந்த விடுதி மும்பய் நகரத்தின் அடையாளமாக ஊதிப் பெருக்கப்பட்டது. வெள்ளையன், ஜாம்செட்ஜி டாடாவை பிரபலமான அப்பல்லோ விடுதியில் நுழைய அனுமதிக்கவில்லை என்ற ரோஷத்தில்தான், ஜாம்செட்ஜி டாடா தாஜ் விடுதியைக் கட்டியதாக முதலாளித்துவ பத்திரிகைகள் பீற்றியும் கொண்டன. அதேசமயம், டாடா குடும்பம் வெள்ளைக்காரனுக்கு தரகு வேலை பார்த்துதான் டாடா தொழில் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கின என்ற அசிங்கத்தை மட்டும் வசதியாக மறைத்துவிட்டன.

தாக்குதலுக்குப் பிறகு, என்.டி.டி.வி., என்ற தொலைக்காட்சி ''மக்களாகிய நாம்'' என்றொரு நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கியது. இதில், மும்பய்த் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சாதாரண பொதுமக்களோ, அதற்கு முன்பு நடைபெற்ற தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களோ, 1992 மும்பய்க் கலவரத்தில் பாதிக்கப்பட்ட முசுலீம்களோ கலந்து கொள்ளவில்லை. மாறாக, சிமி காரவெல், குணால் கோஹ்லி, ரத்னா பதக், நெஸ்வாடியா, லுகே கென்னி போன்ற மும்பயின் மேன்மக்கள்தான் பங்கெடுத்துக் கொண்டனர். மேல்தட்டுத் திமிரும், முட்டாள்தனமும் நிறைந்த அவர்களின் பிதற்றல்கள்தான், சமூகத்தின் பொதுக் கருத்தாக பார்வையாளர்கள் மீது திணிக்கப்பட்டது.

கேரள முதல்வர் அச்சுதானந்தன், இத்தாக்குதலில் இறந்து போன மேஜர் உன்னி கிருஷ்ணனுக்கு அஞ்சலி செலுத்த பெங்களூருவில் உள்ள அவர் வீட்டுக்குச் சென்ற பொழுது, உன்னிகிருஷ்ணனின் பெற்றோர், அவரை அவமானப் படுத்தி வெளியேற்றினர். இதனால் அவர், ''உன்னிகிருஷ்ணன் இராணுவத்தில் இல்லையென்றால், அவர் வீட்டுப் பக்கம் நாய்கூடப் போகாது'' என எரிச்சலோடு சொன்னார். அரசியல்வாதிகளைப் போட்டு வாங்குவதில் தனிசுகம் காணும் மேட்டுக்குடி கும்பல், நடந்த சம்பவத்தை வெட்டிக் குறுக்கி அச்சுதானந்தன் சொன்னதை மட்டும் ஊதிப் பெருக்கியது.

தங்கள் மகன் இராணுவத்தில் பணியாற்றித் ''தியாகி'' யானவன் என்ற திமிரில் அநாகரிகமாக நடந்து கொண்ட உன்னிகிருஷ்ணனின் பெற்றோர்தான் இதில் முதல் குற்றவாளிகள். ஆனால், ஊடகங்களின் ஒருதலைப்பட்சமான பிரச்சாரத்தால், உன்னிகிருஷ்ணனின் பெற்றோர் அனுதாபத்துக்குரியவர்களாகவும்; அச்சுதானந்தன் மூன்றாம்தர வில்லனாகவும் மாற்றப்பட்டார். ஆனால், காசுமீரிலும், வடகிழக்கு இந்தியாவிலும் நீங்கள் மக்களிடம் கேட்டால், அரசியல்வாதிகளை விடக் கேடுகெட்ட வில்லன்கள் இராணுவத்தினர்தான் என்பார்கள்.

தாக்குதல் நடந்த சமயத்தில் மகாராஷ்டிராவின் முதலமைச்சராக இருந்த விலாஸ் ராவ் தேஷ்முக், நடிகரான தனது மகனோடும், மாஃபியா தொடர்பான படங்களை எடுத்துத் தள்ளும் இயக்குநர் ராம்கோபால் வர்மாவோடும் தாஜ் விடுதியைப் பார்வையிட வந்தது ஊடகங்களின் கடும் கண்டனத்திற்குள்ளானது. ''அடுத்த படத்திற்கு லொகேஷன் பார்க்க வந்தார்களா?'' என அவர்கள் விமர்சிக்கப்பட்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

ஊடகங்களின் இந்த விமர்சனம் கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கொண்டு கல் எறிவதைப் போன்றது. ஏனென்றால், ஆங்கில-தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் இத்தாக்குதலை ஹாலிவுட் சினிமா போலத்தான் தொகுத்து வழங்கின. ஒரு தொலைக்காட்சி நிறுவனம், தீவிரவாதிகள் தாஜ் விடுதியைத் தகர்க்கும் நோக்கத்தோடு வந்திருப்பதாகவும்; அதற்காக ஆர்.டி.எக்ஸ் வெடி மருந்தை தாஜ் விடுதிக்கு அருகே பதுக்கி வைத்திருப்பதாகவும் ''பிரேக்கிங் நியூஸை'' வெளியிட்டது. மறுநாள், இராணுவம் இதனை வதந்தி என மறுத்தது.

இது மட்டுமின்றி, தீவிரவாதிகளின் தாக்குதலைச் சமாளிக்க இராணுவம் எடுக்கும் நிலைகளை உடனுக்குடன் கிரிக்கெட் ஸ்கோர் போல தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பியதால், அதிநவீன கைபேசிகளை வைத்திருந்த தீவிரவாதிகளுக்குத் தங்களைத் தற்காத்துக் கொண்டு, இராணுவத்தின் மீது தாக்குவது மிகவும் வசதியாக அமைந்ததாக இராணுவமே புலம்பும் அளவிற்கு தொலைக்காட்சிகள் ''பொறுப்புணர்வுடன்'' நடந்து கொண்டன. இந்த நிகழ்ச்சியை ''ஸ்பான்சர்'' செய்தவர்கள் என்ற விளம்பர அறிவிப்பு வராததுதான் பாக்கி. அந்த அளவிற்கு அவர்களின் ஒளிபரப்பில் வர்த்தக நெடி அடித்தது.

தீவிரவாதிகளை எதிர்த்துச் சண்டையிட்டு இறந்து போன இராணுவத்தினருக்கு, போலீசாருக்கு அஞ்சலி செலுத்துவதில் கூட, முதலாளித்துவ ஊடகங்கள் வர்க்கப் பாசத்துடன் தான் நடந்து கொண்டன. என்.டி.டி.வி. ஒளிபரப்பிய அஞ்சலி நிகழ்ச்சியில், உயர் அதிகாரிகளின் பெயர்கள்தான் இடம் பெற்றன. மகாராஷ்டிர போலீசார் அஜ்மல் என்ற தீவிரவாதியை உயிருடன் பிடிக்க முயன்றபொழுது, குண்டடிபட்டு இறந்து போனார், உதவி துணை ஆய்வாளர் துக்காராம் ஓம்பாவே. ''அவரின் தியாகத்துக்கு உரிய மதிப்பு கொடுக்கப்படவில்லை'' என ஓம்பாவேயின் மனைவி வெளிப்படையாகக் குற்றஞ்சுமத்தும் அளவிற்கு இந்தப் பாகுபாடு பசசையாகத் தெரிந்தது.

•••

முதலாளித்துவ ஊடகங்களின், மேன்மக்களின் கோபம், ''பாகிஸ்தான் மீது உடனடியாக போர் தொடுக்க வேண்டும்'' என்று இந்திய அரசை நிர்ப்பந்திக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நாடு பிடிக்கும் ஆசை ''தீவிரவாதத்தின் மீதான போர்'' எனப் புளுகப்படுவதைப் போல, பாக்.கிற்கு எதிரான போரை ''பயங்கரவாதத்தின் மீது போர் தொடுப்போம்'' எனப் புனிதப்படுத்துகிறது, இந்தியா-டுடே.

**“ இந்த நிகழ்ச்சியை ''ஸ்பான்சர்'' செய்தவர்கள் என்ற விளம்பர அறிவிப்பு வராததுதான் பாக்கி. அந்த அளவிற்கு தனியார் தொலைக்காட்சிகளின் மும்பய்த் தாக்குதல் ஒளிபரப்பில் வர்த்தக நெடி அடித்தது. ”**

''பயங்கரவாதத்தின் மீது போர் என்றால், லஷ்கர்-இ-தொய்பா மீது மட்டும்தானா? ஆர்.எஸ்.எஸ். இந்து பயங்கரவாதிகள் மீது கிடையாதா?'' என்ற நியாயமான, நடுநிலையான கேள்வி எழாத வண்ணம், பெரும்பாலான வாசகர்களின் பொது புத்தியில் முசுலீம் எதிர்ப்பு - பாக். எதிர்ப்பு என்ற இந்து மதவெறி அரசியல் நிறைந்து காணப்படுகிறது. ''பாக்.மீது முழுமையான போரை நடத்த முடியாதென்றால், தீவிரவாத முகாம்களை அழிக்கும் ஒரு மின்னல் வேகப் போரையாவது நடத்தலாம்'' என்று ஒற்றையா, இரட்டையா பாணியில் ஆலோசனைகளை அள்ளி விடுகிறார்கள், சில அம்பிகள்.

பாக். மீது போர் தொடுக்க வேண்டும் என்றால், மும்பய்த் தாக்குதலுக்கும், பாகிஸ்தானுக்கும் தொடர்பு இருப்பதற்கான ஆதாரத்தை உலக நாடுகள் முன் காட்ட வேண்டும். ஆனால், இந்திய அரசோ விசாரணை இன்னும் நடைபெற்றுக் கொண்டு இருப்பதாகத்தான் கூறுகிறது; தாக்குதலில் ஈடுபட்டவர்கள் பாகிஸ்தானில் இருந்து வந்திருப்பதற்கான ஆதாரம் இருப்பதாகக் கூறி வருகிறதேயொழிய, பாகிஸ்தான் அரசுக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறவில்லை. அமெரிக்காவின் இராணுவத் தளபதிகளுள் ஒருவரான மைக் முல்லேன் ''மும்பய்த் தாக்குதலுக்கும் பாக். அரசுக்கும் தொடர்பில்லை'' எனக் கூறி, இப்பிரச்சினைக்கு மங்களம் பாடி விட்டார். ஆனால், ஊடகங்களும், மேன்மக்களும் ஆதாரம் காட்டத் தேவையில்லை என அடம் பிடிக்கிறார்கள்.

பாக். அரசிற்கு தொடர்பு இருப்பதற்கான ஆதாரம் கிடைத்தாலும் கூட, பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியாவால் ஒரு பொம்மைத் துப்பாக்கியைக் கூட தூக்கிக் காட்ட முடியாது. ஆப்கானிஸ்தானில் தாலிபான் - மற்றும் அல்-கய்தாவிற்கு எதிராகப் போர் நடத்தி வரும் நேடோ படைகளுக்கு ஆதரவாக, பாகிஸ்தான் தனது படைகளை ஆப்கான்


**மும்பய்த் தாக்குதலுக்குப் பிறகு ''திக் விஜயம்'' செய்த அமெரிக்க உள்துறை அமைச்சர் கண்டலீசா ரைஸும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் இணைந்து நடத்திய பத்திரிக்கையாளர் சந்திப்பு.**





படிப்பகம்

www.padippakam.com




"தீவிரவாதத்திற்கு எதிரான போரை நடத்து" என்ற முழக்கத்தின் கீழ் இந்தியா-டுடே இதழ் நடத்திவரும் இயக்கம். இந்தப்போர் இந்து தீவிரவாதத்தின் மீதும் பாயுமா?

எல்லைப்புறத்தில் நிறுத்தியிருக்கிறது. இந்தியா, பாக்.கிற்கு எதிராகப் படைகளைத் திரட்டினால், பாகிஸ்தான் தனது படையை ஆப்கான் எல்லையில் இருந்து திரும்பப் பெறும். அமெரிக்காவுக்குத் தலைவலியை ஏற்படுத்தும். இந்தநிலை உருவாவதை, அமெரிக்கா விரும்பாது; அனுமதிக்காது. அதனால்தான், இந்திய ஊடகங்கள் பாக்.கிற்கு எதிரான போர்ப் பரணியைப் பாடஆரம்பித்தவுடனேயே, அமெரிக்காவின் உள்துறை அமைச்சர் கண்டலீசா ரைஸ், இந்திராவிற்குத் திடீர் விஜயம் செய்து எச்சரித்து விட்டுப் போனார்.

அமெரிக்கா, ஆப்கானிஸ்தானில் நேரடியாக காலடி எடுத்து வைத்த அன்றே இந்தியாவின் இராணுவ வீம்புக்கு ஆப்பு வைக்கப்பட்டு விட்டது. கடந்த பா.ஜ.க. ஆட்சியில் பாக்.கிற்கு எதிராக போர் தொடுக்க முண்டா தட்டி, பின்பு மீசையில் மண் ஒட்டாத குறையாக படைகளைப் பாசறைக்குத் திரும்பப் பெற்றதே இதற்கு சாட்சி. சூடு கண்ட பூனை என்பதால்தான் காங்கிரசு மட்டுமல்ல, பா.ஜ.க.வும் இந்தப் பிரச்சினையில் அமெரிக்க எஜமானர்களின் மனம் கோணாத படி நடந்து கொள்கின்றன.

அமெரிக்காவுக்கும் இந்தியாவிற்கும் இடையேயான அணுசக்தி ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் தொடங்கிய நாளில் இருந்தே, "அமெரிக்கா, இந்தியாவைத் தனக்குச் சமமான, நம்பகமான கூட்டாளியாக ஏற்றுக் கொண்டு விட்டது என்பதற்கு இந்த ஒப்பந்தமே சாட்சி" என மன்மோகன் சிங் மட்டுமல்ல, இந்தியா டுடே போன்ற ஏடுகளும் திரும்பத் திரும்பக் கூறி வந்தன. ஆனால், அது அடிமைகளின் கனவு என்பதும், மன்மோகன் சிங்கின் அண்டப் புளுகுகளில் ஒன்று என்பதும் நிரூபணமாகிவிட்டது. அமெரிக்கா, இந்த இக்கட்டான தருணத்திலும் பாகிஸ்தானைக் கைவிட மறுத்த தன் மூலம், மன்மோகன் சிங் - இந்தியா டுடே கும்பலின் முகத்தில் கரியைப் பூசிவிட்டது.

•••

முசுலீம் தீவிரவாதிகளின் இலக்காக இந்தியா இருப்பதை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்றால், இந்தியா, அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் இராணுவ ரீதியிலான நெருக்கத்தை ஏற்படுத்தி வருவதைக் கைவிட வேண்டும்; ஈராக்கிலும், ஆப்கானிலும் அமெரிக்கா நடத்தி வரும் ஆக்கிரமிப்புப் போருக்கு மறைமுக உதவி செய்து வருவதைக் கைவிட்டு, அப்போரை இந்தியா கண்டிக்க வேண்டும்.

உள்நாட்டில், முசுலீம்-கிறித்தவர்களுக்கு எதிராக மதக் கலவரங்களை நடத்திவரும் ஆர்.எஸ்.எஸ். இந்து பயங்கரவாதிகளைத் தண்டித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும், மறுவாழ்வும் வழங்க வேண்டும்.

காசுமீரில் இருந்து இந்திய இராணுவத்தையும், துணை இராணுவப் படைகளையும் திரும்பப் பெறுவதோடு, அம்மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கும் வண்ணம், ஐ.நா. மன்றத்தில் வாக்களித்தபடி, பொது ஜன கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்த வேண்டும்.

இப்படிபட்ட ஆக்கப்பூர்வமான அரசியல் தீர்வுகளை முன் வைத்து, ஒரு விவாதத்திற்குத் தளம் ஏற்படுத்திக் கொடுக்க முன்வராத ஊடகங்கள், இராணுவத் தீர்வை முன் தள்ளுகின்றன. அது செத்த குதிரையை அடிப்பதற்குச் சமம் என்று தெரிந்திருந்தும், போர், போர் என ஊடகங்களும், முன்னாள் இராணுவ அதிகாரிகளும் ஊளையிடுகின்றனர்.

அரசியல்வாதிகள் மீது மக்களுக்கு இருக்கும் வெறுப்பை, இத்தீவிரவாத தாக்குதலைப் பயன்படுத்திக் கொண்டு, ஜனநாயகத்தின் மீதான வெறுப்பாக மாற்றிவிட ஊடகங்களும், மேன்மக்களும் முயலுகின்றனர். ஓட்டுக் கட்சிகள், தேர்தல், நாடாளுமன்றம் என்பதற்குப் பதிலாக, திறமையான அதிகாரிகளைக் கொண்ட ஆட்சிமுறை வந்தால், எல்லா பிரச்சினைகளையும் தீர்த்துவிட முடியும் என்ற மாயையை ஏற்படுத்தி, அதிகார வர்க்க பாசிச ஆட்சியை ஏற்றுக் கொள்வதற்கான மனோநிலையை மக்கள் மத்தியில், குறிப்பாக நடுத்தர வர்க்கம் மத்தியில் ஏற்படுத்த இவர்கள் முயலுகின்றனர்.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட பிறகு, "பேட்ரியாடிக் சட்டம்" என்ற கருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது, அமெரிக்க அரசு. நமது நாட்டு மேட்டுக்குடி கும்பலுக்கு அமெரிக்கா வாந்தி எடுப்பதை ருசித்து உண்ணும் பழக்கம் உள்ளதால், அவர்கள் அதுபோன்ற சட்டம் இந்தியாவிலும் வரவேண்டும் என்று கோரினார்கள். பாக். மீது போர் தொடுப்பதை விட, உள்நாட்டில் ஒரு கருப்புச் சட்டத்தைக் கொண்டு வருவது எளிது என்பதால், காங். கூட்டணி ஆட்சி, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து, "பொடா"வுக்கு மீண்டும் மறுவாழ்வு கொடுத்து விட்டது.

இப்"புதிய" சட்டம், முசுலீம் தீவிரவாதத்தை ஒழிக்கிறதோ, இல்லையோ, இந்திய மக்களின் அற்ப அரசியல் - ஜனநாயக உரிமைகளையும் ஒழித்துக் கட்டி, ஒரு போலீசு ராஜ்ஜியத்தை நிச்சயமாக உருவாக்கும். இதனை நம்ப மறுப்பவர்கள், "தடா"வும் "பொடா"வும் சாதித்ததை மனசாட்சியோடு பரிசீலனை செய்து பார்க்கட்டும்.

• ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

# சி.பி.எம்.-அ.தி.மு.க. தேர்தல் கூட்டணி:

# "பச்சையான" பிழைப்புவாதம்

## பதவிக்காக, ஜெயாவின் இந்து மதவெறிச் சார்பை மூடி மறைக்கிறது, சி.பி.எம்.

போயஸ் தோட்டத்திற்கு நவம்பர் மாதம் ஐ-யும் — அதாவது வலதும், டிசம்பர் மாதம் எம்-மும் — அதாவது இடதும் விஜயம் செய்தார்கள். ஐ-க்கு பரதன், தா.பாண்டியன், சி.மகேந்திரன் போன்றோரும், எம்-முக்கு பிரகாஷ் காரத்தும், வரதராசனும் தோட்டத்தில் உள்ளேன் ஐயா சொல்லி, அம்மாவுடன் பேசிவிட்டு வந்தார்கள். அதிலும் காரத்துடன் சென்றிருந்த தோழர்கள் புரட்சித் தலைவிக்கு பிடித்த இளம் பச்சைச் சட்டையில் சென்றிருந்தார்களாம்.

அம்மாவுக்கு இணையாக தோழர்கள் அமர்ந்த அந்த நாற்காலியை வாண்டையார், சேதுராமன், சுப்பிரமணிய சுவாமி, அத்வானி, ஜஸ்வந்த் சிங், மோடி, வைகோ முதலானோர் ஏற்கெனவே தேய்த்திருக்கிறார்கள் என்பதால், அதுவும் வரலாற்றுச் சிறப்புமிக்கதுதான். தானைத் தலைவியின் முன் சற்று சங்கோஜத்துடன் பேசிய தோழர்களுக்கு மோடிக்கு கொடுக்கப்பட்ட விருந்து போல வரவேற்பு இல்லையென்றாலும், சந்திப்பு அணுக்கமாகத் தான் நடந்தது. புரட்சித் தலைவிக்கு பிரகாஷ் காரத் கொடுத்த பெரிய பூச்செண்டு படம் எல்லாப் பத்திரிகைகளிலும் இடம் பெற்றன.

அமெரிக்க அணு சக்தி ஒப்பந்தத்திற்கு மைய அரசு பணிந்ததை ஒரு வருடமாக எதிர்ப்பது போல எதிர்த்து, மிரட்டுவது போல மிரட்டி, எச்சரிப்பது போல எச்சரித்து, அழுவது போல அழுது, இன்னும் பல செய்து பார்த்து, இறுதியில் காங்கிரசு கூட்டணி அரசு, "போடா வெண்ணை" என்று தூக்கி எறிந்ததும் வேறு வழியின்றி ஆதரவை திரும்பப் பெற்றுக் கொண்டார்கள், போலிகள். ஒருவேளை காங்கிரசு அரசு கவிழ்ந்தால், அடுத்த தேர்தலில் என்ன செய்வது என்ற கவலை அவர்களை வாட்டியது. முன்னெச்சரிக்கையாக அடுத்த தேர்தலில் பா.ஜ.க தோற்று, காங்கிரசு வென்றால் மீண்டும் ஆதரவு உண்டு என்பதைத் தோழர்கள் சுற்றி வளைத்து ஒத்துக் கொண்டார்கள். ஆனால், தேர்தலில் கடந்த முறை வெற்றி பெற்ற தொகுதிகளாவது மீண்டும் கிடைக்க வேண்டுமே என்ற கவலை தோழர்களை வாட்டியது.

இடையில் மூன்றாம் அணி என்று சற்று "பாவ்லா" காட்டினார்கள். 'குடியரசுத் தலைவர்' தேர்தலிலேயே இந்த மூன்றாம் அணி தோன்றிய வேகத்தில் பறந்து விட்டது. முக்கியமாக அம்மா கட்சி தேர்தலைப் புறக்கணிப்பதாக சவடால் அடித்து, பின்னர் பா.ஜ.க.விற்கு வாக்களித்து மூன்றாவது அணியின் தகுதியை உலகுக்கு அறிவித்தது.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்ட உடனேயே பிரகாஷ் காரத் சண்டமாருதம் செய்து முழங்கிய சேதி என்னவென்றால், காங்கிரஸ் ஒரு மூழ்கும் கப்பல், அதிலிருந்து மாநிலக் கட்சிகள் வெளியேற வேண்டுமென்பதாகும். இந்த முழக்கத்தைக் கேட்ட பிறகுதான் முலாயம் போன்ற கட்சிகள் கப்பலில் இடம் பிடித்தனர். அம்மாவும் எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தும் காங்கிரசு அவ்வளவாக அசைந்து கொடுக்கவில்லை. இதனால் அவர் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைப்பதாகச் செய்திகள் அடிபட்டன. தமிழக பா.ஜ.க.வும் இதை வெளிப்படையாக ஒரு கோரிக்கையாக வைத்தும், அம்மாவின் மனதை கரைக்கும் வண்ணம் பல அறிக்கைகளை வெளியிட்டும் நோட்டம் பார்த்தது. அப்போது அம்மா எடுத்த முடிவு என்னவென்றால், தேர்தலுக்கு முன்பு ஒரு கூட்டணி, தேர்தலுக்கு பின்பு வேறு ஒரு கூட்டணி! இப்போது தேர்தலுக்குப் பின்னர்தான் கூட்டணி என்பதையும் கூச்ச நாச்சமின்றி பா.ஜ.க. ஏற்றுக் கொண்டு கச்சேரியை செய்து வருகிறது.

இத்தகைய புரட்சிகரமான தருணத்தில் ஐ-ய்யுக்கும் எம்-முக்கும் அடித்தது ஜாக்பாட். ஏற்கெனவே புரட்சித் தலைவியின் இரசிகராக அறியப்பட்ட வலதின் தா.பாண்டியன், எதிர்காலத்தில் அம்மாவுடன் கூட்டணி வைக்கப் போகும் தருணத்தை முன்னறிந்து கருணாநிதியை அம்மா ரேஞ்சுக்கு கண்டித்து அறிக்கை வெளியிட்டு வந்தார். அதனால்தான் இடதுகளை விட அதிவேகத்தில் ஒரு மாதம் முன்னதாகவே அம்மாவைச் சந்தித்து கூட்டணிக்கு அச்சாரம் போட்டார். இது எம்-முக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியது. அவர்கள் விஜயகாந்துடன் கூட்டணி வைக்கலாமா என்று ஒரு மயக்கத்தில் இருந்ததால், புரட்சிக் கலைஞரையும் சந்தித்து நோட்டம் பார்த்தார்கள். அதைப் பரிசீலித்து முடிவெடுப்பதற்கு முன்னதாக அம்மாவைச் சந்திக்க வேண்டும் என்று நெருக்கடியை தா.பாண்டியன் உருவாக்கி விட்டார். இதில் தாமதித்தால் ஐ-யை விட எம்-முக்கு ஓரிரு சீட்டுகள் குறைந்து விட்டால் என்ன செய்வது?

தமிழகத்தில் யாருடன் கூட்டணி வைப்பது என்று 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மாநிலக் குழுவில் ஒத்த கருத்து இல்லையென்பதால், முடிவு எடுக்கும் உரிமை அரசியல் தலைமைக் குழுவிடம் அளிக்கப்பட்டதாம். அரசியல் தலைமைக் குழுவும் அரட்டை கச்சேரி நடத்தி எடுத்த ஒரே முடிவு என்னவென்றால், தேர்தலில் அம்மாவுடன் கூட்டணி வைப்பது என்பதுதான்.

இந்த முடிவை கனத்த இதயத்தோடு பிரகாஷ் காரத் மாநிலக் குழுவிடம் தெரிவித்ததாக "நக்கீரன்" எழுதியிருந்தது. இவ்வளவு சென்டிமெண்டோடு சி.பி.எம். பேசுவதற்குக் காரணம் இருக்கிறது. தமிழகத்தில் தி.மு.க.வுடன் கூட்டணி வைத்து, சென்ற தேர்தலில் இரண்டு தொகுதிகளை வென்றது 'மார்க்சிஸ்ட்' கட்சி. இப்போது காங்கிரசோடு வலுவான கூட்டணியாகத் திகழும் தி.மு.க. இந்த உறவை முறித்துக் கொள்வதாக இல்லை. அதனால் சி.பி.எம். சென்றதால் கருணாநிதியொன்றும் கவலைப்படவில்லை. மொத்தத்தில் நான்கு தொகுதிகள் மிச்சம் என்பது அவர் கணக்கு. போலி கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரை அந்த நான்கு


படிப்பகம்

www.padippakam.com

தொகுதிகளையும் மீண்டும் பெறவேண் டுமென்றால் அ.தி.மு.க.வுடன்தான் கூட்டணி வைக்க வேண்டும்.

ஆக மொத்தம், இரண்டு அல்லது ஒன்றரை சீட்டுக்களுக்காக அ.தி.மு.க.வுடன் கூட்டணி என்று சொல்லி விட்டுப் போகவேண்டியது தானே? மாறாக, பயங்கரமான ராஜ தந்திர முடிவு எடுத்தது போல, சி.பி.எம் ''பில்டப்'' கொடுப்பதைத்தான் சகிக்க முடியவில்லை. அதாவது காங்கிரசு, பா.ஜ.க. இரண்டு கட்சிகளையும் போலிகள் எதிர்க்கிறார்களாம். அதனால் மூன்றாவது அணிக்கு வலிமை சேர்க்கும் வண்ணம் பல மாநிலக் கட்சிகளை இழுப்பதுதான் அவர்களது தொலைநோக்கு அரசியலாம். சரி, இருக்கட்டும்.

மதவாதம், காங்கிரசு இரண்டு சக்தி களையும் எதிர்க்கத் துணிந்த போலிகள் அம்மாவை மதவாதமில்லையென்று கருதுகிறார்களா? மதமாற்றத் தடை சட்டம், ஆடு-கோழி பலியிடுவதைத் தடை செய்யும் சட்டம், மோடி பதவி யேற்பு விழாவில் நேரடியாக கலந்து கொண்டது, சென்னைக்கு மோடி வந் தபோது அழைத்து விருந்து வைத்தது, சேது சமுத்திர திட்டத்திற்கு எதிர்ப்பு — இப்படி பலமுறை அம்மா தான் ஒரு இந்துமதவெறி பாசிஸ்ட் என்று நிரூபித் திருக்கிறார்களே? இன்னும் சொல்லப் போனால், அம்மாவின் இந்துத்வ வேகம் பா.ஜ.க.வை விட அதிகமா கத்தானே இருக்கிறது? எல்லவாற்றுக்கும் மேலாக தேர்தல் முடிந்ததும் அ.தி.மு.க., பா.ஜ.க. பக்கம் சாயும் என்பதை எல்லா பத்திரிகைகளும் எழுதுகின்றன. மூன்றாவது அணி கணிசமாகத் தோல்வியுறும் பட்சத்தில் அம்மா தாமரை யோடு சங்கமிப்பார் என்பதை போலிகளும் மறுக்க முடியா தல்லவா?



தேர்தல் கூட்டணி குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த புரட்சித் தலைவியைச் சந்திக்கும் பிரகாஷ் காரத்; ''செலக்டிவ் அம்னிசியா'' நோய் யாருக்கு?

அம்மாவின் கணக்கு, தேர்தலின் போது முசுலீம்களின் வாக்குகள் வேண்டும், அதனால் பி.ஜே.பி.யுடன் கூட்டணி கிடையாது. தேர்தலுக்கு பின்னர் பா.ஜ.க.வுடன் கூட்டு வேண்டும், அப்போது போலிகளுடன் கூட்டணி கிடையாது. இப்படி ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை சுருட்டும் ராஜ தந்திரத்தில் அம்மா தானே செல்வாக்கு செலுத்துகிறார்? இப்படி மறைமுகமாக பா.ஜ.க. ஆட்சிக்கு வருவதற்குத்தான் போலிகளின் இந்தக் கூட்டணி தந்திரம் உதவுகிறது. ஆயினும், இந்த சந்தர்ப்பவாதத்தை போலிகள் ஒத்துக் கொள் வதில்லை. அவர்களைப் பொருத்தவரை தேர்தலுக்கு பின் காங்கிரசு மற்றும் பா.ஜ.க. இரண்டும் தோல்வியுற்று மூன் றாவது அணி ஆட்சிக்கு வரும் பட்சத்தில், இடதுசாரிகளுக்கு நிறைய எம்.பி.க்கள் வேண்டுமாம். ஆதலால் எந்த எழவு டனும் கூட்டணி வைத்துக் கொண்டு நிறைய சீட்டுக்களை அள்ள வேண்டுமாம்.

இரண்டு சீட்டுக்களுக்காக இல்லாத கொள்கைகளை யெல்லாம் கூறி தமது சந்தர்ப்பவாதத்தை வெளிப்படுத்தும் போலிகளிடம், அம்மா கறாராக கூறியிருக்கும் விசயம் என்னவென்றால், மூன்றாவது அணியின் பிரதமர் வேட் பாளராக மாயாவதியை முன்னிறுத்தக் கூடாதாம். இந்த ஒரு விசயமே மூன்றாவது அணியின் வலுவை விளக்கப் போது மானது. அடுத்து தேர்தலுக்கு பின் மூன்றாவது அணி தோல்வி யுற்று காங்கிரசு, பா.ஜ.க. இரண்டுமே சம அளவில் வெற்றி பெற்றால் போலிகள் என்ன செய்வார்கள்? மதவாதத்தை அனுமதிக்க கூடாது என்று காங்கிரசுக்கு ஆதரவு தருவார்கள். அநேகமாக இதுதான் நடக்கப்போகும் உண்மையென்றால், இப்போது ஏன் காங்கிரசுக்கு ஆதரவை விலக்க வேண்டும்? தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகி, தேர்தலுக்கு பின்பு சேரத்தான் போகிறார்கள் என்றால் இவர்களது சந்தர்ப்ப வாதம் அம்மாவை விஞ்சுகிறதே?

இவ்வளவும் எதற்காக? எல்லாம் இரண்டு சீட்டுக் களுக்காக என்றால் அதை அப்படி ஒத்துக் கொண்டு போக வேண்டியதுதானே? அதை விடுத்து அதற்கு கொள்கை முலாம் பூசவேண்டிய அவசியமென்ன? நாடாளுமன்ற சகதியில் புரண்டு கொண்டே அதை சந்தனமென்று சாதிப்ப தற்கு என்னவெல்லாம் செய்கிறார்கள்? நேரடியாகச் சொல்வ தென்றால் போலிகளின் காங்கிரசு எதிர்ப்பு, பா.ஜ.க. எதிர்ப்பு இரண்டுமே அப்பட்டமான பொய். ஒன்றை நேரடியாகவும், மற்றொன்றை மறைமுகமாகவும் ஆதரிக்கிறார்கள் என்பதைத் தான் அம்மாவுடன் கூட்டணி வைத்துக் கொண்டு போலிகள் உலகுக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

● இளநம்பி



படிப்பகம்

www.padippakam.com

# சி.பி.எம். அணிகளே, உங்கள் மனசாட்சியையும் பேச விடுங்கள்!

**சி.பி.எம். தலைமை சமூகப் பாசிஸ்டுகளாகச் சீரழிந்து போய்விட்டதை வேதனையோடு அம்பலப்படுத்துகிறார், அசோக் மித்ரா.**

*முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கு வங்கத்தை ஆண்டு கொண்டிருக்கும் 'இடது முன்னணி' யின் முதல் அமைச்சரவையில் (1977–80) நிதி அமைச்சராக இருந்தவர் அசோக் மித்ரா. மைய அரசில் பொருளாதார ஆலோசகுராகப் பணியாற்றியுள்ள இவர், ''எகனாமிக் அன்ட் பொலிடிகல் வீக்லி'' போன்ற ஆங்கில ஏடுகளில் கட்டுரைகள் எழுதி வருபவர். சி.பி.எம். கட்சியின் மீது இன்னமும் நம்பிக்கை வைத்திருக்கும் அசோக்மித்ரா, நந்திகிராமத்தில் சி.பி.எம். கட்சியின் குண்டர்படையும் போலீசும் நடத்திய கொடூரத் தாக்குதலையடுத்து 'ஆனந்தபசார்' பத்திரிக்கையில் (கடந்த 2008 ஏப்ரலில்) எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவத்தைக் கீழே தருகிறோம். நந்திகிராமம் பற்றி காழ்ப்புணர்வோடு நாம் எழுதுவதாக சி.பி.எம். அணியினர் கருதி வரும் வேளையில், அவர்களின் முகாமில் இருந்தே மனசாட்சி உள்ள ஒருவரின் உள்ளக் குமுறல் இது!*

கடந்த இரண்டு வாரங்களாக மேற்கு வங்க மாநிலத்தின்-நந்திகிராமத்தில் நடந்தவை பற்றி நான் ஏதும் சொல்லாமல் இருந்தேன் என்றால், அது நான் சாகும் வரை எனது மனதைப் பிடித்து உலுக்கிக் கொண்டு இருக்கும்; வேதனையால் துடித்துக் கொண்டு இருந்திருப்பேன். ஒரு காலத்தில் எனது தோழர்களாக இருந்தவர்களுக்கு எதிராக இப்போது நான் பேசிக் கொண்டிருக்கிறேன். அவர்களின் கட்சியும் அதன் தலைமையும்தான் கடந்த 60 ஆண்டுகளாக எனது ஆதர்சமாகவும் இலட்சியக் கனவின் மையமாகவும் இருந்தன.

ஆளுநர் விவகாரத்தில் இருந்து இக்கட்டுரையைத் தொடங்குவோம். ஆனந்த் பிரசாத் சர்மாவையோ, ராஜேஷ் வரையோ (அப்போது பிற மாநிலங்களில் ஆளுநர்களாக இருந்தவர்கள்) ஒப்பிட்டுப் பார்க்கும் எவருமே, எளிமையும் நேர்மையும் அறிவும்மிக்க கோபாலகிருஷ்ண காந்தியை ஆளுநராகப் பெற்றிருக்கும் மேற்கு வங்கம், கொடுத்துவைத்த மாநிலம்தான் என்பதை நிச்சயமாக ஒத்துக் கொள்வார்கள்.

ஆளும் கட்சியின், அதன் மையத்தலைமையின் அனுமதியின்பேரில்தான் கோபால கிருஷ்ண காந்தி அப்பதவிக்கு வந்தார் என்பதையும் சொல்லியாக வேண்டும். ஆனால், கட்சியால் எதிரி என வரையறுக்கப்படும் அளவிற்கு அவர் செய்த மிகப் பெரிய தவறு என்ன?

நந்திகிராமத்தில் இருந்து கட்டாயமாகத் துரத்தப்பட்டு கெஜூரி முகாமில் தங்க வைக்கப்பட்டவர்கள், வீடுகளுக்குத் திரும்பி வந்ததை சட்டவிரோதம் என்றும், மன்னிக்க முடியாததென்றும் ஆளுநர் கண்டித்த தாகச் சொன்னார்கள். ஆனால், அவர் அவ்வாறு சொல்லவில்லை. உண்மையில், அம்மக்கள் திரும்ப வரவழைக்கப்பட்ட விதத்தைத்தான் அவர் கண்டித்தார். அதனையும் கண்டன வார்த்தைகளால் குறிப்பட்டு அவர் கண்டிக்கவில்லை. இப்போதோ, அம்மக்கள் திரும்ப அழைக்கப்பட்டதன் பின்னணி அனைத்தும் ஊருலகுக் கெல்லாம் தெரியும்.

துரத்தப்பட்ட மக்களை அவர்களின் சொந்த வீடுகளில் குடியமர்த்தி அமைதிப்படுத்துவதற்கு கடந்த 11 மாதங்களில் அரசியல் தூது-சமரசம், நிர்வாக ஏற்பாடு போன்ற எண்ணற்ற வாய்ப்புகள் அரசுக்கு இருக்கத்தான் செய்தன. ஆனால், அவற்றை எல்லாம் விட்டுவிட்டுத் தொடர் மிரட்டல்கள், போலீசு நடவடிக்கை, துப்பாக்கிச் சூடு போன்றவற்றைச் செய்ததால் பரிதாபகரமான முடிவுதான் ஏற்பட்டது.

இருந்தபோதும், முயற்சித்துப் பார்க்க அரசுக்கு வேறு வழிகளும் இருந்தன. மூர்க்கத்தனமான துப்பாக்கிச் சூடு நடந்ததும், இறந்தவர்களுக்கும் காயமுற்றவர்களுக்கும் அரசு நிவாரணத் தொகையை உடனே வழங்கியிருக்க முடியும். வன்முறைக் குற்றங்களில் ஈடுபட்ட போலீசு துறை மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வாக்குறுதியாவது கொடுத்திருக்க முடியும். நாட்கள் பல கடந்தும் அரசு எதையுமே செய்ய வில்லை.



**அசோக் மித்ரா: சி.பி.எம்.இன் மனசாட்சி**

ஆனால், அரசின் அறிவிப்புகளோ, ''உஷ்! விசாரணை நடந்து கொண்டிருக்கிறது!'' (மராத்தி நாடகக் கலைஞர் விஜய் டெண்டுல்கரின் நாடகத் தலைப்பு) எனும் பாணியில்தான் இருந்தது. மம்தா பானர்ஜியை அழைத்து இந்தப் பிரச்சினையில் அவர் முன்வைக்கும் நிபந்தனைகளை விவாதிக்க, மிகவும் மூத்த அரசியல் தலைவர்தான் (ஜோதிபாசு) முன்முயற்சி எடுக்க வேண்டியிருந்தது. பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் பேரில் மேற்கொண்டு அரசு எதையும் செய்யவில்லை.

பார்வர்டு பிளாக் கட்சியின் மூத்த தலைவர் அசோக் கோஷ் முயற்சியால் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. ஆளும் கட்சியின் மறைமுக நிர்ப்பந்தங்கள் - மிரட்டல்களால் அதுவும் முடக்கப்பட்டது. இதற்கிடையில், நந்திகிராமத்தில் நிலவிய நிச்சயமற்ற சூழலை எதிர்க்கட்சிகள் தங்கள் ஆதாயத்துக்காகப் பயன்படுத்த ஆரம்பித்தன. பல்வேறு


படிப்பகம்

www.padippakam.com

வர்க்கங்களும், அமைப்புகளும் பலவண்ணக் கூட்டணி கட்டி அங்கே இயங்கி, பதற்றத் தீயைக் கொழுந்துவிட்டு எரிய வைத்துக்கொண் டிருந்தன. பதினோரு மாதங்களாக வீடிழந்த மக்களின், சொல்லொணா சோகத்துக்கெல்லாம் அரசுதான் நேரடிப் பொறுப்பாளி.

நாம் சற்றுப் பின்நோக்கிப் பார்ப் போம். மே.வங்கத்தில் நந்திகிராமம் சம்பவத்துக்கு முன்பே சிங்கூரில் ரத்தவெள்ளம் ஓடியது. இடது கூட்டணி அரசு நாட்டுடைமை யாக்கப்பட்ட தொழில்துறையை விரும்புவது கிடை யாது. அவர்கள் இம்மாநிலத்தில் தனி யார் தொழிற்துறையை நிறுவ மட்டும் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆகவேதான் தேசிய, சர்வதேசிய முதலாளிகளுக்காக நிலம் பறித்துத் தர உறுதிமொழிகள் தந்துள்ளனர்.

அவர்களின் தேர்தல் அறிக்கையி லேயே இதனைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதாலும், தேர்தலில் 235 தொகுதிகளை வென்றி ருப்பதாலும், இதற்கெனத் தனியாக தயாரிப்பு கள் எதனையும் செய்ய வேண்டி இருக்கவில்லை. திடீரென விவசாயிகளிடம், ''நிலத்தை விட்டு வெளியேறுங்கள்; எஜமானர்கள் அங்கே தொழிற்சாலைகளை நிறுவப் போகிறார்கள்'' என்று சொல்லப்பட்டது. சிங்கூரில் எழுந்த எதிர்ப்பு, மோதல்கள், அதன் விளைவாகச் சிந்திய இரத்தம் ஆகியவற்றில் இருந்து குறைந்தபட்சப் பாடம் கற்றிருந்தால்கூட, அரசால் நந்திகிராமத்தில் கவனமாகச் செயல் பட்டிருக்க முடியும். ஆனால் அதுதான் கிடையாதே! எப்போதும் போல அரசு திமிராகத்தான் நடந்து கொண்டது. கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள்கூட நந்திகிராமத்தில் எதிர்க்கட்சிகளே இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். எதிர்க்கட்சியினர் அப்பகுதியில் வளர்வதற்கு அரசே வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது. ஆளும் கட்சியின் மீது விசுவாசமாக இருந்த தொண்டர்கள், அரசின் முடிவை எதிர்த்துக் குரல் கொடுத்தவுடன் கட்சியை விட்டுத் துரத்தப்பட்டனர்.

பதினோரு மாதங்களாக அரசியல், நிர்வாகரீதியான மாற்றுக்களைப் பற்றி ஆராயாமலும் செயல்படாமலும் வாயை மூடிக் கொண்டது அரசு. சதித்திட்டம் ஒன்று புதிதாய்த் தீட்டப்பட்டது. போலீசு துறை அப்பகுதியில் செயல்படாமல் இருக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளதாக உள்துறை செயலாளர் மீண்டும் மீண்டும் கூறிவந்தார். ஆனால், மாநிலம் முழுவதி லுமிருந்து கூலிப்படை திரட்டப்பட்டது. எல்லாத் திசைகளிலி ருந்தும் ஆளும் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் நந்திகிராமத்தை முற்றுகையிட்டனர். பறவைகள், ஈ - காக்கை கள் உள்ளிட்டு, பத்திரிக்கையாளர்கள் எவரும் அம்முற்றுகையைத் தாண்டி அனுமதிக்கப்படவில்லை.

அடுத்து, ஆளும்கட்சியின் ஆயுதப் படை பொறுப்பேற்றுக் கொண்டு நந்திகிராமம் பகுதியில் நுழைந்து அப்பகுதிக்குத் திரும்ப வந்து குடியேறி யவர்களை எல்லாம் அடித்து நொறுக் கியது. வீடுகளைக் கொளுத்தியது. ஒட்டுமொத்தமாகப் பழிவாங்கும் வெறியில் நந்திகிராமத்திற்குள் இருந்த வர்களை எல்லாம் வெட்டித் தள்ளியது. அகதிகளாக மீண்டும் வெளியேறுபவர்களின் ஓலம் நந்திகிராமைச் சுற்றியுள்ள பகுதியெங்கும் எதிரொ லித்தது.



**கட்சிக் கொடியை கைக்குட்டையாக்கித் தலையிலே கட்டிக் கொண்டு சி.பி.எம். குண்டர்கள் நந்திகிராமத்தில் நடத்திய வெற்றி ஊர்வலம்.**

அரசுத்துறை செயலாளர்கள் மூலமாக ஆளுநருக்கு நடந்தவை எல்லாம் சொல்லப்பட்டிருக்கக் கூடும். அவரும் அமைச்சரவையைக் கட்டுப் படுத்தும் நாயகரிடம் அமைதியை நிலைநாட்டக் கோரியிருக்கக்கூடும். ஆனாலும் பயன் ஏதும் இல்லை. தொடரும் வன்செயல்களால் இரத்த ஆறு இன்னமும் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆளுநர், இச்சம்பவத்தைக் கண்டித்துப் பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டார். அவர் அதில் என்ன சொல்லியிருந்தார் என்பதோ, அவ்வாறு அறிக்கை விடுவது அரசியல் சாசனத்தின் வரையறைக்கு உட்பட்டதா என்பதோ எனக்குத் தெரியாது. ஆனால், மனிதத் தன்மையின் வரையறையை ஏற்றுக் கொண்ட எவருக்கும், இவ்வாறு அறிக்கை வெளியிட்டதில் வேறு கருத்து ஏதும் இருக்க முடியாது.

உள்ளபடியே இப்போதைய பிரச்சினை சிங்கூரும் நந்திகிராமும் மட்டுமல்ல. அது இன்னும் ஆழமானது. மிகவும் அபாயகரமானதும் கூட. தவறுகள் மீண்டும் மீண்டும் நிகழ்த்தப் படுகின்றன. ஒரு கணம் எண்ணிப்பாருங் கள். பெரும்பான்மை பலத்துடன் இடது முன்னணி வெற்றி பெற்று ஒன்றரை ஆண்டுகள்தான் ஆகின்றன. இக்குறு கிய கால இடைவெளியில்தான் எத்தனை மூர்க்கமான, முட்டாள்தனமான நடவடிக்கைகள்!

மாநிலத்தின் முழுக் கட்டுப்பாடும் நம்மிடம் இருக்கலாம். கிரிக்கெட் வாரியத்தின் தலைவர்கூட நமது கட்ட ளைக்கேற்பத் தேர்ந்தெடுக்கப்படலாம். நமது வேட்பாளர் தோல்வியடையும் போதெல்லாம், ''தீய சக்தியின் வெற்றி'' என்றும் ''தீய சக்தியை விரட்டி அடிப்போம்'' என்றும் சொல்வோம்.


படிப்பகம்

www.padippakam.com

ஆனால், சாதாரண மக்கள் மட்டுமல்ல; பொருளாதார சிந்தனையாளர்கள் கூட நந்திகிராமம், சிங்கூர் நிலப்பறி குறித்து வேறுபட்ட கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். "அவ்வாறு கருத்துரைப்பவர்களுக் கெல்லாம் அரசை நடத்துவது பற்றி என்ன தெரியும்? வெறும் புத்தகப் புழுக்கள்!" குறிப்பிடத்தக்க பொருளாதார நிபுணரும், கட்சித் தோழருமான பிரபாத் பட்நாயக்கின் ஆளுமையையும் இதே மாதிரிதான் அவமானப்படுத்தினர். நாம்தான் எல்லாம் தெரிந்த அரசாங்கம் ஆயிற்றே! கிரிக்கெட், கவிதை, நாடகம், சினிமா, நிலப்பறி மாயாஜாலம் என அனைத்தும் தெரிந்த அரசாங்கம், நம்முடையது! 235 சீட்டுகள் வென்ற நமக்கு அணுசக்தி ஒப்பந்தத்தின் நன்மை - தீமைகளைப் பற்றி எவரும் விளக்கவுரை நடத்த வேண்டுமா, என்ன? 1987-இல் ஜோதிபாசு தற்போதைய சட்டமன்ற வெற்றியைவிட அதிக இடங்களுடன் வெற்றி பெற்றிருந்தார். ஆனாலும் அவரிடமிருந்து இவ்வளவு திமிர் வெளிப்பட்டதில்லை.

இப்போது, திமிரோடு அரைவேக்காட்டுத்தனமும் சேர்ந்துள்ளது. பல பத்தாண்டுகள் கடந்த பின்னரும் மே.வங்கம் கல்வியில் பல மாநிலங்களைவிடப் பின்தங்கிய நிலையில்தான் உள்ளது. மைய அரசின் வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கான நிதி தடையின்றி வருகிறது. ஆனால், இங்கு நிர்வாக ரீதியான முன்முயற்சி ஏதுமில்லாததால் வேலையில்லாத் திண்டாட்டமும், பட்டினியும் அப்படியே இருக்கின்றன. மைய அரசு கோதுமையும் அரிசியும் வழங்கிட ஏற்பாடுகள் செய்திருந்தும், மாநில அரசு அவற்றைப் பெற்றுக் கொள்ளாததால், நடுத்தர மற்றும் ஏழை மக்களுக்கு ரேசனில் இவற்றை விநியோகிக்க முடியவில்லை. வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்போரின் பட்டியலில் கூட ஏகப்பட்ட குளறுபடிகளும் விடுபடல்களும் மலிந்துள்ளன. சிறுபான்மையினரின் முன்னேற் றத்திற்காக இம்மாநில அரசு எதையும் செய்யாமல் இருப்பதனை சச்சார் கமிட்டி அறிக்கையே பட்டியலிட்டுள்ளது.

மர்மமான முறையில் மாண்டு போன ரிஸ்வானூர் ரகுமான் விவகாரத் தையே எடுத்துக் கொள்வோம். போலீசு துறைத் தலைவரும் அவரது கூட்டாளி களும் உடனடியாக (பத்திரிக்கையாளர் சந்திப்பு நடந்த அன்றே) நீக்கப்பட்டிருந் தாலோ, அல்லது சி.பி.ஐ.க்கு விசாரணை மாற்றப்பட்டிருந்தாலோ மக்களின் கடுங்கோபத்தை ஓரளவிற்குத் தவிர்த் திருக்கலாம். ஆனால், நாம் காண்பதோ வேறு. இப்படி பல உதாரணங்களை அடுக்க முடியும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் இடது முன்னணி அரசு பதவி ஏற்றுக் கொண்ட காலகட்டத்தில், அது வெற்று அரட்டை அடிப்பதற்காக எழுத்தாளர் கட்டிடத்தில் (மே.வங்கத்தின் தலைமைச் செயலகம்) போய் உட்காரவில்லை. மாறாக,

# மார்க்சிஸ்டுகளா? ரவுடியிஸ்டுகளா?

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, (பு.ஜ.தொ.மு), வரும் ஜனவரி 25-ஆம்தேதியன்று சென்னை அம்பத்தூரில் "முதலாளித்துவ பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு" என்ற தலைப்பில் மாநாடொன்றை நடத்த திட்டமிட்டு, மக்களிடையே முழுவீச்சாகப் பிரச்சாரம் செய்து வருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (21.12.08) அன்று, இப்பிரச்சா ரத்தையொட்டி தோழர் ஜெயராமன், தோழர் வெற்றிவேல் செழியன் முதலான ஆறு பு.ஜ.தொ.மு. தோழர்கள் சென்னை பல்லாவரம் பகுதியில் பிரச்சாரம், நிதி வசூலுக்காக சென் றனர். கொடிகளோடு செஞ்சட்டையணிந்த தோழர்கள் அப்ப குதிக்கு சென்றதுமே, அவர்களை எதிர்கொண்ட அப்பகு தியைச் சேர்ந்த சி.பி.எம். செயலாளர் ஜீவா தலைமையிலான பத்துக்கும் மேற்பட்ட சி.பி.எம் (டைஃபி) கும்பல், தோழர்க ளுடைய சைக்கிளை எட்டி உதைத்து, கும்பலாகத் தாக்கி யுள்ளனர். தடுக்க முயன்ற தோழர் வெற்றிவேல் செழியனை ஒருவன் மிகக்கடுமையாக நெஞ்சில் தாக்கியுள்ளான். உருட்டுக் கட்டைக் கொண்டு ஒருவன் தாக்கியதில், தோழர் ஜெயராமனின் தோள்பட்டை இறங்கியுள்ளது.

உடனடியாக, நேரே பல்லாவரம் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க தோழர்கள் சென்றுள்ளனர். அங்கே, தோழர்கள் செல்வதற்கு முன்னரே, பல்லாவரம் பகுதி சி.பி.எம். புரோக்கர் ரணதிவே என்பவர், நக்சலைட்டுகள் தங்களைத் தாக்கி விட்டதாகப் பொய் புகார் கொடுத்திருந் தார். தோழர்களின் புகாரின்படி, தாக்கியவர்களை கண்டு பிடிப்பது சிரமம் எனக் கூறி, முதல் தகவல் அறிக்கையைப் பதிய மறுத்து விட்டது போலீசு.

அடித்து விரட்டினால் ஓடி விடுவார்கள் எனத் தப்புக் கணக்குப் போட்ட சி.பி.எம்; நிலைமை முற்றுவதை உணர்ந்து, சமாதானமாகப் போய் விடலாம் எனக் கூறி யுள்ளனர். குரோம்பேட்டையில் போலி கம்யூனிஸ்டுத் தொழிற்சங்கத்தைப் புறக்கணித்து, பு.ஜ.தொ.மு.வில் உணர்வுள்ள சி.பி.எம். அணிகள் இணைந்ததனால் ஏற்பட்ட எரிச்சலின் விளைவாகவே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

அதே நாளின் இரவில் சென்னை கோடம்பாக்கத்தில் சி.பி.எம்.மின் கலை இலக்கிய அமைப்பான த.மு.எ.ச. தனது மாநாட்டையொட்டி நடத்திய கலை இரவில், புதிய ஜனநா யகம், புதிய கலாச்சாரம் இதழ்களை விற்பனை செய்வதற்காக ஒரே ஒரு பு.ஜ.தொ.மு. தோழர் சாலையில் கடை பரப்பி வைத்திருந்தார். இரவு 12 மணிக்கு அங்கே வந்த பல்லாவரம் பகுதியைச் சேர்ந்த 10 டைஃபி 'குடிமகன்கள்' (சி.பி.எம். குண்டர்கள்) போதைத் தலைக்கேற, பொதுமக்கள் முன்னி லையிலேயே கெட்ட வார்த்தைகளால் ஏசி, கடையை எடுக்கச் சொல்லி காலித்தனம் செய்துள்ளனர். தோழர் கையி லிருந்த விலைவாசி உயர்வுக்கு எதிரான 300 துண்டுப் பிரசு ரங்களை பிடுங்கி, அங்கேயே தீக்கிரையாக்கியுள்ளனர்.

போலி கம்யூனிஸ்டுகளான சி.பி.எம் கட்சியினர் மாநிலத் திற்கு ஒரு வேசம் போடுவதாக பிற அரசியல் கட்சிகள் அவர்களை குற்றம் சாட்டுவது வழக்கம். ஆனால், எல்லா மாநிலங்களிலும் அவர்களிடம் காணப்படும் ஒரே ஒற்று மையான அம்சம், பொறுக்கித்தனம். வங்கத்தின் நந்தி கிராமம் முதல் தமிழகத்தின் காரப்பட்டு வரை தமது கொலைவெறியாட்டத்தை நடத்தி, தமக்கும் ஆர்.எஸ்.எஸ் -க்கும் கொடியின் நிறத்தில் மட்டுமே வேறுபாடு என்பதை நாள்தோறும் நிரூபித்து வருகின்றனர்.

பாசிச ஜெயாவுக்குப் பொருத்தமான கூட்டணிதான்!


- பு.ஜ.செய்தியாளர்கள், சென்னை.



படிப்பகம்

www.padippakam.com

மக்களுடன் இருந்து கொண்டு, அவர் களின் அறிவுரைகளைக் கேட்டு, அதற் கேற்ப அரசின் திட்டங்களைத் தீட்டுவ தாகத்தான் அதன் நோக்கம் இருந்தது. இதனை முன்வைத்தே பஞ்சாயத்து முறை மேம்படுத்தப்பட்டது. ஆனால், இப்போது அது செயலிழந்து விட்டது. பஞ்சாயத்துகள் ஜனநாயக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவை பரிதாபகரமான நிலையில்தான் இன்று உள்ளன. அவற்றுக்கு வந்து சேரும் கொஞ்ச நஞ்ச நிதியும் கூட முறையாகச் செலவிடப் படுவதில்லை.



சி.பி.எம். குண்டர்கள் கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாதம்: நந்திகிராமத்தில் எரிக்கப்பட்ட விவசாயிகளின் வீடுகள்.

வேதனைமிக்க உண்மைகளை இனிமேலும் தவிர்க்க முடியாது. ''நீங்கள் முன்பு எப்படி இருந்தீர்களோ, அப்படி இன்று இல்லை'' என்ற எஸ்.டி.பர்மனின் பிரபல சினிமா பாடல் வரிகளைப் போலத்தான், இன்றைய சி.பி.எம். கட்சியின் நிலைமை உள்ளது.

கட்சியில் இப்போது இருக்கும் உறுப்பினர்களில் 90 சதவீதம் பேர் 1977-க்குப் பின்னர் சேர்ந்தவர்கள். 70 சதவீதம் பேர் 1991-க்குப் பிறகு சேர்ந்தவர்கள். இவர்கள் எவருக்கும் கட்சியின் தியாக வரலாறு எதுவுமே தெரியாது. இவர்களைப் பொறுத்த அளவில் புரட்சிக்கான அர்ப்பணிப்பும் சோசலிசமும் வெறுமனே கதை யாடல்கள் மட்டுமே. மேம்பாடுதான் புதிய கொள்கையாகிப்போனதால், சுய மேம்பாட்டுக்காக மட்டுமே இவர்கள் கட்சியுடன் தம்மை இணைத்துக் கொள்கின்றனர். பெறுவதற்காகத்தான் வருகிறார்களே ஒழிய, இழப்பதற்காக அல்ல. இவர்கள் பல்வேறு தந்திரங் களைக் கற்றுக் கொண்டு அரசின் பல்வேறு சலுகைகளை அனுபவிக்க ஆளும் கட்சியுடன் ஒட்டிக் கொண்டுள்ளனர். தலைவர்களை வானளாவப் புகழ்ந்து தள்ளுவதுதான், சலுகைகளைப் பெறுவதற்கு இவர்கள் கையாளும் தந்திரங்களில் முதன்மையானது.

கட்சி முழுக்க துதிபாடிகளும் அரசவை விகடகவிகளும் நிரம்பியி ருக்கின்றனர். அதை விட சமூக விரோதிகளின் ஆதிக்கமும் கட்சிக்குள் பெருகி இருக்கிறது. பல்வேறு காரணங் களுக்காக ஏனைய கட்சிகள் சமூக விரோதிகளை வைத்துக் கொள்ளுவது வாடிக்கைதான். இருப்பினும், அங்கெல் லாம் அவர்கள் பின்னணியில்தான் இயங்குவர். தேவை ஏற்படும்போது மட்டும் அவர்கள் பயன்படுத்தப்படுவர். எழுபதுகளில் இத்தகைய சமூகவிரோதி களின் கூடாரமாக காங்கிரசுக் கட்சி இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதே கதிதான் ஏற்படப் போகிறது என அஞ்சுகிறேன்.

நெடுங்காலமாக கட்சியில் இருந்துவரும், பல்வேறு தியாகங்களைப் புரிந்த வயதான பல தோழர்கள் நம் பிக்கை இழந்து விரக்தியை நோக்கித் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் ஒரு வேளை கட்சிக்கு எதிராக ஒருங்கிணைந்த போராட்டம் ஒன்றை நடத்தி, அதனால் கட்சி அவர்களைத் தூக்கி எறிந்தால், கட்சியை மட்டும் நம்பி வாழ்க்கை நடத்தும் அவர்களின் கதி என்ன ஆகும்?

திரு.ஜோதிபாசுவுக்காக நான் வருந்துகிறேன். ஏனெனில் அவருடன் சேர்ந்து 1977, ஜூன் 21-இல் பதவி ஏற்றுக் கொண்ட இடது முன்னணி அரசின் 4 அமைச்சர்களில் உயிருடன் இருப்பது நான் மட்டுமே. அவுரங்கசீப் பால் சிறைவைக்கப்பட்ட ஷாஜஹான் போன்ற அவருடைய தற்போதைய நிலை என் இதயத்தையே கசிய வைக்கிறது. அவ்வப்போது அவர் சொல்லும் சின்னச்சின்ன அறிவுரைகளைக் கூட கட்சி மேலிடம் கேட்பதில்லை. அவரு டைய பேச்சு கட்சிக்கு உவப்பில்லாத போது கட்சிப் பத்திரிக்கைகளில் கூட அது வெளியாவதில்லை. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவர் கட்சி செயலாளர்களைச் சந்தித்து விட்டுப் படியிறங்கி வரும்போதெல்லாம், அவர் சம்பந்தமேயில்லாத ஒன்றைப் பேச வேண்டி இருக்கிறது. இன்று அவர் சொல்வது கூட, போனமுறை அவர் சொன்னதை மறுதலிக்கும் விதமாகத்தான் உள்ளது.

என்னுடைய அக்கறை எங்கும் விரவியதாக உள்ளது. மம்தா பானர்ஜி ஒருவர்தான் தற்போதைய ஆளும் கட்சிக்கு, பாதுகாப்பான இன்சூரன்சு. இடது முன்னணி அரசின் மீது எவ்வளவு தூரம் அதிருப்தி இருப்பினும், மம்தா பானர்ஜி பதவிக்கு வந்துவிடும் பயங்கரத்தைக் கற்பனை செய்யும் மக்கள், அப்பயங்கரத்தில் இருந்து தப்பிக்க இடது முன்னணியை ஆதரித்தாக வேண்டியிருக்கிறது. இருந்தபோதும், இடதுசாரித் தலைவர்களின் திமிர்த்தனமும் அரை வேக்காட்டுத்தனமும் எல்லை கடக்கும் போது, இரண்டு தரப்புக்குமிடையே எந்த வேறுபாட்டையும் மக்கள் காணமுடியாத நிலை ஏற்படும். அது இன்னமும் கூடுதலான பயங்கரத்தை — மம்தாவின் பாசிசத்தைக் கொண்டு வரும். மம்தாவின் பேச்சு, செயல்படும் முறை, திட்டம் அனைத்துமே பாசிசத்தின் கூறுகள்தான்.

இன்னமும் என்னுடைய கட்சிதான் என நான் மனதார நம்பிக் கொண்டிருக்கும் கட்சியின் மத்தியத் தலைமைக்கு விடுக்கும் தாழ்மையான முறையீடு இதுதான்: மாவோயிசத்தின் பயங்கரத்தைக் கண்டு நீங்கள் அஞ்சி நடுங்குகிறீர்கள். அந்த நடுக்கம், பாசிசத்தின் கழிவறைக்குள் மே.வங்கத்தைத் தூக்கியெறிய உங்களை நிர்ப்பந்தித்து விடும் என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். ●


படிப்பகம்

www.padippakam.com

# த.மு.எ.ச. மாநாடு:
# கோலிவுட்டை வளைக்க நடந்த கூத்து

## புரட்சிக்கு, கோடம்பாக்கத்தில் ஆள்பிடிக்கும் வேலையில் இறங்கியுள்ளது த.மு.எ.ச.

சென்னை-கோடம்பாக்கம் பகுதி முழுவதும் டிசம்பர் மூன்றாவது வாரத்தில், ''வேற்றுமையில் ஒற்றுமை; அதுவே நமது வலிமை'' என்ற சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. மைய அரசு தேசிய ஒருமைப்பாட்டுக்காக நடத்தும் பிரச்சாரமோ என்று நாம் கருதிக்கொண்டு அருகில் போய் பார்த்த பிறகுதான், அது சி.பி.எம். கட்சி சார்பு அமைப்பான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநாட்டு விளம்பரம் என்பது தெரிந்தது. மாநாடு நடைபெற்ற கோடம் பாக்கம் ராம் தியேட்டர் அரங்குக்கு உள்ளேயும் வெளி யேயும் கலை நுணுக்கம் மிக்க பல கருத்தோவியங்களையும், கவிதை வீச்சுக்களையும் பார்வைக்கு வைத்திருந்தனர்.

''எல்லாப் பேன்களையும் நசுக்கியாச்சு. அட்டைகளை?'' என்று அவர்களின் கவிதை தெருவெங்கும் கேள்விகேட்டது. தமிழகத்தையே உறிஞ்சும் அட்டையான பாசிச ஜெயாவோடு கூட்டணி கட்டியிருக்கும் சி.பி.எம். செயலாளர் என்.வரத ராசன் மட்டும் இதைப் பார்த்திருந்தால்.....?

இன்னொரு கருத்தோவியம் நடைபாதைப் பழவியாபாரி யுடன்; ''நேற்று வண்டியில் விற்றாய். இன்று கூடையில்; நாளை....? தூரத்தில் சிரிக்கும் வால்மார்ட்'' என்று சொன்னது. கேரள மாநிலத்தில் 'தோழர்களின்' ஆசியுடன் நூற்றுக் கணக்கில் திறக்கப்பட்டிருக்கும் 'ரிலையன்ஸ் பிரஷ்' நமது நினைவுக்கு வந்து தொலைத்தது.

தெருவெங்கும் வைத்தி ருந்த ஓவியங்களில் சிறுமிகள் கிழிந்த துணிகளுடன் ஏங்கிக் கொண்டிருந்தனர். அதே நேரத்தில், சென்னையின் ஜவுளிக்கடலான 'சென்னை சில்க்ஸ்'சின் முதலாளி நமது முற்போக்கு எழுத்தாளர்கள் ஊர்வழி போவதற்கென்று ஆளுக்கொரு கருப்பு 'டிராவல் பேக்' கொடுத்தி ருந்தார்.

தேர்ந்தெடுத்த முற் போக்குக் கவிதைகளைத் தியேட்டருக்கு உள்ளே கொடியில் துணி துவைத்துக் காயப்போடுவதைப் போலத் தொங்க விட்டிருந்தனர். அவற்றில் பிற்போக்குக் கழிசடை கண்ணதாசனும் இடம் பெற்றிருந்தார்.

அருகிலேயே ஒரு வண்ணப்படமும் இருந்தது. அதில் செங்கற்களைத் தலையில் சுமந்து கொண்டு நிற்கும் சித்தாள் பெண்மணியும், ''நம்பிக்கையோடு இரு. நாளை உன் கனவும் வீடாகும்'' என்ற வாசகமும் கீழே 'மராட்டிய வங்கி'யின் பெயரும் இருந்தன.

நன்கொடை தந்த வங்கியின் வீட்டுவசதிக்கடன் விளம் பரத்தையே இங்கு வைத்துவிட்டார்களோ என்ற மயக்கம் எழுந்தது.

அரங்க வாயிலில் நமது கண்ணில் பட்டதோ யுனைடெட் இன்சூரன்சு, பி.எஸ்.என்.எல்., ரெப்கோ வங்கி விளம் பரங்கள். இந்தியப் பொதுத் துறை நிறுவனங்கள் ஒன்று கூடி ஜனநாயகப் புரட்சியை நடத்த த.மு.எ.ச.வுக்குக் கை கொடுக்க முன்வந்துவிட்டதை நினைக்கும்போதே நமக்கு மெய் சிலிர்த்தது.

வாழ்த்துரை வழங்க சகல தரப்பிலிருந்தும் பிரதிநிதிகளை அழைத்திருந்தனர். மத்தியில் கூட்டணியை விட்டு விலகி விட்டாலும், பெருநிதி புழங்கும் மைய அரசின் நிறுவனமான செம்மொழி ஆய்வு மையத்துடன் த.மு.எ.ச. இணைந்து சங்க இலக்கியப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தி வருவதால், அந்த நன்றியுணர்வுடன் அந்த மையத்தின் முனைவர் ராமசாமி யையும் ஆசிவழங்க அழைத்திருந்தார்கள்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநில மாநாட்டில் கலந்து கொண்ட சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி (நடுவில்), மையக்குழு உறுப்பினர் உ.ரா.வரதராசன் (வலது) மற்றும் மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.ஏ. பெருமாள்.





படிப்பகம்

www.padippakam.com

இ.எம்.எஸ். நம்பூதிரிபாடின் முதல் 'கம்யூனிஸ்ட் கட்சி' அரசைக் கவிழ்த்ததில் அமெரிக்க கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் பங்கு பற்றிய புதிய நூலை அரங்குக்கு வெளியே விற்றுக்கொண்டிருந்த இவர்களே, சி.ஐ.ஏ.வின் பிரதியான போர்டு பவுண்டேசன் நடத்தும் அம்பேத்கர் ஆய்வு மையம் (பாளையங்கோட்டை நாட்டார் வழக்காற்றியல் மையம்) சார்பாக தர்மராஜனை ஆசிவழங்க அழைத்திருந்தனர்.

த.மு.எ.சங்கத் தலைவர் அருணன், சங்கத்துக்கும் கோடம்பாக்கத்துக்கும் உள்ள பாரம்பரியத்தை எளிமையாக விளக்கி மாநாட்டைத் தொடங்கிவைத்தார். மறைந்த கோமல் சுவாமிநாதன், சங்கத்துக்கும் சினிமாக்காரர்களுக்கும் பாலமாகத் திகழ்ந்தார் என்றார். என்ன இருந்தாலும் எழுத்தாளர் அல்லவா? புரோக்கர் வேலைன்னு மக்கள் மொழியில் கொச்சையாகவா சொல்ல முடியும்? ''கோமலுக்குப் பின்னர் சினிமாவில் இருப்பவர்கள் நம்மோடு நேசத்தோடு இருக்கிறார்கள். நம்ம செயலாளரோட கதை கூட படமாக்கப்பட்டு வெற்றிநடை போடுகிறது'' என்று அவர் சொன்னதும் அரங்கமே, கைதட்டலால் அதிர்ந்து போனது.

கருத்து வேறுபாடுகளையும் அனுமதிக்கும் அமைப்பு இது எனக் காட்டுவதாக, ''மும்பையில் தீவிரவாதத்துக்கு எதிராகச் சண்டையிட்டு மடிந்தவர்களுக்காக நாம் மெழுகுவர்த்தி கொளுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், நாட்டுக்காகத் தினமும் சாக்கடையில் இறங்கி விஷவாயு தாக்கிச் சாகின்றவனை கவனக்குறைவால் இறந்ததாகச் சொல்லுகிறோம்'' என்று மெழுகுவர்த்தி கொளுத்திய சி.பி.எம். கட்சியைக் கண்டித்தார், ஆதவன் தீட்சண்யா. அடுத்து அவர், நந்திகிராமில் தமது கட்சி செய்த படுகொலையைச் சாடிவிட்டு, அங்கே கொல்லப்பட்டவர்களுக்கு மெழுவர்த்தி ஏற்றச் சொல்லுவார் என்று எல்லோரும் எதிர்பார்த்திருக்க, அதிலிருந்து ஒரே தாவாய்த் தாவி விளிம்புநிலை மனிதர்களான அரவாணிகள் பற்றியும் உதிரிகள் பற்றியும் நாம் அனுதாபம் கொள்ளவேண்டியதன் அவசியத்தைச் சொல்லிப் போய்விட்டார்.

தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் சம்பத், ''வன்கொடுமைக்கு எதிராகப் புகார் கொடுத்தால் மேல்சாதியினர் உடனே 'கௌன்டர் பெட்டிசன்' (எதிர் மனு) போடுகின்றனர். ''கௌன்டர்'' என்று நான் குறிப்பிடுவதை தயவு செய்து கோவைப் பகுதி தோழர்கள் தவறாக எடுத்துக் கோபித்துக் கொள்ளவேண்டாம்'' என்று இன்னமும் கவுண்டர்களாக இருக்கும் கோவைத் தோழர்களைக் கேட்டுக் கொண்டார்.

மாநாட்டின் மைய நோக்கங்களாக மதவெறி எதிர்ப்பு, தமிழ் மொழி வளர்ச்சி, பெண் விடுதலை, தலித் விடுதலை, ஏகாதிபத்திய எதிர்ப்பு என முன்னர் அறிவித்திருந்தனர். இன்றைக்கு உழைக்கும் மக்களை ஒன்றுபடவிடாமல் முனைப்பாக இயங்கி வருவது இந்துவெறிப் பாசிசம்தான் என்பதை வரையறுக்காமல், யார் மனமும் நோகாதபடி மொன்னையாக மதவெறி எதிர்ப்பு என முதலில் சொன்னவர்கள், சென்னை-போரூரில் இந்து முன்னணியினரிடம் அடிவாங்கி வந்தது நினைவுக்கு வந்ததாலோ என்னவோ, அதனையும் மாற்றி ''வேற்றுமையில் ஒற்றுமை'' என்று சொல்லி விட்டார்கள். கூட்டத்தில் பேசிய ஓர் எழுத்தாளரும் ''இந்தியாவில் சமீபகாலமாக மதவெறியினால் மாண்டு போகிறவர்கள் அதிகமாகி விட்டனர்'' என்று வருத்தப்பட்டார்.

எந்த மதவெறி என்று சொல்லவும் கூச்சம். இறுதியாக மதவெறியை ஒழிக்க காந்தி கொலை செய்யப்பட்ட ஜனவரி 30-ஐ, ''மதவெறி பயங்கரவாத எதிர்ப்பு நாளாக''க் கடைப்பிடிப்பதெனத் தீர்மானித்தனர்.

போகிறபோக்கில் புஷ் மீது காலணிகள் வீசப்பட்டதைப் பற்றிப் பேசிக் கைதட்டல் வாங்கிக் கொண்டதைத் தவிர, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம் என எதையும் அறிவிக்கவில்லை. கோக்கோ கோலா விளம்பர நாயகன் அமீர்கானை மாநாட்டுக்கு அழைத்து வருவதாகத்தான் முதலில் திட்டம் இருந்தது என்பதில் இருந்தே, இவர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பின் தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

வர்க்கப் போராட்டத்தைச் சிதைத்து வருவது பற்றி எந்த ஒருவிமர்சனமும் இல்லாமல், தலித்தியமா அதையும் சேர்த்துக்குவோம்; பெண் உடலை, காமத்தை வெளிப்படையாகப் பேசுவதும், ஓரினப்புணர்ச்சி மூலம் பெண்விடுதலை என்றும் பேசும் கழிசடை பெண்ணியவாதம் மேலெழுந்து வந்தால் அதையும் சேர்த்துக்குவோம்; இதுதான் த.மு.எ.ச.வின் கொள்கையாக உள்ளது.

த.மு.எ.ச. செயலாளர் ச.தமிழ்ச்செல்வன் எழுதியிருக்கும் 'ஆண்களுக்கான சமையல் குறிப்பு' நூலில் 'மிச்சம் மீதியாகும் எல்லாக் காய்கறிகளையும் பருப்பையும் அரிசியையும் ஒன்றாகக் கலந்து தயாரிக்கும் கதம்பக் கூட்டுச் சோறு' பற்றிய சமையல் குறிப்பு ஒன்று உண்டு. அதே சமையல் குறிப்பை மாநாட்டுக்கும் பொருத்திப் பார்த்து கலவையான கொள்கைக் கூட்டு ஒன்றைச் சமைத்திருக்கிறார்கள். பத்தியம் கருதியோ என்னவோ மார்க்சியப் பார்வையை அஞ்சறைப் பெட்டிக்குள் மறக்காமல் ஒளித்து வைத்து விட்டார்கள்.

இந்த மாநாட்டில் த.மு.எ.ச. என்ற பெயரை, ''தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் - கலைஞர்கள் சங்கம்'' என மாற்றி இருக்கின்றனர். இதை மனதில்வைத்துத்தான் பொன்னீலன் தனது வாழ்த்துரையில் 'நாம் ரொம்பப் பெரியதாய் வளர்ந்திருக்கிறோம்' என்று மெய்சிலிர்த்தாரோ!

இலட்சக்கணக்கில் செலவு செய்து கோடம்பாக்கத்தில் கூட்டப்பட்ட மாநாட்டின் உண்மையான நோக்கம் என்ன என்பதை 'இப்போது சினிமாக் கலைஞர்கள் பலரும், இயக்குநர்கள் பலரும் நம்மோடு வெகு நெருக்கமாயிருப்பதைப் பார்க்கும்போது நாம் எடுத்த முடிவு சரியானதுதான் என்பது உண்மையாகி இருக்கிறது' எனத் தமிழ்ச்செல்வனும், 'கோடம்பாக்கத்துக் கலைஞர்கள் பெருவாரியாக எங்கள் அமைப்பில் இணைய வேண்டும்' என நன்மாறனும் இறுதி நாளில் குறிப்பிட்டனர். மேலும், அமைப்பின் பெயரில் கலைஞர்களையும் சேர்த்துக் கொண்டு விட்டதால், புரட்சிக்கு கோடம்பாக்கத்தில் ஆள்பிடிக்கும் வேலையில் தீவிரமாக இறங்கப் போகிறார்கள். இனிவரும் கலை இரவுகளில் விஜய் முதல் நமீதா வரை பலரும் பங்கேற்கலாம். இனி, அடுத்த கலை இரவு எங்கே இருக்கும்? ஏவிஎம் ஸ்டுடியோவிலா?

இருந்தாலும், த.மு.எ.க.ச.வின் இந்தத் திட்டம் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதைப் போலத்தான். 35 ஆண்டுகளுக்கு முன்னால் இதே வேலையை வெகு எளிதாகச் செய்துவிட்டார் போலி கம்யூனிசத் தலைவரான கல்யாணசுந்தரம். முன்னணி நடிகரான எம்.ஜி.ஆரை வளைத்துப் போட்டு, அவரையே புரட்சித் தலைவராக்கி விட்டார். இதற்காக அவர் மாநாடோ, கலை இரவோ நடத்தவில்லை.

• அழகு


படிப்பகம்

www.padippakam.com









## ஜார்ஜ் புஷ்ஷுக்குச் செருப்படி!

# அமெரிக்க ஆதிக்கத்தின் மேல் விழுந்த இடி!

**விடுதலை வேட்கை சாமானிய மனிதனைக்கூட மாவீரனாக்கும் என்பதை நிரூபித்த வரலாற்றுச் சம்பவம்.**

**டி**சம்பர் 14, 2008 நள்ளிரவு நேரத்தை ஈராக்கும், உலகமும் அவ்வளவு எளிதாக மறந்து விடாது. அன்றுதான், ஈராக் மக்களுக்கு ''ஜனநாயகத்தை'' வழங்கியிருப்பதாகச் சொல்லிக் கொண்டு திரியும் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் ஜூனியருக்கு ஈராக் மக்களின் சார்பாக, அந்நாட்டைச் சேர்ந்த முந்தாஸர் அல்-ஜெய்தி என்ற பத்திரிகையாளர் செருப்படி கொடுத்தார்.

அல் ஜெய்தி வீசிய செருப்பு புஷ்ஷைத் தாக்காமல் குறித் தவறிச் சென்றிருக்கலாம். ஆனால், அதற்காக யாரும் வருத்தப்படவில்லை. புஷ்ஷை நோக்கி அடிப்பது போல ஒருவரது கை நீண்டிருந்தால்கூட உலகம் மகிழ்ந்திருக்கும். அந்தளவிற்கு அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் ஈராக் மக்களாலும், பெரும்பாலான உலக மக்களாலும், ஏன் அமெரிக்க மக்களாலும் வெறுக்கப்படுபவர் என்பது ஊரறிந்த உண்மை.

ஈராக் மக்கள் அல் ஜெய்தியைக் கதாநாயகனாகக் கொண்டாடுகிறார்கள். அவரை விடுதலை செய்யக் கோரி ஈராக்கில் ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. பல நாடுகளில் அல் ஜெய்தியின் வீரத்தைப் பாராட்டிக் கொண்டாட்டங்கள் நடக்கின்றன. இன்று இணையதளத்தில் பிரபலமான விளையாட்டு எது தெரியுமா? ஜார்ஜ் புஷ்ஷின் உருவத்தைச் செருப்பால் அடிக்க வேண்டும். விளையாடுபவர் குறி தவறாமல் அடிக்க அடிக்க அவர் பக்கம் புள்ளிகள் ஏறிக் கொண்டே போகும். இவ்விளையாட்டில் வென்றால் ''ஆம், உங்களால் முடியும்!'' என்ற பாராட்டு உங்களுக்குக் கிடைக்கும். இந்த செருப்படியை உலகமே கொண்டாடுகிறது என்பதற்கு இவையெல்லாம் சாட்சியங்கள்.

அல் ஜெய்தியின் செயலை நாம் அமெரிக்க மேலாதிக்கத்தின் மீது விழுந்த அடி என்கிறோம். ஆனால், புஷ்ஷோ அத்தாக்குதலை மலிவான விளம்பரம் தேடிக் கொள்ளும் முயற்சி எனக் கொச்சைப்படுத்தி, தான் பட்ட அவமானத்தைத் துடைத்துக் கொள்ள முயலுகிறார்.

அல் ஜெய்தி புஷ்ஷை நோக்கித் தனது ஷூவை முதன்முறை வீசியபொழுது, ''இது ஈராக்கியர்கள் தரும் பரிசு; உன்னை வழியனுப்ப வைக்கும் முத்தம் இதுதான், நாயே!'' என முழக்கமிட்டுள்ளார். இரண்டாம் முறை ஷூவை வீசிய பொழுது, ''கைம்பெண்கள், அநாதைகள் மற்றும் ஈராக்கில் கொல்லப்பட்டவர்களின் சார்பாக இது!'' என முழக்கமிட்டுள்ளார். மலிவான விளம்பரம் தேடிக் கொள்பவனின் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளா இவை? அல் ஜெய்தி தனது தொலைக்காட்சி நிறுவனத்திற்கு செய்திகளைத்



படிப்பகம்

www.padippakam.com

தொகுத்து வழங்கும்பொழுது, ''ஆக்கிரமிக்கப்பட்ட பாக்தாத்திலிருந்து, அல் ஜெய்தி'' என்றுதான் குறிப்பிடுவாராம். அந்தளவிற்கு அவரது மனத்தில் ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு, காயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இது மட்டுமா? இந்தக் 'குற்றத்திற்கு' அல் ஜெய்திக்கு ஏழு ஆண்டுகள் தண்டனை கிடைக்கக் கூடுமாம். இதற்காக அவரோ அவரது குடும்பத்தினரோ வருத்தப்படவில்லை. மலிவான விளம்பரம் தேடிக் கொள்பவன் சிறை, தண்டனை என்றவுடனேயே, மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு புஷ்ஷின் காலில் விழுந்திருப்பான்.

அடிமைத்தனத்திற்கு எதிராக, விடுதலைக்காகப் போராடுபவர்களை மலினப்படுத்துவது ஆதிக்கவாதிகளின் அற்பக்குணம். அந்த வகையில்தான் புஷ்ஷின் விமர்சனத்தையும், அல் ஜெய்தி மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டதாக ஈராக் அரசு பிரச்சாரம் செய்து வருவதையும் பார்க்க முடியும்.



ஈராக் விடுதலைப் போர் ஈன்றெடுத்த வீரன் முந்தாஸர் அல்-ஜெய்தி.

இத்தாக்குதலை ஈராக்கில் சுதந்திரம் இருப்பதன் அறிகுறி எனக் கூறிச் சமாளித்துள்ளார், புஷ். முட்டாள் புஷ்ஷின் வாயிலிருந்து விழுந்த ''அறிவார்ந்த'' வார்த்தைகள் இவை. ஆஹா! ஈராக்கில்தான் எப்பேர்பட்ட ஜனநாயகம் நிலவுகிறது! புஷ்ஷை நோக்கி செருப்புகள் பறந்தவுடனேயே மெய்க்காப்பாளர்கள் அல் ஜெய்தியின் மீது பாய்ந்து, அவரைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போனார்கள். புஷ், பத்திரிகையாளர்கள் மத்தியில் சுதந்திர சமூகம் குறித்துக் கதையளந்து கொண்டிருந்தபொழுது, ஈராக் போலீசார் அல் ஜெய்தியை அடிக்கும் ஓசையும், அத்தாக்குதலில் காயமுற்ற அல் ஜெய்தியின் ஓலமும் அனைவரின் காதுகளிலும் விழுந்தது. ''ஈராக்கிற்கு ஜனநாயகத்தைக் கொண்டு வந்து விட்டதாக கூறும் புஷ் அவர்களே, உங்கள் வார்த்தை உண்மையானால், அல் ஜெய்தியை உடனே விடுதலை செய்யுங்கள்'' எனக் கோரி பத்திரிகையாளர்கள் உள்ளிட்டு, பல தரப்பினரும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஈராக்கில் உள்ள அமெரிக்க அடிவருடி அரசாங்கமோ அல் ஜெய்தியை எப்படியாவது தண்டித்துவிட வேண்டுமெனக் கருவிக் கொண்டிருக்கிறது.

முந்தாஸர் அல்-ஜெய்தியின் நண்பரின் மகன், அவர் அணிந்திருந்த ஷூக்களைப் பொதுமக்களுக்குக் காண்பிக்கிறார்.



ஈராக்கிற்கு விருந்தினராக வந்த அடுத்த நாட்டின் அதிபர் மீது செருப்பை வீசலாமா? எனப் பதைபதைத்து, இச்சம்பவத்தைக் கண்டித்திருக்கிறார்கள், சில கனவான்கள். ஐயா, கனவான்களே, உங்கள் வீட்டுக்குள் ஒரு திருடன் புகுந்துவிட்டால் அவனைத் துரத்தியடிக்கத் தடியைத்தானே தேடுவீர்கள். அமெரிக்க அதிபர் புஷ் நீங்கள் 'கருதுவது' போல விருந்தினன் அல்ல; ஈராக்கின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையடிக்கப் புகுந்திருக்கும் திருடன். அதற்காக, கடந்த ஐந்தாண்டுகளில் 12,97,997 ஈராக்கியர்களைக் கொலை செய்தவன். அந்த பசுத்தோல் போர்த்திய புலியைத் துரத்தியடிக்க தடியைத் தூக்கிக் கொண்டு போனால் பாதுகாப்பு அதிகாரிகள் பிடுங்கிக் கொண்டு விடுவார்கள் என்பதால்தான், அல் ஜெய்தி சமயோசிதமாகத் தனது ஷூவையே ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டார். வல்லவனுக்கு பூட்ஸும் ஆயுதம்!

அல் ஜெய்தி புஷ்ஷைக் கொன்றிருந்தால், மன்மோகன் சிங் போன்ற புஷ்ஷின் அடிவருடிகள் அந்தப் போர்க் குற்றவாளியைத் தியாகியாக்கிப் புகழ்ந்து தள்ளியிருப்பார்கள். ஆனால், செருப்படி வாங்கிக் கட்டிக்கொண்ட புஷ்ஷுக்கு ஆறுதல் சொல்லவும் முடியாது; அவரது 'சகிப்புத் தன்மையை'ப் புகழவும் முடியாது. அதனால் இந்த அவமானத்தை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கிறார்கள். குண்டு வீச்சில் இருந்து தப்பிக்க இரும்புக் கவசம் மாட்டிக் கொள்ளலாம். ஆனால், செருப்பு வீச்சில் இருந்து எப்படித் தப்புவது? இந்தப் பயம்தான் இவர்களை ஆட்டிப் படைக்கிறது.

ஈராக்கில் செருப்படி வாங்கிக் கொண்டு ஆப்கானிஸ்தானுக்குப் பறந்து வந்த புஷ், அங்கும் பத்திரிகையாளர்களைச் சந்தித்து பிரியாவிடை பெற்றுக் கொண்டார். காபூல் நகரத்தில் நடந்த அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பத்திரிகையாளர்கள் ஷூவைக் கழட்டி வைத்துவிட்டுக் கூட்டத்துக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்களாம்!

எத்தனை பாதுகாப்பு வளையத்திற்குள் நின்று கொண்டாலும் விடுதலைக்குப் போராடும் மக்களின் குறியிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களும் அவர்களது எடுபிடிகளும் தப்ப முடியாது என்பதற்கு இச்சம்பவம் இன்னுமொரு சான்று. ''உங்களுக்கு ஒவ்வொரு முறையும் அதிருஷ்டம் அடிக்க வேண்டும்; எங்களுக்கு அதிருஷ்டம் ஒருமுறை வாய்த்தால் போதும்'' என ஒரு போராளி கூறியிருப்பது கவித்துவமான உண்மை. அதை உலகுக்கு உணரச் செய்த முந்தாஸர் அல் ஜெய்தியின் வீரத்திற்கும், அவருக்குத் தக்க சமயத்தில் ஆயுதமாகப் பயன்பட்ட அந்த 10-ஆம் நம்பர் ஷூக்களுக்கும் நமது நன்றி உரித்தாகுக!

● குப்பன்


படிப்பகம்

www.padippakam.com

# ஜார்ஜ் புஷ்ஷுக்குச் செருப்படி!

# ஊரெங்கும் கொண்டாட்டம்!

**மு**ந்தாஸர் அல் ஜெய்தி, ஈராக்கில் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுக்குக் கொடுத்த செருப்படி உலகெங்கிலுமுள்ள புரட்சிகர-ஜனநாயக சக்திகளுக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளிகளுக்கும் சொல்லொணா உற்சாகத்தைத் தந்துள்ளது. புரட்சிகர-ஜனநாயக சக்திகள் இச்செருப்படியை அமெரிக்க காலனியாதிக்கத்தின் மீது விழுந்த அடியாகவே மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து கொண்டாடி வருவதோடு, முந்தாஸர் அல் ஜெய்தியை விடுதலை செய்யவும் கோரி வருகின்றனர். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்வின் அதிர்வுகளைத் தமிழகத்திலும் காண முடிந்தது.

**திருச்சியில்** மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்கள், புஷ் மீது செருப்பு வீசப்பட்டதைக் கேள்விப்பட்டவுடனேயே, 15.12.2008 அன்று மதியம் 2.30 மணியளவில், 20-க்கும் மேற்பட்ட தோழர்கள் மையப் பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகே கூடி, பட்டாசு வெடித்து, ''போர்வெறியன் புஷ்ஷைச் செருப்பால் அடித்தது சரியே'' என முழக்கமிட்டுப் பிரச்சாரம் செய்தனர். ''போர்வெறியன் புஷ்ஷுக்குச் செருப்படி'' என அட்டையில் பெரிதாக எழுதி வைத்துப் பிரச்சாரம் செய்தது, சாலையில் வருவோர் போவோர் அனைவருக்கும் நடந்த விசயத்தை நெத்தியடியாகத் தெரிவிக்கும் விதமாக அமைந்தது. தோழர்கள் மழையினையும் பொருட்படுத்தாமல் பிரச்சாரம் செய்தது மக்களின் கவனத்தையும் எளிதாக ஈர்த்தது.

மேலும், அப்பகுதியில் பேருந்துக்குக் காத்துநின்ற பயணிகள் அனைவருக்கும் கேக் கொடுத்துத் தோழர்கள் இந்நிகழ்வைக் கொண்டாடினர். மேட்டுக்குடிப் பெண்கள் தான் கேக்கை எடுத்துக் கொள்ளாமல் கலவரமடைந்தார்களேயொழிய, உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், மாணவர்கள், பேருந்து நடத்துநர்கள் அனைவரும் தாமாகவே முன்வந்து கேக்கை எடுத்துக் கொண்டு இக்கொண்டாட்டத்தில் பங்கு கொண்டனர். இப்பிரச்சாரத்தைத் தடுக்க முனைந்த போலீசாரிடமும் கேக்கைக் கொடுத்ததும், அவர்கள் செய்வதறியாது திகைத்து நின்று விட்டனர். போலி கம்யூனிஸ்டுகள்கூட கண்டு கொள்ளாத இந்நிகழ்வை, ம.க.இ.க., முன்முயற்சியோடு மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ததை ''தமிழ் சுடர்'' என்ற நாளேடு செய்தியாக வெளியிட்டது.



திருச்சியில்...

**கோவையில்** மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி மற்றும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து 20.12.2008 அன்று ஒண்டிப்புதூர் சுங்கம் திடலில் பட்டாசு வெடித்து, மக்களுக்கு இனிப்பு வழங்கிக் கொண்டாடியதோடு, ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இச்சம்பவத்தின் முக்கியத்துவம் குறித்து பிரச்சாரமும் செய்தன. இப்பிரச்சாரத்தில் கோவை நகர ம.க.இ.க. செயலர் தோழர் மணிவண்ணன் உரையாற்றினார்.

**கரூரில்** புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் ''அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்குச் செருப்படி'' எனத் தட்டிகளில் எழுதி வைத்துக்கொண்டு, பேருந்து நிலையத்தின் மையத்தில் நின்றபடி மக்களுக்கு இனிப்புகளை வழங்கிக் கொண்டாடினர். அப்பேருந்து நிலையத்தைச் சேர்ந்த கடைக்காரர்கள் தாமாகவே முன்வந்து தோழர்களிடம் பணத்தைக் கொடுத்து, இன்னும் இனிப்பு வாங்கி மக்களுக்குக் கொடுக்குமாறு கோரி உற்சாகப்படுத்தினர்.

**சென்னையில்** இப்புரட்சிகர அமைப்புகள் புஷ்ஷுக்கு விழுந்த செருப்படியை அமெரிக்கக் காலனி ஆதிக்கத்தின் மீதே விழுந்த செருப்படியாகச் சித்தரித்தும், முந்தாஸர் அல் ஜெய்தியின் வீரத்தைப் பாராட்டியும் நகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டாடியிருந்தனர்.

இந்நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் முன்முயற்சியோடு எடுத்த இவ்வியக்கம், அமெரிக்க மேலாதிக்கத்தை எதிர்ப்பதில் தமிழகம் பின்தங்கிப் போய்விடவில்லை என்பதைப் பறைசாற்றுவதாக அமைந்தது.

– பு.ஜ. செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் முதலாளித்துவ பயங்கரவாதம்!



தீ 'விபத்தில்' பலியான நாகவேணி.

ஓசூர்-சிப்காட் பகுதியில், பேடர்பள்ளி அருகே டி.வி.எஸ். நிறுவனத்துக்கு உதிரி பாகங்களைத் தயாரிக்கும் ராஜ்சிரியா என்ற ஆலை உள்ளது. இவ்வாலையில் நீண்ட காலமாகப் பணியாற்றும் தொழிலாளிகளுக்கு கூட வேலை நிரந்தரமோ, அடையாள அட்டையோ, சட்டரீதியான சலுகைகள்-உரிமைகளோ கிடையாது. எவ்வித உரிமைகளு மின்றி தொழிலாளிகளைக் கொத்தடிமைகளாக்கிச் சுரண்டி, இவ்வாலை இன்று 4 பிரிவுகளைக் கொண்ட பெரிய ஆலையாக வளர்ந்துள்ளது.

இவ்வாலையில் கடந்த நவம்பர் 19-ஆம் தேதியன்று கொதிகலனில்(பாய்லர்) தீ விபத்து ஏற்பட்டு, பின்னர் பேரொ லியுடன் கொதிகலன் வெடித்துச் சிதறி, அருகே பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளிகளின் உடலில் தீப்பற்றி எரியத் தொடங்கியது. நாகவேணி என்ற பெண் தொழிலாளி அலறிய படியே, உடலெங்கும் தீப்பற்றியெரிய ஆலைக்கு வெளியே ஓடிவந்து விழுந்து துடித்தார். இந்த விபத்தினால் ஆலையின் மேற்கூரையே பிய்த்தெறியப்பட்டுள்ளதால், இங்கு வேலை செய்த தமிழ் தெரியாத அசாமிய, கன்னட கூலித் தொழிலாளி களின் நிலைமை என்னவானது என்றே தெரியவில்லை.



இவ்விபத்தையே மூடிமறைக்க எத்தனித்த நிர்வாகம், தீய ணைப்பு வண்டி வந்தபோது, குற்றுயிராகக் கிடந்த தொழிலா ளிகளை கழிவறைக்குள் அடைத்து வைத்தது. பின்னர், தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்து, வேறெந்த மருத்துவ-நிவாரண உதவியுமின்றி வேலையிலிருந்து விரட்டியடித்தது. படுகாயமடைந்த நாகவேணி, உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைக் கண்ட தொழிலாளர்களும் உள்ளூர் மக்களும் ஆலை நிர்வா கத்துடன் சண்டையிட்ட பின்னர், அவரை பெங்களூரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தது. ஆனாலும் மருத்துவச் செலவுகளை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளவில்லை. 27 நாட்கள் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நாகவேணி, கடந்த டிசம்பர் 16-ஆம் நாள் மாண்டு போனார்.

இலாபவெறி பிடித்த ராஜ்சிரியா ஆலை நிர்வாகம் நடத்திய இப்படுகொலைக்கெதிராக இப்பகுதியில் இயங்கும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி மக்களை அணி திரட்டியது. டிசம்பர் 17-ஆம் தேதி ஆலை வாயில் முன்பு தொழிலாளர்களும் பகுதிவாழ் மக்களும் பெருந்திரளாகக் குவியத் தொடங்கியதும், போலீசின் உதவியோடு, விதவை யான நாகவேணியின் இரு குழந்தைகளுக்கும் சேர்த்து ரூ. 50,000/- நிவாரணமாகத் தருவதாகக் கூறியது. ஓட்டுக் கட்சிப் பிரமுகர்களும் சில பிழைப்புவாத மனித உரிமை அமைப்புகளும் கட்டப் பஞ்சாயத்து நடத்தி, போலீசை வைத்து மிரட்டினர். இதனை அம்பலப்படுத்தி பு.ஜ.தொ.மு. தோழர்கள் போராடியதும் பின்வாங்கிய போலீசு, அதிகாலை 3 மணிவரை இழுத்தடித்து, நாகவேணியின் உறவினர்களை மிரட்டி, உடலை அங்கு கொண்டு வந்து கிடத்தி விட்டுச் சென்றது.

மறுநாள் காலை இறுதி ஊர்வலத்துக்கு பு.ஜ.தொ.மு. வினரும் தொழிலாளர்களும் செங்கொடிகளுடன் அணிதிரள் வதைக் கண்டு பீதியடைந்த போலீசு, பெரும் படையுடன் வந்து "கொடி-பேனர்கள் கூடாது; மீறினால் கைது செய்வோம்" என்று மிரட்டி அச்சுறுத் தியது. பு.ஜ.தொ.மு. தோழர் பரசுராமன் மற்றும் நிவாரணம் கோரிப் போராடியவர்கள் மீது பொய்வழக்கு சோடித்துள்ளது. இனி யாரும் இதுபோல் தொழிலாளியின் உரிமைக் காகப் போராடக்கூடாது என்று போலீசும் முதலாளிகளும் விடுத்துள்ள எச்சரிக்கைதான் இது.

இதுதான் முதலாளித்துவ பயங்கரவாதம். ஓசூர்-சிப்காட் பகுதியில் கொத்தடிமைகளாக உழலும் தொழிலாளிக்கும், நெடுஞ் சாலையில் லாரியில் அடிபட்டுச் சாகும் நாய்க்கும் எந்த வேறுபாடும் இல்லாமல் போய்விட்டது. இப்பகுதியில் விபத்தில் பலியாகும் தொழி லாளியின் உடலை இரகசியமாகப் புதைத்துவிட்டு, 'காணாமல் போய்விட்டார்' என்று ஆலை நிர்வாகங்கள் கைவிரிக்கின்றன. முட்புதர்களில் அனாதைப் பிணங்கள் கண்டறியப்படுகின்றன. போலீசாரோ, ஆலை நிர்வாகத்தின் அடியாட்களாகச் செயல்படுகின்றனர்.

தொடரும் இப்பயங்கரவாத கொடுமைக்கு எதிராக துண்டுப் பிரசுரம்-சுவரொட்டிகள் மூலம் பிரச்சார இயக் கத்தை மேற்கொண்ட பு.ஜ.தொ.மு. அதன் தொடர்ச்சியாக 22.12.08 அன்று மாலை சிப்காட்-I பேருந்து நிறுத்தம் அருகே தொழிலாளர்களை அணிதிரட்டி எழுச்சிமிகு ஆர்ப் பாட்டத்தை நடத்தியது.

– பு.ஜ.செய்தியாளர், ஓசூர்.


படிப்பகம்

www.padippakam.com

# வழக்குரைஞர்கள் சங்கமா? ஆர்.எஸ்.எஸ். கூடாரமா?

**முசுலீம் தீவிரவாதிகளுக்காக வாதாடக் கூடாது என வழக்குரைஞர்கள் சங்கம் போடும் தீர்மானம் ஆர்.எஸ்.எஸ்.க்குக் கொண்டாட்டத்தைத் தருகிறது.**

''மும்பய் தாக்குதலின்பொழுது உயிருடன் பிடிபட்ட முசுலீம் தீவிரவாதி முகமது அஜ்மலின் மீதான வழக்கு விசாரணை நேர்மையான முறையில் நடைபெற வேண்டும். அவருக்காக வக்கீல் ஆஜராகவில்லை என்றால், அது மனித உரிமை மீறலாகிவிடும். இதற்காக அஜ்மலுக்காக ஆஜராக நான் தயார். இதற்காக பாகிஸ்தான் தூதரகம் என்னை அணுக வேண்டும். ஆனால், அஜ்மலைத் தண்டனையில் இருந்து காப்பாற்ற முடியாது'' என அறிவித்திருந்த மகாராஷ்டிரா மாநிலம் அமராவதி நகரைச் சேர்ந்த வழக்குரைஞர் மகேஷ் தேஷ்முக்கின் வீட்டையும் அலுவலகத்தையும் சிவசேனா குண்டர்கள் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர். அதே சமயம், அஜ்மலுக்காக வாதாட முன்வந்த மற்றொரு வழக்குரைஞர் ப.ஜனார்த்தன் சிவசேனா குண்டர்களால் தாக்கப்படவில்லை. அவர் ஓய்வு பெற்ற ''அட்வகேட் ஜெனரல்'' என்பதுகூட அவரின் ''அதிருஷ்டத்திற்கு''க் காரணமாக இருக்கலாம்.

இந்து மதவெறி பிடித்த சிவசேனா குண்டர்களின் இந்தத் தாக்குதலைப் பத்தோடு பதினொன்றாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. சிவசேனாவின் இந்தச் சட்டவிரோதமான மிரட்டல் நடவடிக்கையை நகர்ப்புறத்தைச் சேர்ந்த நடுத்தர, மேல்தட்டு ''இந்துக்கள்'' மனநிறைவோடு ஆதரிக்கிறார்கள் என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கது.

மேலும், பல்வேறு வழக்குரைஞர் சங்கங்கள் அஜ்மலுக்காக யாரும் வாதாடக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகக் கூறப்படுகிறது. தற்பொழுதுள்ள நிலையில் தனக்காக வாதாட ஒரு வழக்குரைஞரை நியமிக்க வேண்டும் எனச் சட்டப்படிக் கோரும் உரிமை அஜ்மலுக்கு உண்டு. இந்த உரிமையை அவரிடமிருந்து பறிக்க வேண்டும் என்பதற்காக, அஜ்மலை அந்நிய நாட்டைச் சேர்ந்த எதிரி என அறிவிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கியிருக்கிறார் சகுனி சுப்ரமணிய சுவாமி.

குற்றம் சுமத்தப்பட்டு நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கியிருக்கும் முசுலீம் தீவிரவாதிகளின் சார்பில் வாதாட முயலும் வழக்குரைஞர்கள் தாக்கப்படுவது மும்பய் தாக்குதல் வழக்கில்தான் முதன்முறையாக நடந்திருப்பதாக நீங்கள் கருதினால், அது தவறு. மத்தியப் பிரதேசத்தில் தார் என்ற சிறு நகரத்தில் உள்ள நீதிமன்றத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் சங்கம், அந்நீதிமன்றத்தைச் சேர்ந்த எந்தவொரு வழக்குரைஞரும் தீவிரவாதிகளுக்காக ஆஜராகக் கூடாது எனப் பல மாதங்களுக்கு முன்பே தீர்மானம் நிறைவேற்றியிருப்பதோடு, அதனை அந்த நீதிமன்றம்கூடத் தட்டிக் கேட்க முடியாதபடி நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்த ''பத்வா''வை மீறி, ஒரு முசுலீம் தீவிரவாதிக்காக அந்நீதிமன்றத்தில் வழக்காடச் சென்ற நூர் முகம்மது என்ற வழக்குரைஞர், பா.ஜ.க.வின் இளைஞர் அணியைச் சேர்ந்த குண்டர்களாலும், (இந்து) வழக்குரைஞர்களாலும் கடந்த ஏப்ரல் மாதம் நீதிமன்ற வளாகத்தினுள்ளேயே, நீதிபதியின் கண் முன்னாலேயே கடுமையாகத் தாக்கப்பட்டார். நீதிமன்ற வளாகத்தினுள் வன்முறை கூடாது என்று மட்டும்தான் நீதிபதியால் உபதேசிக்க முடிந்தது. அந்த அறிவுரையைக் கேட்ட வழக்குரைஞர்கள் வாயால் மட்டும் சிரிக்கவில்லை. இந்தத் தாக்குதல் பற்றி புகார் கொடுக்கப் போன நூர் முகம்மதுவிடம் தார் நகர போலீசார், ''தான் தாக்கப்படவில்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போகுமாறு'' அன்புக் கட்டளையிட்டார்கள்.

**மும்பயில் தாக்குதலை நடத்திய தீவிரவாதிகளுள் உயிருடன் பிடிபட்டதாகக் கூறப்படும் முகம்மது அஜ்மல்.**



இந்த அச்சுறுத்தல்களையெல்லாம் மீறி அந்த பரிதாபத்துக்குரிய முசுலீம் தீவிரவாதிக்காக வாதாடும் பொருட்டு நூர் முகம்மது மீண்டும் தார் நகருக்குச் சென்ற பொழுது, நூர் முகம்மது மயங்கிச் சரியும் அளவிற்குத் தாக்கப்பட்டார். மயங்கிக் கிடந்த அவருக்கு உதவி செய்தால், தீவிரவாதி என்று முத்திரை குத்தப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் முசுலீம்கள் யாரும் நூர் முகம்மதுவை நெருங்கக்கூடவில்லை. ஒரு 'இந்து' இளைஞன்தான் நூர் முகம்மதுவை மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தான்.

உத்திரப்பிரதேசத்திலுள்ள பைசாபாத் நகர நீதிமன்றத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் சங்கமும் எந்தவொரு வழக்குரைஞரும் தீவிரவாதிகளுக்காக வாதாடக்கூடாது என ''பத்வா'' விதித்திருக்கிறது. இதனை மீறி, லக்னோ நகரைச் சேர்ந்த முகம்மது ஷோயப் என்ற வழக்குரைஞர், ஹக்கீம் முகம்மது தாரிக்


படிப்பகம்

www.padippakam.com

காஸ்மி என்ற 'தீவிரவாதி'க்காக வாதாட பைசாபாத் சென்றபொழுது, அவர் நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே வைத்துத் தாக்கப்பட்டார். இத்தாக்குதல் பற்றித் தெரிந்திருந்தும் நீதிபதி அதனை ஒப்புக்குக்கூடக் கண்டிக்கவில்லை. போலீசாரும் இத்தாக்குதல் பற்றி வழக்குப் பதிவு செய்ய மறுத்து விட்டனர். "பைசாபாத் நீதிமன்றத்தைச் சேர்ந்த இந்து வழக்குரைஞர்களுள் பெரும்பாலோர் சங்கத்தின் சட்ட விரோதத் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும், சில இந்து வழக்குரைஞர்கள் இத்தீர்மானத்தை எதிர்த்த பொழுதிலும் அதனை வெளிப்படையாகக் கண்டிக்க முன்வரவில்லை" என்று கூறுகிறார், முகம்மது ஷோயப்.



அரசு நியமித்த வழக்கறிஞரால் காலைவாரிவிடப்பட்ட அப்சல் குரு.

பொதுமக்களை வகைதொகையின்றிக் கொல்லும் பயங்கரவாதிகளின் சார்பாக வாதாடக் கூடாது என்ற தீர்மானத்தை, தார்மீகக் கோபம் என்ற அடிப்படையில் பார்க்க வேண்டும் என்று நியாயப்படுத்தலாம். ஆனால், பயங்கரவாதத்தின் மீது நகர்புறத்து நடுத்தர வர்க்கம் கொண்டுள்ள இந்த தார்மீகக் கோபம் நடுநிலையானதாக இல்லை என்பதுதான் உண்மை.

மலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள இந்து பயங்கரவாதிகளை வெளிப்படையாகக் கண்டிக்கும் அளவிற்கு "இந்துக்களிடம்" தார்மீகக் கோபம் பொத்துக் கொண்டுவரவில்லை. எந்தவொரு வழக்குரைஞர் சங்கமும் அக்குண்டு வெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு ஆதரவாக வழக்குரைஞர்கள் வாதாடக் கூடாது எனத் தீர்மானம் இயற்றியதாகத் தெரியவில்லை. முசுலீம் தீவிரவாதிகளின் சார்பாக வாதாட முயலும் வழக்குரைஞர்களைத் தாக்கும் சிவசேனாவும், பா.ஜ.க.வும் மலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள இந்து பயங்கரவாதிகளைக் காப்பாற்றுவதற்காக நிதி திரட்டுவது, வழக்குரைஞர்களை நியமிப்பது என வெளிப்படையாக இறங்கியுள்ளன. இந்த இரட்டை வேடத்தை தார்மீகக் கோபம் எனக் கூறுவது மோசடித்தனமானது. இந்த தார்மீகக் கோபத்தின் ஆணி வேராக இருப்பது இந்து மதவெறியும் முசுலீம் வெறுப்பும்தான்.

இரண்டாம் உலகப் போரின்பொழுது யூத இன மக்களை இலட்சக்கணக்கில் படுகொலை செய்த (ஆர்.எஸ்.எஸ்.-இன் குருமார்களான) "நாஜி"க் குற்றவாளிகளுக்குக்கூடத் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டிருக்கும்பொழுது, அதே உரிமையை முசுலீம் தீவிரவாதிகளுக்கு அளிப்பதனால் நீதி செத்துப் போய்விடாது. மேலும், ஒருவரின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் நீதிமன்ற விசாரணையில் நிரூபணம் ஆகும்வரையில் அவரை நிரபராதியாகத்தான் பார்க்க வேண்டும் என்பதுதான் இயற்கையான நீதி பரிபாலனமுறை. குற்றம் சாட்டப்பட்டவர், தான் விரும்பும் வழக்குரைஞரைத் தனக்காக வாதாட நியமிக்கும்படி கோரும் உரிமையை இந்தியக் குற்றவியல் சட்டம் 303-ஆவது பிரிவு வழங்கியிருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர் வழக்குரைஞரை வைத்துக் கொள்ளவில்லையென்றால், நீதிமன்றமே அவரின் சார்பாக வாதாட ஒரு வழக்குரைஞரை நியமிக்க வேண்டும் என்றும் அச்சட்டம் கூறுகிறது.

இந்த சட்ட நடைமுறைகளை வெளிப்படையாக மீறி "பத்வா" பிறப்பிக்கும் வழக்குரைஞர்களின் வாதாடும் உரிமம் ரத்து செய்யப்படும் என்று ஒப்புக்காக ஒரு மிரட்டலை விடுக்கக்கூட எந்தவொரு நீதிமன்றமும் தயாராக இல்லை. உச்சநீதிமன்றம்கூட ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து வழக்குரைஞர்களின் அடாவடித்தனத்தை ஒப்புக்காகக் கண்டித்துவிட்டு, நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. நாடாளுமன்றத் தாக்குதல் தொடர்பாகக் குற்றம் சுமத்தப்பட்ட அப்சல் குருவுக்காக வாதாட நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வழக்குரைஞர் "சேம் சைடு கோல்" போட்டதை அறிந்த பிறகும், அப்சலுக்கு கீழ் கோர்ட்டில் அளிக்கப்பட்ட தூக்கு தண்டனையை உறுதி செய்த உச்சநீதி மன்றத்திடம் வேறெதை எதிர்பார்க்க முடியும்?

முசுலீம் தீவிரவாதத் தாக்குதல் தொடர்பாக நடைபெற்று வரும் பல்வேறு வழக்குகள் திறந்த நீதிமன்றங்களில் நடைபெறுவது கிடையாது. பிணை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு சட்டபூர்வ உரிமைகள், முசுலீம் என்ற ஒரே காரணத்திற்காகவே நீதிமன்றங்களாலும் மறுக்கப்படுகின்றன. இப்படிபட்ட நிலையில் தீவிரவாத வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள முசுலீம்களின் சார்பாக வழக்குரைஞர்கள் வாதாடக் கூடாது என மிரட்டுவதும், தீர்மானம் போடுவதும் அவர்களை எவ்வித விசாரணையுமின்றித் தண்டிக்க வேண்டும் என்ற பச்சையான பாசிசத் திமிரைத் தவிர வேறெதுவும் கிடையாது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அத்வானி; மும்பய்க் கலவர வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பால் தாக்கரே உள்ளிட்ட நூற்றுக்கணக்கான இந்து மதவெறி பயங்கரவாதிகள், வாய்தாவுக்கு மேல் வாய்தா வாங்கியும், சாட்சிகளை மட்டுமல்ல நீதிமன்றங்களையே மிரட்டியும் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். இந்து பயங்கரவாதத்தைக் கண்டும் காணாமல் காலத்தை ஓட்டும் கட்சி சார்பற்ற "இந்து" நடுத்தர வர்க்கம், முசுலீம் பயங்கரவாதிகளை எப்படியாவது தண்டித்துவிட வேண்டும் என முண்டிக் கொண்டு நிற்கிறது. இதற்காக சட்டபூர்வ பாசிச ஆட்சியை ஏற்றுக்கொள்ளக்கூட அது தயாராகிவிட்டது. அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு காங்கிரசு கூட்டணி ஆட்சியும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்துவிட்டது. இனி, முசுலீம் தீவிரவாதிகளின் சார்பில் வழக்குரைஞர்கள் யாரும் ஆஜராகக் கூடாது எனத் தீர்மானம் போட வேண்டிய அவசியம் எழாது.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# வடமாநிலத் தேர்தல் முடிவுகள்:

# ஜனநாயகம் பணநாயகமானது

**ஓட்டுச்சீட்டு அரசியலில் கிரிமினல்களின் ஆதிக்கம் மட்டுமின்றி, கோடீசுவரர்களின் ஆதிக்கமும் மேலோங்கி விட்டது.**

தில்லி சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரம் சூடாக நடந்து கொண்டிருந்தபொழுது பா.ஜ.க.வின் முதல்வர் வேட்பாளர் வி.கே.மல்கோத்ரா பற்றி, ''மல்கோத்ராவைவிடத் தீவிர வாதம் மேல்'' என்ற நகைச்சுவைத் துணுக்கு அரசியல் வட்டா ரத்திலும் வாக்காளர்கள் மத்தியிலும் றெக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்ததாம். தில்லி கோட்டையை எளிதாகக் கைப் பற்றிவிடும் என நம்பப்பட்ட பா.ஜக., ''அங்கு மண்ணைக் கவ்வியது ஏன்?'' என்ற கேள்விக்கு இந்தத் துணுக்குதான் இரத்தினச் சுருக்கமான பதில்.

ஜெய்ப்பூர், அகமதாபாத், தில்லி நகரங்களில் அடுத்த டுத்து நடந்த குண்டு வெடிப்புகள், அதனைத் தொடர்ந்து மும் பயில் முசுலீம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களால் நான்கு மாநிலங்களிலுமே (தில்லி, இராசஸ்தான், மத்தியப் பிரதேசம், சட்டிஸ்கர்) தனக்கு வெற்றி கிடைத்துவிடும் எனக் கனவு கண்டு வந்தது, பா.ஜ.க. மத்தியப் பிரதேசம், சட்டிஸ்கர் மாநில சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க. வென்று, ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டபோதிலும், தில்லியிலும், இராசஸ்தானிலும் பா.ஜ.க.விற்குக் கிடைத்துள்ள தோல்வி, அக்கட்சியின் நாடாளுமன்றக் கனவை ஆட்டங்காண வைத்துவிட்டது.

முசுலீம் தீவிரவாதிகள் மும்பயில் தாக்குதலைத் தொடங்கிய நான்காவது நாளில் தில்லி சட்டமன்றத் தேர்தல் நடந்தது. அதற்கு ஒரு வாரம் கழித்து இராசஸ்தான் சட்ட மன்றத் தேர்தல் நடந்தது. ஏற்கெனவே தீவிரவாத அபாயம், பொடா, கையாலாகாத காங்கிரசு என்ற பிரச்சாரத்தின் மூலம் இந்து மதவெறியைத் தூண்டிக் கொண்டிருந்த பா.ஜ.க.விற்கு, மும்பய்த் தாக்குதல் கூடுதல் உற்சாகத்தை அளித்தது. மும் பய்த் தாக்குதலுக்குப் பிறகு, ''தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடு; பா.ஜ.க.விற்கு ஓட்டுப் போடு'' என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் ஒரே முழக்கமாக மாறியது.

மும்பய் தாஜ் விடுதியில் பதுங்கியிருந்த முசுலீம் தீவிரவா திகளுக்கும் தேசிய பாதுகாப்பு படையினருக்கும் இடையே சண்டை நடந்து கொண்டிருந்தபொழுதே மும்பய்க்குப் பறந்து வந்தார், அத்வானி. முசுலீம் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் தனக்கு நிகர் யாரும் இல்லை எனக் குண்டு மழைகளுக்கிடையே ஓலமிட்டுவிட்டு, தேர்தல் பிரச் சாரத்திற்குப் பறந்து போனது, இந்தக் கிழட்டு நரி.

அத்வானியைத் தொடர்ந்து நரேந்திர மோடி மும்பய்க்குப் பறந்து வந்தார். ''மும்பயில் சண்டை நடந்து கொண்டிருக்கும் பொழுது தன்னால் அகமதாபாத்தில் உட்கார முடியவில்லை'' என்ற ''டயலாக்கை'' எடுத்துவிட்டார், அவர். ''தியாகியான ஒவ்வொரு சிப்பாய்க்கும், போலீசுக்கும் ஒரு கோடி ரூபாய் சன்மானம் அளிக்கப் போவதாக'' வாக்குறுதியை அள்ளி விட்டார், அவர். குஜராத்தில் உள்ள அக்சார்தாம் கோவிலில் தாக்குதல் நடந்தபொழுது மோடி எட்டிக்கூடப் பார்க்காத தையும் அத்தாக்குலின்பொழுது அறிவிக்கப்பட்ட சன்மா னத்தை இன்னமும் பட்டுவாடா பண்ணாமல் மோடி அரசு மெத்தனமாக இருப்பதையும் சுட்டிக்காட்டி மோடியின் வீரத் தையும் தயாள குணத்தையும் நையாண்டி செய்தது, காங்கிரசு.

தீவிரவாதிகளின் தாக்குதலில் விழும் பிணங்களின் எண் ணிக்கைக்கு ஏற்பத் தனக்கு ஓட்டு விழும் எனக் கனா கண்டு கொண்டிருந்த பா.ஜ.க.விற்கு தில்லி சட்டமன்றத் தேர்தல்

தில்லி சட்டமன்றத் தேர்தலின் பொழுது, ''தீவிரவாதத்தை ஒழிப்பதில் வல்லவன் யார்?'' என காங்கிரசுக்கும் (மேல்படம்) பா.ஜ.க.விற்கும் (கீழ்படம்) இடையே நடந்த சுவரொட்டி யுத்தம்.






படிப்பகம்

www.padippakam.com

தோல்வி பெரும் ஏமாற்றத்தையே தந்திருக்கிறது. பா.ஜ.க.வின் பரம்பரை ஓட்டு வங்கி எனக் கருதப்படும் தில்லி வாழ் 'இந்து' நடுத்தர வர்க்கமும் வியாபாரிகளும்கூட இந்த முறை காங்கிரசுக்கு வாக்களித்திருப்பதாக முதலாளித் துவப் பத்திரிகைகள் தேர்தல் முடிவுகளை அலசி ஆராய்ந்து எழுதியுள்ளன.

பா.ஜ.க., மத்தியப் பிரதேசத்திலும் சட்டிஸ்கரிலும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டதற்குக்கூட, அக்கட்சியின் முசுலீம் தீவிரவாத எதிர்ப்பு காரணமாக அமையவில்லை. சட்டிஸ்கரில் கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து மக்களைக் கவருவதில் காங்கிரசுக்கும் பா.ஜ.க.விற்கும் இடையே நாய்ச் சண்டையே நடந்தது. பா.ஜ.க., மூன்று ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டத்தை அறிவிக்க, காங்கிரசு இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி போடுவோம் என வாக்குறுதி அளித்தது. உடனடியாக பா.ஜ.க., ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டத்தையும் இலவச உப்புத் திட்டத்தையும் அறிவித்தது. இந்தக் கவர்ச்சி அறிவிப்புகளும், காங்கரசுக்குள் நிலவிய உட்கட்சிப் பூசலும் சட்டிஸ்கரில் பா.ஜ.க.வின் வெற்றிக்குச் சாதகமாக அமைந்தன.

மத்தியப் பிரதேசத்தைப் பொருத்தவரை, தெரியாத சிறீதேவியைவிட தெரிஞ்ச மூதேவி பரவாயில்லை என்ற அடிப்படையில்தான் அம்மாநில மக்கள் பா.ஜ.க.விற்கு வாக்களித்துள்ளனர். குறிப்பாக, மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த காங்கிரசு தலைவர்கள் கமல்நாத், திக் விஜய்சிங், அர்ஜுன் சிங், சிந்தியா ஆகியோருக்கு இடையே நடந்த அதிகாரப் போட்டியும்; மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி காங்கிரசுக்கு கிடைக்க வேண்டிய தாழ்த்தப்பட்டோரின் ஓட்டுக்களைப் பிரித்ததும் பா.ஜ.க.வின் வெற்றியை எளிதாக்கின.

இராசஸ்தானில் தீவிரவாதத்தைவிட, பா.ஜ.க. முதல்வரும் முன்னாள் மகாராணியுமான வசுந்தரா ராஜேயின் காட்டு தர்பாரும் (அம்மாநிலத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 22 முறை பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது) ஊழலும்தான் அம்மாநில மக்களுக்கு அபாயகரமானதாகத் தெரிந்ததால், காங்கிரசால் வெற்றி பெற முடிந்தது.

•••

பா.ஜ.க. நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமானால், தீவிரவாத எதிர்ப்பு என்ற ஒரு கோஷம் போதுமானது அல்ல என்று ஆலோசனை வழங்கியிருக்கிறார், ஆர்.எஸ்.எஸ்-இன் ஆஸ்தான ஆலோசகர் ''சோ'' ராமஸ்வாமி. மேலும், ''சோ'' உள்ளிட்ட முதலாளித்துவ ஆய்வாளர்கள் அனைவரும், ''வளர்ச்சியைத் தரக்கூடிய ஆட்சியாளர்களால் மட்டும்தான் ஆட்சியைப் பிடிக்கவோ, தக்க வைக்கவோ முடியும்'' என்ற 'கண்டுபிடிப்பை' உதிர்த்திருக்கிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக, காங்கிரசின் ஷீலா தீட்சித் தில்லியில் மூன்றாம் முறையாக ஆட்சியைப் பிடித்திருப்பதை அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஷீலா தீட்சித்தின் கடந்த பத்தாண்டு கால ஆட்சியில் தில்லியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ''மெட்ரோ ரயில் திட்டம், போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கக் கட்டப்பட்ட பாலங்கள், பேருந்து போக்குவரத்துக்கான விரைவுப் பாதைகள், வாகனங்களை இயற்கை எரிவாயுவில் மட்டுமே ஓட்ட வேண்டும் என்ற விதி, சமையல் எரிவாயுவிற்கு ரூ.40 மானியமாக அளித்தது'' போன்றவை அவரின் சாதனைகளாகக் கூறப்படுகின்றன.

> **கிரிமினல்கள் அரசியலில் புகுந்திருப்பது எத்தகைய அபாயமானதோ, அதற்கு எந்தவிதத்திலும் குறைந்ததில்லை, சட்டசபைகளில் புகுந்துள்ள இந்தக் கோடீசுவரர்களின் ஆதிக்கம்.**

முதலாளித்துவ அறிஞர்களால் போற்றப்படும் இத்தகைய வளர்ச்சித் திட்டங்கள் பொதுமக்களுக்கு எந்த விதத்தில் நேரடியாகப் பலன் அளித்திருக்கிறது? இந்த 'வளர்ச்சி' விலைவாசி உயர்வைக் குறைத்திருக்கிறதா? வேலையில்லாத் திண்டாட்டத்தை மட்டுப்படுத்தியிருக்கிறதா? விவசாயமும் சிறு தொழில்களும் நசிந்து போய்க் கொண்டிருப்பதைத் தடுத்திருக்கிறதா? கார் வைத்திருப்பவன் வேண்டுமானால் வழுக்கிச் செல்லும் சாலை இல்லையே என்று கவலைப்பட முடியும்; ஆனால், வேலையில்லாப் பட்டாளத்தின் கவலையோ வேறு மாதிரியாகத்தான் இருக்க முடியும். எனவே, பொருளாதார வளர்ச்சி என்பதை எல்லோருக்கும் பொதுவானதாகப் பார்க்க முடியாது.

பல்வேறு முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள்கூட இந்த வளர்ச்சியை ''வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி'' என்றுதான் குறிப்பிட்டு வருகிறார்கள். தில்லிக்கு வளர்ச்சியைத் தந்திருக்கும் ஷீலா தீட்சித்கூடத் தேர்தலுக்கு முன்பாக விலைவாசி உயர்வு தங்களைக் கவிழ்த்துவிடுமோ என்றுதான் கவலைப் பட்டுக் கொண்டிருந்தார். ஒருவேளை ஷீலா தீட்சித் தோற்றுப் போயிருந்தால், இந்த முதலாளித்துவ நிபுணர்கள் தட்டைத் திருப்பிப் போட்டுத் தட்டியிருப்பார்கள்.

•••

இந்த 'வளர்ச்சி' சட்டமன்றத்தின் முகத்தையே மாற்றி விட்டது. இராசஸ்தான், மத்தியப் பிரதேசம், தில்லி, சட்டிஸ்கர், மிஜோரம் ஆகிய ஐந்து மாநில சட்டப்பேரவைகளின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 629. இந்த 629 இடங்களில் வெற்றி பெற்றவர்களில் 40 சதவிகிதம் பேர் கோடீஸ்வரர்கள். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தில்லி சட்டமன்ற உறுப்பினர்களில் 31 சதவிகிதப் பேரின் சொத்து மதிப்பு ஐந்து கோடிக்கும் அதிகம். பின்தங்கிய மாநிலமான சத்திஸ்கரில் வெற்றி பெற்ற உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் கோடீசுவரர்கள்.

இது, ஜனநாயகம் பணநாயகமாக மாறிவிட்டதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. இந்தக் கோடீசுவர உறுப்பினர்கள் விவசாயம் நசிவடைவதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். விவசாயத்தை நாசமாக்கும் ''ரியல் எஸ்டேட்''


படிப்பகம்

www.padippakam.com

வியாபாரம் பற்றியும், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் பற்றியும்தான் அக்கறை காட்டுவார்கள். ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்வதைவிட, பங்குச் சந்தை வீழ்வதுதான் இவர்களுக்கு அச்சமூட்டுவதாக இருக்கும். கிரிமினல்கள் அரசியலில் புகுந்திருப்பது எத்தகைய அபாயமானதோ, அதற்கு எந்தவிதத்திலும் குறைந்ததில்லை இந்தக் கோடீசுவரர்களின் ஆதிக்கம். இந்தக் கோடீசுவரர்கள் தேர்தலில் வெற்றிபெற எவ்வளவு பணம் செலவழித்திருப்பார்கள், ரவுடிகளை இறக்கிவிட்டிருப்பார்கள், சாதி பலத்தைப் பயன்படுத்தியிருப்பார்கள் என்பதெல்லாம் மூடி மறைக்கப்பட்டு, 'வளர்ச்சி'யால் இவர்கள் வெற்றி அடைந்திருப்பதாகக் கூறுவது மோசடித்தனமானது.

'மார்க்சிஸ்டு'களோ மூன்றாம் அணி வெற்றி பெற்றால் இந்த நிலைமை மாறிவிடும் என உடுக்கை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இராசஸ்தானில் சி.பி.எம்., மூன்று இடங்களில் வெற்றி பெற்றிருப்பதையும்; பகுஜன் சமாஜ் கட்சி தில்லி, இராசஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் 16 இடங்களில் வெற்றி பெற்றிருப்பதையும் காட்டி, மூன்றாம் அணி என்ற மண் குதிரையை முன் நிறுத்துகிறது, சி.பி.எம்.

காங்கிரசு மற்றும் பா.ஜ.க.வின் கொள்கைகளிலிருந்து இந்த மூன்றாம் அணியின் கொள்கை, எந்த விதத்தில் மாறுபட்டது என்பதுதான் அடிப்படையான கேள்வி. போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு, இந்த ''மூன்றாம்'' கட்சிகள் அனைத்தும் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதிகள் என்பது ஏற்கெனவே நிரூபணமாகியிருக்கிறது. ஓட்டுக்களைப் பிளந்து, அதன் மூலம் காங்கிரசின் வெற்றிக்கோ அல்லது பா.ஜ.க.வின் வெற்றிக்கோதான் இந்தக் கட்சிகள் பயன்படும் என்பதையும் இந்தச் சட்டமன்றத் தேர்தல்கள் நிரூபித்திருக்கின்றன. ஒருவேளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்களில் இந்த மூன்றாம் அணி மாற்று சக்தியாக உருவெடுத்தால்கூட, எம்.பி.க்களை விலைக்கு வாங்கும் குதிரை வியாபாரமும், சந்தர்ப்பவாத கூட்டணிகளும்தான் உருவாகுமேயொழிய, 'தேசிய' அரசியலில் வேறெந்த மாற்றத்தையும் காண முடியாது.

• செல்வம்

# எம்.எஸ். சுவாமிநாதன்: வேளாண் விஞ்ஞானியா? அமெரிக்கக் கைக்கூலியா?

''கார்ப்பரேட் கம்பெனிகள் கனிவுடனும் சமுதாய அக்கறையுடனும் அளிக்கும் தொகையைப் பயன்படுத்தி, நாட்டு மக்களின் பசியைப் போக்கத் திட்டங்கள் தீட்ட வேண்டும். சிறு-குறு விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கி இலாபம் ஈட்டும் வகையில் அத்திட்டங்கள் அமைய வேண்டும். மகளிர் சுயஉதவிக் குழுக்களின் ஒத்துழைப்போடு சத்துணவு பாதுகாப்பு வளையத்தை உருவாக்கிப் பசியைப் போக்க வேண்டும்'' என்று அண்மையில் உபதேசித்திருக்கிறார், ஒரு மாபெரும் விவசாய விஞ்ஞானி.

''எம்.எல்.ஏ., எம்.பி.க்களுக்கு ஒதுக்கப்படும் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு பகுதியை ஒதுக்கி ஏழை விவசாயிகளுக்கு சத்துணவு படைக்க வேண்டும். அதை இலவசமாகக் கொடுக்காமல், விவசாயிகளுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்து, கூலியாக சத்துணவளிக்க வேண்டும்'' என்றும், இதற்கு ''காந்தி மாவட்டத் திட்டம்'' என்று பெயரும் சூட்டியுள்ளார், அந்த உலகம் போற்றும் விஞ்ஞானி.

இவர் சாதாரண விஞ்ஞானி அல்ல; உலகம் போற்றும் விஞ்ஞானி. மிகவும் செல்வாக்குள்ள நூறு பேராசிரியர்களில் ஒருவர். கௌரவ டாக்டர் பட்டங்கள் நாற்பதுக்கு மேல் பெற்றவர். ''மகசேசே'' விருதும் உணவுக்கான உலகப் பரிசும் பெற்றவர். இந்தியாவிலும் அனைத்துலக அரங்கிலும் அதிகாரமிக்கப் பல பதவிகளை வகித்தவர். நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதிக் குவித்தவர். இவர் பெற்ற பட்டங்களும் - பதக்கங்களும், வகித்த பதவிகளும் ஏராளம். சாமக்கோடங்கி போல குறிசொல்லி, உபதேசங்களை அள்ளி வழங்கும் இவர்தான், ''பசுமைப் புரட்சியின் தந்தை'' என்றழைக்கப்படும் எம்.எஸ்.சுவாமிநாதன்.

அரசாங்கத்தைக் கையில் போட்டுக் கொண்டு சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரில் விவசாய நிலங்களைப் பறித்து, விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கி வருகின்றன உள்நாட்டு-வெளிநாட்டு கார்ப்பரேட் (பெருந்தொழில்) கம்பெனிகள். அந்தக் கம்பெனிகள் விட்டெறியும் எச்சில் காசில் விவசாயிகளை முன்னேற்றி, வறுமையை விரட்டப் போகிறேன் என்கிறார் எம்.எஸ். சுவாமிநாதன். இவர் விஞ்ஞானியா, அல்லது கிறுக்கனா என்ற சந்தேகம் பலருக்கும் வரலாம். ஆனால், நாட்டின் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளை நட்டத்தில் தள்ளி கிறுக்குப் பிடித்து அலைய வைத்ததும், தற்கொலைக்குத் தள்ளியதும், இந்திய விவசாயத்தை நாசமாக்கி ஏகாதிபத்திய நிறுவனங்களின் ஆதிக்கத்தை நிறுவியதும் இந்த எம்.எஸ்.சுவாமிநாதன்தான்!

கும்பகோணத்தைச் சேர்ந்த பார்ப்பன மேட்டுக்குடி குடும்பத்தில் பிறந்த சுவாமிநாதன், ஐ.நா.வின் துணை அமைப்பான ''யுனெஸ்கோ''வின் உதவியுடன் நெதர்லாந்தில் முனைவர் பட்

**பசுமைப்புரட்சி என்ற பெயரில் இந்திய விவசாயத்தை நாசமாக்கிய விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன்.**





படிப்பகம்

www.padippakam.com



சுவமிநாதனின் பரிந்துரைப்படி அரசின் ஆதரவோடு திணிக்கப்பட்ட, மான்சாண்டோ நிறுவனத்தின் பி.டி.ரக பருத்தி, மண்ணை நஞ்சாக்கி நோய்களைப் பெருக்கி, இந்திய விவசாயிகளைப் பெருத்த நட்டத்திற்கும் தற்கொலைக்கும் தள்ளியது.

டம் பெற்று, அமெரிக்காவின் உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிறுவனத்தில் ஈராண்டுகள் பணியாற்றினார். அங்கு ஏகாதிபத்திய விவசாய நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட அவர், இந்தியாவுக்கு திரும்பி டெல்லியிலுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தின் தாவரவியல் துறைத் தலைவரானார்.

இதே காலகட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம், அனைத்துலக உணவு உற்பத்தியைக் கட்டுப்படுத்தி மேலாதிக்கம் செய்யும் நோக்குடன், ராக்பெல்லர் மற்றும் ஃபோர்டு அறக்கட்டளைகளின் மூலம் மெக்சிகோவில் ''சிமிட்'' எனப்படும் கோதுமை - மக்காச்சோள ஆய்வு நிறுவனத்தையும், பிலிப்பைன்சில் அனைத்துலக நெல் ஆராய்ச்சி நிறுவனத்தையும் உருவாக்கியது. உணவை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக்க மேலாதிக்கத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே இந்நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றின் மூலம், அதிக விளைச்சலைத் தரும் புதிய ரக விதைகள் என்ற பெயரில் கோதுமை, நெல் மற்றும் பிற உணவு தானிய விதைகளை ஏழை நாடுகளுக்கு அமெரிக்கா விநியோகித்தது. இப்புதிய வகை நெல் ரகங்கள் உள்நாட்டு பாரம்பரிய நெல் ரகங்களை படிப்படியாக அழித்து, விதை நெல்லுக்காக அமெரிக்காவிடம் கையேந்தும் நிலையை உருவாக்கியது.

இதே நேரத்தில், தனது பார்ப்பன - அதிகார வர்க்க செல்வாக்கையும் ஏகாதிபத்திய நிறுவனங்களுடனான நெருங்கிய உறவையும் கொண்டு 1966-இல் சுவாமிநாதன் இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனரானார். தனது அதிகாரத்தையும் செல்வாக்கையும் கொண்டு அமெரிக்காவின் திட்டப்படி புதிய ரக கோதுமை, நெல் மற்றும் உணவு தானியங்களை இந்திய விவசாயத்தில் திணித்தார். அரசின் ஆதரவோடு இந்திய விவசாயத்தில் திணிக்கப்பட்ட இந்த மாற்றங்கள்தான் ''பசுமைப் புரட்சி'' என்றழைக்கப்படுகிறது.

இந்தப் பசுமைப்புரட்சி இந்திய விவசாயத்தில் நோய் எதிர்ப்புத் திறன், மழை-வெள்ளத்தில் நீடிக்கும் திறன், வறட்சியைத் தாங்கும் திறன் முதலான பல்வேறு அரிய பண்புகளைக் கொண்ட பாரம்பரிய நெல் ரகங்களை ஒழித்துக் கட்டியது. தமிழகத்தின் பாரம்பரிய கிச்சலி சம்பா, குதிரைவாலி, சிறுமணி, கரைமடையான், புழுதிகாரி, ராஜராஜ சோழன், ஊடுமட்ட குறுவை, வாடன் சம்பா, சித்திரகார் முதலான பாரம்பரிய நெல் ரகங்கள் அழிக்கப்பட்டு, ஐ.ஆர். வகை நெல் ரகங்கள் ஆக்கிரமித்தன. இவை புதிய புதிரான நோய்களையும், களைகளையும் தொடர்ந்து உருவாக்கின. உரங்களும், பூச்சி மருந்துகளும் வண்டி வண்டியாகக் கொட்டினால்தான் பயிர் வளரும் என்ற நிலைக்கு இந்திய விவசாயம் தள்ளப்பட்டது. அதே நேரத்தில் ஏகாதிபத்திய உரம் மற்றும் பூச்சி மருந்துக் கம்பெனிகள் பசுமைப் புரட்சியைச் சாதகமாக்கிக் கொண்டு கொள்ளை இலாபமீட்டின.

இந்தியாவின் பாரம்பரிய விவசாயத்தில் நீடித்து வந்த கலப்பின பயிர்முறை ஒழிக்கப்பட்டு, ஒற்றைப் பயிர் முறை திணிக்கப்பட்டது. இயற்கை உரங்கள் ஒழிக்கப்பட்டு, இரசாயன உரங்கள் கொட்டப்பட்டன. இந்திய விவசாயி, ஒரு ஏக்கரில் வெங்காயம் அல்லது உருளை பயிரிட்டால், பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு விதைகள், உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளுக்காக ஏறத்தாழ ரூ. 25,000 கொட்டியழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இதனாலும், உற்பத்தி செய்த விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காததாலும் இலட்சக்கணக்கான விவசாயிகள் திவாலாகிப் போனார்கள்.

பசுமைப் புரட்சியின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட வீரிய ஒட்டுரக நெல் ரகங்கள் மிக அதிக அளவில் தண்ணீரை உறிஞ்சின, குறிப்பாக, ஐ.ஆர்.நெல் ரகங்கள் ஒரு கிலோ நெல் உற்பத்திக்கு 5000 லிட்டர் தண்ணீரை உறிஞ்சின. மானாவாரி நிலங்களைப் பெருமளவில் கொண்ட இந்தியாவில் இத்தகைய நெல் ரகங்களைப் பசுமைப் புரட்சியின் பெயரால் திணித்ததன் விளைவாக, நிலத்தடி நீர் வரைமுறையின்றி உறிஞ்சப்பட்டு, மண்ணில் இருக்கும் நீரைச் சேமித்து வைக்கும் நீர்க் காப்பான்கள் (acquifier) மலட்டுத் தன்மைக்குத் தள்ளப்பட்டன, இதனால் மறுஉற்பத்திக்கு வாய்ப்பே இல்லாமல் பல லட்சக்கணக்கான ஹெக்டேர் நிலங்கள் தரிசாகிப் போயின. விவசாயிகளோ ஓட்டாண்டிகளாகினர்.


இந்திய விவசாயத்தையும், விவசாயிகளையும் நாசமாக்கிய பசுமைப் புரட்சியானது, கடைசியில் ஏகாதிபத்திய கம்பெனிகளுக்குக் கொழுத்த ஆதாயம் தரும் இரசாயன உரம்-பூச்சி மருந்துகளின் விற்பனை புரட்சியாக மாறிப் போனது. இப்படி, இந்திய விவசாயத்தை நாசமாக்கிய முதன்மைக் குற்றவாளிகளில் ஒருவர்தான் எம்.எஸ்.சுவாமிநாதன். ஆனாலும் அவர் ''உலகம் போற்றும் விஞ்ஞானி'' என்றும், ''பசுமைப் புரட்சியின் தந்தை'' என்று ஏகாதிபத்தியவாதிகளால் போற்றப்பட்டார். பசுமைப் புரட்சியின் நோக்கமும் அது ஏற்படுத்திய கொடிய விளைவுகளும் நாடெங்கும் அம்பலமான பின்னரும்


படிப்பகம்

www.padippakam.com

கூட, அவர் இதற்காக வருந்தவில்லை. ''கட்டுப்பாடில்லாமல் உரம்-பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தியதால், பசுமைப் புரட்சியானது பேராசையின் புரட்சியாக மாறிவிட்டது'' என்று விவசாயிகள் மீது தான் அவர் குற்றம் சாட்டினார்.

பசுமைப் புரட்சியின் தோல்வியாலும்-அதிருப்தியாலும், ஆசிய கண்டத்தில் நெல் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி மேலாதிக்கம் செய்யும் தமது நோக்கம் பின்னடைவுக்குள்ளாவதைக் கண்ட ஏகாதிபத்தியங்கள், புதிய சதிகளில் இறங்கின. இந்தியாவின் பாரம்பரிய நெல் ரகங்களின் விதைகளைக் கைப்பற்றி அவற்றுடன் தமது புதிய நெல் ரகங்களைக் கலப்பு செய்து, நோய் மற்றும் பூச்சித் தாக்குதலுக்கு எதிரான புதிய நெல் ரகங்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கின. இந்தியாவில் சட்டீஸ்கார் மாநிலத்தில் 20,000-க்




# அறிவியல் மேதையா? மோசடிப் பேர்வழியா?

''இது நம்ம ஆளு!'' - என்ற கொள்கையுடன், பார்ப்பனரான எம்.எஸ்.சுவாமிநாதனை 'உலகம் போற்றும் விஞ்ஞானி' என்று ஒளிவட்டம் தீட்டி பார்ப்பன தேசிய பத்திரிகைகள் ஊதிப் பெருக்குகின்றன. ஆனால், எம்.எஸ்.சுவாமிநாதனின் ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும், மோசடிகளும் பித்தலாட்டங்களும் நிறைந்தவை என்று ஏற்கெனவே நிரூபணமாகியுள்ளது.

1967-ஆம் ஆண்டில் புதுடெல்லியில் நடந்த அறிவியலாளர் கருத்தரங்கு ஒன்றில், பாலுக்கு இணையான அளவில் புரதம் மற்றும் ''லைசின்'' எனப்படும் அமினோ அமிலம் கொண்ட புதிய இரக கோதுமையை தான் உருவாக்கியுள்ளதாக எம்.எஸ்.சுவாமிநாதன் பெருமையோடு அறிவித்தார். இந்தப் புதிய இரக கோதுமைக்கு ''சர்பதி சோனாரா'' என்று பெயரிட்டுள்ளதாகவும் அறிவித்தார்.

ஆனால், எம்.எஸ்.சுவாமிநாதனின் தலைமையில் இயங்கும் இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த உயிர்ம வேதியல் விஞ்ஞானியான டாக்டர் ஒய்.பி.குப்தா என்பவர், இப்புதிய இரக கோதுமை பற்றிக் கூறப்படும் தகவல்கள் பொய்யானவை; மோசடித்தனமானவை என்று அப்போதே ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினார். இதுதவிர, ''சிமிட்'' (CIMMYT) என்றழைக்கப்படும் மெக்சிகோவில் உள்ள கோதுமை மற்றும் மக்காச்சோள ஆய்வு நிறுவனம், சுவாமிநாதனின் புதிய கண்டுபிடிப்பு மோசடித்தனமானது என்று தனது ஆய்வுகளின் மூலம் 1969-ஆம் ஆண்டில் சுட்டிக் காட்டியது. இருப்பினும், குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு அவசியமான அமினோ அமிலப் பற்றாக்குறையை ஈடு செய்யும் வகையில் புதிய இரக கோதுமையைக் கண்டுபிடித்துள்ளதாகக் கூறி, எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு 1971-இல் மகசேசே விருது வழங்கப்பட்டது.

மீண்டும் 1974-இல் ''நியூ சயன்டிஸ்ட்'' என்ற அறிவியல் ஆய்விதழ், எம்.எஸ்.சுவாமிநாதனின் ஆய்வு மோசடிகளை அங்குலம் அங்குலமாக அம்பலப்படுத்திக் காட்டியது. இவ்விதழ் வெளியிட்ட உண்மைகளின் அடிப்படையில், ''ஸ்டேட்ஸ்மேன்'' நாளேடு 1977 மே 17-ஆம் நாளன்று, சுவாமிநாதனின் ஆய்வுகள் மீது மீண்டுமொரு விவாதத்தைத் தொடங்கியது. அவரது மோசடிகள் நாடெங்கும் நாறத் தொடங்கியதும் வேறுவழியின்றி, தான் தவறிழைத்து விட்டதாக சுவாமிநாதன் ஒப்புக் கொண்டார்.

இவரது புதிய கண்டுபிடிப்பு ''கப்சா''களும் ''ரீல்'' சுற்றலும் கோதுமையுடன் நின்றுவிடவில்லை. உருளைக்கிழங்கு, பருப்பு, மக்காச்சோளம் என்று எல்லா தானியங்கள்-கிழங்குகளிலும் தான் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்துள்ளதாக அவ்வப்போது அவிழ்த்து விட்டுள்ளார். இவற்றையெல்லாம் அம்பலப்படுத்திக் காட்டிய குற்றத்திற்காக டாக்டர் ஒய்.பி.குப்தாவுக்கு பதவி உயர்வு மறுக்கப்பட்டது. அவர் அவமானப்படுத்தப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டார். எம்.எஸ். சுவாமிநாதனின் மோசடிகளையும் அதிகார முறைகேடுகளையும் எதிர்த்து டாக்டர் ஒய்.பி.குப்தா, வழக்கு தொடர்ந்தார். ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம், சுவாமிநாதனின் செயல்பாடுகளை, ''நீதிக்குப் புறம்பானது, இதயமற்றது, அதிர்ச்சியளிக்கக் கூடியது'' என்று சாடியுள்ளது.

இருப்பினும், இந்தப் பார்ப்பன நரி அதற்காக வருந்தவில்லை; தன்னுடைய மோசடிகள் - முறைகேடுகளையோ, ஏகாதிபத்தியங்களுக்கு மாமா வேலை செய்வதையோ நிறுத்திவிடவுமில்லை. இப்போது அவர் மரபணு மாற்றப் புரட்சி என்ற பெயரில், பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகளின் பகற்கொள்ளைக்கு இந்திய விவசாயத்தைப் பலியிடும் திருப்பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

கும் மேற்பட்ட அரியவகை நெல் ரகங்களின் விதைகள் டாக்டர் ரிச்சார்யா என்ற விவசாய விஞ்ஞானியால் சேகரிக்கப்பட்டு, அரசு பாதுகாத்து வந்த நிலையில், அவற்றைக் கைப்பற்ற கைக்கூலி சுவாமிநாதனை அவை பயன்படுத்திக் கொண்டன.

மைய அரசின் விவசாயத் துறை முதன்மைச் செயலராகவும், பின்னர் மைய அமைச்சரவைக்கான அறிவியல் ஆலோசனைக் குழுவின் தலைவராகவும், திட்டக் கமிசனின் துணைத் தலைவராகவும் இருந்த எம்.எஸ்.சுவாமிநாதன், திடீரென ஒரே நாளில் அமெரிக்காவின் நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனரானார். உலக அரங்கில் எந்த ஒரு நாட்டிலும் உணவு மற்றும் உணவுப் பாதுகாப்பு இரகசியங்களைக் கையாளும் ஓர் அரசு உயரதிகாரி, அமெரிக்க நிறுவனத்திலும் அதிகாரியாக இருக்கவே சாத்தியமில்லை. மிகப் பெரிய விவசாய நாடான இந்தியாவில் தான் இந்த அயோக்கியத்தனம் நடந்தது.

தனது அதிகாரத்தைக் கொண்டு, டாக்டர் ரிச்சார்யாவுக்குப் பல்வேறு தொல்லைகளைக் கொடுத்து அவரைப் பொறுப்பிலிருந்து விரட்டியடித்த எம்.எஸ்.சுவாமிநாதன், அவரது முயற்சியால் சேகரிக்கப்பட்ட இந்தியப் பாரம்பரிய நெல் நகரங்களின் விதைகளை அமெரிக்காவின் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்திடம் அள்ளிக் கொடுத்தார். இந்திய விவசாயிகள் தமது அனுபவத்தாலும் திறமையாலும் உருவாக்கியிருந்த அரிய வகை நெல் ரகங்களின் விதைகள் அனைத்தும் இன்று அமெரிக்காவின் இரும்புப் பிடியில் சிக்கிக் கொண்டுள்ளன. 'விதைத் திருடன்' சுவாமிநாதனின் விசுவாச சேவையைப் பாராட்டி, ஏகாதிபத்திய வாதிகள் அவருக்கு ஏராளமான பட்டங்களையும் பதக்கங்களையும் கருப்புப்பண நன்கொடைகளையும் அள்ளிக் கொடுத்தனர். அவற்றைக் கொண்டு இந்தக் கைக்கூலி, விவசாய ஆராய்ச்சி அறக்கட்டளையைத் தொடங்கி, தனது துரோகத்தனத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்.

பசுமைப் புரட்சியின் மூலம் இந்திய விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கிய எம்.எஸ்.சுவாமிநாதன், இப்போது இரண்டாவது பசுமைப் புரட்சி என்ற பெயரில் மரபணு மாற்றப் பயிர்களைப் பரவலாக்கும் வேலையில் இறங்கியுள்ளார். ஏற்கெனவே வாழ்விழந்து நிற்கும் விவசாயிகளிடம் இயற்கை வேளாண்மையுடன் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களைப் பயிரிடுவதன் மூலம், நெருக்கடியிலிருந்து மீண்டு அதிக லாப மீட்ட முடியும் என்று ஆதரவு திரட்டி வருகிறார்.



**ஏகாதிபத்திய விசுவாச விஞ்ஞானிகள்: முன்னாள் அரசவைக் கோமாளி அப்துல் கலாமுடன் விதைத்திருடன் எம்.எஸ்.சுவாமிநாதன்**

ஆனால், சுவாமிநாதனின் பரிந்துரைப்படி அரசின் ஆதரவோடு திணிக்கப்பட்ட, மான்சாண்டோ நிறுவனத்தின் பி.டி. ரக பருத்தி, மண்ணை நஞ்சாக்கி நோய்கள் பெருகி இந்திய விவசாயிகளை பெருத்த நட்டத்திற்கும் தற்கொலைக்கும் தள்ளியது. ஆந்திராவிலும் மகாராஷ்டிராவிலும் மட்டும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்டனர்.

இக்கொடுஞ்செயலுக்குக் காரணமான சுவாமிநாதனோ, இதற்காக வருந்தாமல், பன்னாட்டு விவசாயக் கம்பெனிகளின் கொள்ளைக்காக, பன்னாட்டு விவசாய உயிரி தொழில்நுட்பச் சேவை (ISAAA) நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து அடுத்த கட்டமாக அரிசி, கோதுமை, தக்காளி, கத்தரி, கடலை, உருளை, வாழை மற்றும் பல்வேறு சாகுபடிகளில் மரபணு மாற்றப் பயிர்களை உருவாக்க முயற்சித்து வருகிறார். இதற்காகத் தனது அறக்கட்டளை மூலம் நாடெங்கும் பிரச்சாரத்தை நடத்தி வருகிறார்.

இதுமட்டுமின்றி, பல்வேறு கிராமங்களில் இணையதள வசதி கொண்ட 'கிராம தகவல் மையங்களை உருவாக்கி, ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு கிராமச் சந்தையின் தன்மை, தேவைகள், விநியோகச் சங்கிலி, கொள்முதல், ஒப்பந்த விவசாயம், நுகர்வு முதலானவற்றைப் பற்றிய தகவல்களை அனுப்பும் மையமாக மாற்றியுள்ளார். கிராம மக்கள் பல்வேறு தகவல்களை அறிந்து கொண்டு தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவே இம்மையங்களை உருவாக்கியுள்ளதாக சுவாமிநாதன் பசப்பினாலும், ஒட்டு மொத்த கிராமச் சந்தையைக் கைப்பற்றத் துடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவை செய்யும் மையங்களாகவே இவை அமைந்துள்ளன. இதற்காகவே ''காந்தி மாவட்டம்'', ''சத்துணவு பாதுகாப்பு வளையம்'' என்றெல்லாம் புதுப்புது திட்டங்களை அவிழ்த்து விடுகிறார்.

சுவாமிநாதனின் திட்டங்களை பைத்தியக்காரத்தனமான உளறல் என்று ஒதுக்கிவிட முடியாது. அத்திட்டங்களுக்குப் பின்னே, ஏகாதிபத்தியங்களின் ஆதிக்க நலன் ஒளிந்து கொண்டிருக்கிறது. பார்ப்பன-அதிகார வர்க்க செல்வாக்கும், பார்ப்பன தேசிய பத்திரிகைகளின் ஆதரவும், எல்லாவற்றுக்கும் மேலாக ஏகாதிபத்தியங்களின் அருளும் கொண்டிருப்பதால் அவரது திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்படுகின்றன. அவரது ஏகாதிபத்திய கைக்கூலித்தனம் மூடிமறைக்கப்பட்டு, மாபெரும் விஞ்ஞானியாக போற்றப்படுகிறார்.

பசுமைப் புரட்சியின் மூலம் இந்திய விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கியது போதாதென்று, இப்போது இரண்டாவது பசுமைப் புரட்சி என்ற பெயரில் மரபணு மாற்றப் பயிர்களைத் திணித்து இந்திய விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்கக் கிளம்பிட்ட இத்துரோகியை, இந்திய விவசாயிகள் அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்த வேண்டும். நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தத் துடிக்கும் ஏகாதிபத்திய சதிகளுக்கு விலைபோகும் இக்கைக்கூலியின் தகிடுதத்தங்களை, நாட்டுப் பற்றாளர்களும் அறிவியலாளர்களும் திரைகிழித்துக் காட்ட வேண்டும். சுவாமிநாதன் தலைமையிலான துரோகக் கும்பலை வீழ்த்தாவிட்டால், இரண்டாவது பசுமைப்புரட்சியின் வாயிலாக இந்திய விவசாயிகள் நாடோடிகளாக மாற்றப்படும் பேரபாயத்தைத் தடுக்கவே முடியாது.

● சுடர்



படிப்பகம்

www.padippakam.com

# கிரீஸ்:
# உலகமயமாக்கலுக்கு எதிராக உழைக்கும் மக்களின் கலகம்

ஐரோப்பிய கண்டத்திலுள்ள கிரேக்க நாடு, இதுவரை கண்டிராத உழைக்கும் மக்களின் பேரெழுச்சியால் குலுங்குகிறது. தலைநகர் ஏதென்சில் போராட்டத் தீ பற்றி எரிகிறது. கடந்த டிசம்பர் 6-ஆம் நாளில் தொடங்கிய இப்பேரெழுச்சி, இரு வாரங்களுக்குப் பின்னரும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஏதென்சின் புறநகர் பகுதியான எக்சார்சியாவில், தெருவில் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த கிரிகோரோ பவுலோஸ் என்ற 15 வயது சிறுவன், ரோந்து சுற்றிய போலீசாரால் டிசம்பர் 6-ஆம் நாளன்று சுட்டுக் கொல்லப்பட்டான். அச்சிறுவன், போலீசு வாகனத்தின் மீது பெட்ரோல் குண்டு வீசினான் என்பதால் சுடப்பட்டான் என்று நியாயவாதம் பேசியது போலீசு.

''இது அப்பட்டமான பொய்; கடந்த சில மாதங்களாகவே தொடரும் இளைஞர்கள் - போலீசுக்கிடையேயான மோதலின் தொடர்ச்சியாக நடந்துள்ள தாக்குதல்தான் இது. கிரேக்க நாட்டில் இளைஞனாக இருப்பதுகூடக் குற்றமாகி விட்டது; கொலைகார ஆட்சியாளர்கள் இளைஞர்களுக்கு மரணத்தையே பரிசாகத் தருகிறார்கள்'' என்று முழக்க அட்டைகளுடன் இப்பகுதிவாழ் இளைஞர்கள் உடனடியாக ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். போலீசு வாகனங்கள் மீது கல்லெறிந்து தாக்கி தீயிட்டுக் கொளுத்தினர்.

அடுத்தநாள், ஏதென்ஸ் நகரெங்கும் மாணவர்-இளைஞர்கள் வீதிகளில் பல்லாயிரக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். போலீசின் கொலைவெறியாட்டத்துக்கு எதிராக தன்னெழுச்சியாக வெடித்தெழுந்த இப்போராட்டம், கிரீஸ் நாட்டின் வலதுசாரி பிற்போக்கு ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டமாக முன்னேறத் தொடங்கியது.

ஏதென்ஸ் மட்டுமின்றி, தெசல்லோனிகி, ஹனியா, கிரீட், கார்ஃபூ முதலான பெருநகரங்களில் மாணவர்-இளைஞர்களின் ஆர்ப்பாட்டங்களும் சாலை மறியல்களும் தொடர்ந்தன. நாடெங்கும் போலீசாருக்கு எதிராக இளைஞர்கள் தெருச்சண்டையில் இறங்கினர். ஏதென்ஸ் பல்கலைக் கழகம் அவர்களது போராட்டத் தலைமையகமாகியது. பாட்ராஸ், கோமுடினி, ஹெராக்ளியன், சானியா முதலான இதர பல்கலைக் கழக மாணவர்களும், அவர்களுக்கு ஆதரவாக பேராசிரியர்களும் போராட்டத்தில் குதித்தனர். போக்குவரத்து தொழிலாளர்கள் , மருத்துவர்கள், ஆசிரியர்கள், ஆலைத் தொழிலாளர்கள் என உழைக்கும் மக்கள் ஓரணி திரண்டு அரசுக்கெதிராக வேலை நிறுத்தங்களில் இறங்கினர். உள்ளூர் வானொலி நிலையங்கள் போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டு, போராட்டச் செய்திகள் ஒலிபரப்பப்பட்டன. கிரேக்க நாடாளுமன்றம் நாள்தோறும் முற்றுகையிடப்பட்டது. ''உலகமயமாக்கலுக்கு மக்களைப் பலிகிடாவாக்காதே! மக்களை வதைக்கும் பொருளாதார சீர்திருத்தக் கொள்கைகளைக் கைவிடாதவரை, போராட்டம் தொடரும்!'' என்ற எச்சரிக்கை முழக்கம் எங்கும் எதிரொலித்தது.

கிரேக்க உழைக்கும் மக்களின் போராட்டம் நாடு தழுவிய பேரெழுச்சியாக பற்றிப் படரத் தொடங்கியதும், மக்களின் கோபம் பணக்கார கும்பலுக்கு எதிராகத் திரும்பியது. நாடெங்கும் ஆடம்பர-நுகர்பொருள் பேரங்காடிகள் சூறையாடப்பட்டன. ஏதென்ஸ் நகரில் மிகப்பெரிய கிறிஸ்துமஸ் மரம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. ஆடம்பரக் கார்கள் கல்லெறிந்து தாக்கப்பட்டன. உள்நாட்டு- வெளிநாட்டு வங்கிகள் அடித்து நொறுக்கப்பட்டன. வர்த்தக நிறுவனங்களின் அலுவலகங்கள் தீயிடப்பட்டன.

இது ஒரு உள்நாட்டுப் போர். பணக்கார வர்க்கத்தின் மீது ஏழைகள் தொடுக்கும் வர்க்கப்போர். ஓய்வூதிய வெட்டு, வேலை உத்தரவாதம் பறிப்பு, சமூக நலத் திட்டங்களுக்கான மானியக் குறைப்பு, தனியார் மயத்தால் கல்வி செலவு அதிகரிப்பு, வேலையின்மை முதலானவற்றால் கடந்த பல ஆண்டுகளாகக் குமுறிக் கொண்டிருந்த கிரேக்க மக்களின் கோபாவேசம்தான் இந்தப் போர். நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் நிலையில், அமெரிக்கப் பொருளாதாரச் சரிவினால் திவாலாகிவரும் கிரேக்க தனியார் முதலாளித்துவ வங்கிகளையும் நிதிநிறுவனங்களையும் பல்லாயிரம்

''கிரேக்க நாட்டில் இளைஞனாக உயிர்வாழ்வது கூட குற்றமா?''
- ஆர்ப்பாட்டத்தில் முழக்கமிட்டுக் கதறும் சிறுவன்.





படிப்பகம்

www.padippakam.com

கோடிகளை அள்ளிக் கொடுத்து முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்தும் கிரேக்க பிற்போக்கு அரசுக்கு எதிரான ஆத்திரம்தான் இந்தப் போர்.

''ஐயோ, அராஜகம்! வன்முறை!'' என்று செய்தி வெளியிட்டன முதலாளித்துவப் பத்திரிகைகள். ஆம்; அராஜகம்தான். இது, உலகமயமாக்கலும் அமெரிக்காவும் தோற்றுவித்த அராஜகம்! ஆம்; இது வன்முறைதான். இது உலகமயமாக்கலுக்கு ஏற்ப கிரேக்க பொருளாதாரத்தை மாற்றியமைத்த கிரேக்க பிற்போக்கு ஆளும் கும்பல் தோற்றுவித்த வன்முறை! இவற்றால் தாக்குண்டு குமுறிக் கொண்டிருந்த உழைக்கும் மக்கள், தீப்பொறிக்காகக் காத்திருக்கும் சருகுகள் நிலையில் இருந்தார்கள். இளஞ்சிறுவன் போலீசாரால் கொல்லப்பட்ட சம்பவம், போராட்டத் தீயைப் பற்ற வைத்து விட்டது.



இது உள்நாட்டுப் போர்: பணக்கார வர்க்கத்துக்கு எதிராக கிரேக்க ஏழைகள் தொடுக்கும் போர்.

கடந்த பத்தாண்டுகளில் முதலாளித்துவ நாடான கிரீசில் வேலையின்மை 30% ஆக அதிகரித்துள்ளது. பணவீக்கம், விலையேற்றத்தால் அந்நாட்டின் பொருளாதாரம் மூச்சுத் திணறுகிறது. உலகமயத்தால் ஆதாயமடையும் முதலாளித்துவக் கும்பல்களின் செல்வமும் ஆதிக்கமும் ஒருபுறம் பெருகிக் கொண்டே போக, மறுபுறம் உழைக்கும் மக்களின் வாழ்நிலையோ அதலபாதாளத்துக்கு வீழ்ந்து கொண்டிருக்கிறது. நாடாளுமன்றத்தில் மயிரிழைப் பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்தும் கோஸ்டாஸ் கரமான்லிஸ் அரசு, வீட்டுமனை ஊழலில் சிக்கி சந்தி சிரிக்கிறது. கடந்த ஓராண்டில் மூன்று அமைச்சர்கள் ஊழலில் சிக்கி அம்பலப்பட்டு பதவி விலகியுள்ளனர். அதிகாரச் சண்டையில் அந்நாட்டு ஆளும் வர்க்கம் பிளவுபட்டுப் போயுள்ளது. நடுத்தர வர்க்கம், அடித்தட்டு உழைக்கும் மக்களுடன் இணைந்து தெருவில் இறங்கிப் போராடுகிறது. தொழிலாளி வர்க்கமும், வேலையற்ற இளைஞர்களும் கடந்த ஈராண்டுகளாகத் தொடர்ந்து போராட்டக் களத்தில் நிற்கின்றனர்.

இதனால்தான், சிறுவனைச் சுட்டுக்கொன்ற குற்றத்திற்காக இரண்டு போலீசு அதிகாரிகளைக் கைது செய்தும், போலீசாரின் அக்கிரமத்துக்குப் பகிரங்க மன்னிப்பு கேட்டும் ஆட்சியாளர்கள், இப்போராட்டத்தைத் தணிக்க மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. உலகமயமாக்கலையும் அதற்கேற்ற பொருளாரதாரக் கொள்கைகளையும் கைவிடாதவரை அரசுடன் எவ்வகையிலும் ஒத்துழைக்க மாட்டோம் என்று உழைக்கும் மக்கள் போராட்டத்தைத் தொடர்கின்றனர். பள்ளி-கல்லூரிகள் மூடிக் கிடக்கின்றன. நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு அன்றாடம் ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. இஸ்ரேல் மற்றும் ஜெர்மனியிலிருந்து அவசரமாக கண்ணீர் புகை குண்டுகளை இறக்குமதி செய்து ஆளும் கும்பல் எதிர்தாக்குதல் நடத்திய போதிலும், உழைக்கும் மக்களின் கலகம் ஓயவில்லை.

அமெரிக்கப் பொருளாதாரச் சரிவைத் தொடர்ந்து, அதனுடன் பிணைக்கப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்ட ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் நெருக்கடி முற்றி வருகிறது. கிரேக்க உழைக்கும் மக்களின் பேரெழுச்சியை ஆதரித்து பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, பிரிட்டன், டென்மார்க் முதலான நாடுகளில் ஆர்ப்பாட்டங்களும் கிரேக்க தூதரக முற்றுகைப் போராட்டங்களும் நடந்துள்ளன. அமெரிக்காவின் நியூயார்க் நகரில் கிரேக்க தூதரகம் தாக்கப்பட்டுள்ளது. ஏதென்சில் பற்றிய தீ, பாரிசிலும் பரவும் என்று பிரெஞ்சு மாணவர்களும் இளைஞர்களும் நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கண்டு அந்நாட்டு ஆளும் கும்பல் அரண்டுபோய் நிற்கிறது. கல்விக்கான மானியத்தைக் குறைத்து கட்டணத்தை உயர்த்தும் கல்விச் சீர்திருத்தத் திட்டத்தை பிரான்சின் சர்கோசி அரசு அவசரமாக நிறுத்தி வைத்துள்ளது.

வீதிகளில் வீரப்போர்: ஏதென்ஸ் நகரில் போலீசுக்கு எதிராக மாணவர்-இளைஞர்களின் போர்க்கோலம்.



உலகமயமாக்கலின் பெருந்தோல்வியும், அமெரிக்கப் பொருளாதாரச் சரிவும் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளை ஆட்டிப் படைக்கின்றன. கிரேக்கம் மட்டுமின்றி, இனி இதர ஐரோப்பிய நாடுகளிலும் உழைக்கும் மக்களின் எழுச்சியும் கலகங்களும் வெடித்துப் பரவும் என்பது நிச்சயமாகிவிட்டது. கிரேக்க கம்யூனிஸ்டு கட்சி மட்டுமல்ல; இதர ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகளும் மக்கள் போராட்டங்களுக்குப் பின்னே வால்பிடித்துச் செல்கின்றனவே தவிர, இவற்றுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் ஆற்றல் கொண்டவையாக இல்லை. கிரேக்கமும் இதர ஐரோப்பிய நாடுகளும் புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சியொன்றின் தலைமைக்காகத் தவித்துக் கொண்டிருக்கின்றன.

● குமார்


படிப்பகம்

## விசுவநாத் பிரதாப் சிங்:

# காக்கை குயிலாகாது!


**பதவியைக் காப்பாற்றிக் கொள்ள இந்து மதவெறியர்களுக்கு அனுசரணையாக நடந்து கொண்டவர்தான், வி.பி.சிங்.**

**ச**மூகநீதிக் காவலர் என்றும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுக்காகப் பதவியை இழந்தவர் என்றும் புகழப்படும் முன்னாள் பிரதமர் வி.பி.சிங், கடந்த நவம்பர் 27-ஆம் நாள் மறைந்துவிட்டார். காவிரி நீர்ப் பங்கீட்டுக்கு நடுவர் மையம் அமைத்ததும், பல்லாண்டுகளாக அரசின் குப்பைத் தொட்டியில் கிடந்த மண்டல் பரிந்துரைகளில் பிற்படுத்தப் பட்டோருக்கு இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியதும் வி.பி.சிங்கின் அரசியல் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்கவை.

அவரின் மரணத்தையடுத்துத் திராவிடக் கட்சிகள், தலித் அமைப்புகள் போன்றவைகளும், அறிவுஜீவிகள், தன்னார்வக் குழுக்களின் மனித உரிமைப்போராளிகள் போன்றவர்களும் 'சமூகநீதிப் புரட்சியை ஏற்படுத்தியவர்' என்று ஏற்றிப் போற்றி, அவரைப் புனிதராக்குகின்றனர். சுமார் நாற்பதாண்டுகளுக்கும் மேலாக அரசியலில் இருந்த வி.பி.சிங்கை இடஒதுக்கீட்டுக்காக மட்டும் தூக்கி வைத்துக் கொண்டாடுவதன் நோக்கம் என்ன? ஜெயலலிதா, பார்ப்பன பயங்கரவாதி சங்கராச்சாரியைத் துணிவோடு கைது செய்ததை வைத்து அவரைப் 'பார்ப்பனிய எதிர்ப்புப் போராளி' என்று கொண்டாட முடியுமா?

வி.பி.சிங் தனது அரசியலை காங்கிரசு கட்சியிலிருந்து தொடங்கினார். தெலுங்கானாப் புரட்சி வெற்றிகரமாக நிலப் பங்கீட்டை நடத்தி முடித்திருந்த காலகட்டத்தில், எங்கே புரட்சித் தீ இந்தியா முழுவதும் பரவி விடுமோ என்ற அச்சத்தில் வினோபா பாவே ஆரம்பித்த மோசடித்தனமான 'பூமிதான' இயக்கம்தான் இந்த முன்னாள் ராஜாவை காங்கிரசுக்குக் கொண்டுவந்தது.

பாசிஸ்ட் இந்திராவின் இளைய மகன் சஞ்சய் காந்தியிடம் வி.பி.சிங் காட்டிய தீவிர விசுவாசமே அவரை படிப்படியாக முன்னுக்குக் கொண்டு வந்து, 1980-இல் உ.பி. முதல்வராக்கியது. 1984-இல் இந்திரா செத்த பிறகு, ராஜீவால் மத்திய நிதியமைச்சராக ஆக்கப்பட்டார். 1987-இல் போபர்சு பீரங்கி ஊழல் அம்பலமானதையடுத்து, இவரது காங்கிரசு அத்தியாயம் முடிவுக்கு வந்தது.



மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் விசுவநாத் பிரதாப் சிங்.

காங்கிரசில் இருந்தபோது அவசரநிலை பாசிச ஆட்சியை அவர் தீவிரமாக ஆதரித்ததையோ, அவருடைய குருநாதர் சஞ்சய்காந்தி காட்டுமிராண்டித்தனமாக முசுலிம்கள் மீது பாய்ந்து குதறியபோது அதனை அவர் கண்டும் காணாமல் இருந்ததையோ, மனித உரிமை பேச காஷ்மீர் வரை போகும் அ.மார்க்ஸ் ஏன் கண்டுகொள்வதில்லை?

அவசரநிலைப் பாசிச ஆட்சிக்காலத்தில் தி.மு.க. பிரமுகர்கள் சிறையில் அடைக்கப்பட்டு அடித்து நொறுக்கப்பட்டபோதிலும், வி.பி.சிங்கின் அவசரநிலை ஆதரவை தி.மு.க. ஏன் விமர்சிப்பதில்லை?

1980-இல் இவர் உ.பி. முதல்வராக இருந்தபோதுதான், உ.பி. அரசின் ஆயுதப்படை போலீசு மொராதாபாத் முசுலிம்களை இனப்படுகொலை செய்து, இந்தியாவின் மதக் கலவர வரலாற்றில் புதுப்பரிணாமத்தை உருவாக்கியது. இவரின் ஆட்சியில்தான் ஆதிக்க சாதிப் பண்ணையார்களின் சட்டவிரோத ஆயுதப்படைகள் தாழ்த்தப்பட்டோர் மீது தொடர்ச்சியான தாக்குதல்களைத் தொடுத்து நூற்றுக்கும் மேற்பட்டவர்களைக் கொன்று குவித்தன. ஒவ்வொரு தாக்குதலுக்குப் பிறகும் 'நிலைமை விரைவில் சரிசெய்யப்படும்' என்ற வெற்று அறிக்கையைத் தவிர, இவர் செய்தது எதுவுமில்லை. கான்பூருக்கு அருகேயுள்ள தஸ்தம்பூர் தாழ்த்தப்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டதையடுத்து, 1982-இல் இவர் பதவி விலகவேண்டி வந்தது. 1984 சீக்கியப் படுகொலைக்காக 1989-இல் மன்னிப்புக் கேட்ட வி.பி.சிங், தனது ஆட்சியில் கொலையுண்ட முஸ்லிம்களுக்காகவோ, தாழ்த்தப்பட்டோருக்காகவோ மன்னிப்பு எதையும் கேட்டதில்லை என்பது தொல்.திருமாவுக்கோ, தமிழக முசுலீம் முன்னேற்றக் கழகத்திற்கோ தெரியாதா?

கறைபடாதவர் எனப் போற்றப்படும் இவர், போபர்சு பீரங்கி விவகாரத்தில் காங்கிரசை விட்டு வெளியேறி ஜன மோர்ச்சா எனும் கட்சியை உருவாக்கினார். அக்கட்சியின் தளபதியோ கிரிமினல் குற்றவாளியான சஞ்சய் சிங். இந்திய பாட்மின்டன் வீரர் சையது மோடியின் மனைவியுடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்த சஞ்சய் சிங், 1988-இல் லக்னோவில் மோடியைச் சுட்டுக் கொன்றான். இக்கொலை வழக்கு வி.பி.சிங் பிரதமரானவுடன் முடக்கப்பட்டது. ஜன மோர்ச்சா, அப்போதிருந்த உதிரிக்கட்சிகள் பலவற்றுடன் சேர்ந்து ஜனதா தளமானது. ஜனதா தளத்துக்கும் வி.பி.சிங் தலைவரானார். 'திருவாளர் புதிய பரிசுத்தம்' அவர்களின் கட்சியிலோ தேவிலால், லாலுபிரசாத் யாதவ், தேவே கவுடா

www.padippakam.com

எனப் பெரும் ஊழல் பெருச்சாளிகள் மண்டிக்கிடந்தனர்.

பாசிச ராஜீவின் பீரங்கி பேர ஊழலை அம்பலப்படுத்தி ஆட்சியைப் பிடித்த வி.பி.சிங், குற்றவாளி ராஜீவ் கும்பலை விசாரிக்கவோ தண்டிக்கவோ செய்யவில்லை. காங்கிரசுக்கு மாற்று என்ற பெயரில் ஆட்சியைப் பிடிப்பதற்காக இந்துவெறி பயங்கரவாதக் கட்சியான பா.ஜ.க.வுடன் சிங் கூட்டணி கட்டினார். அதற்கு முன்பு வெறும் 2 எம்.பி.களை மட்டும் வைத்திருந்த பா.ஜ.க. இவரது உதவியால் 89 இடங்களில் வெற்றி பெற்றது. தனது ஆட்சியின்போது பா.ஜ.க. இட்ட வேலைக்கெல்லாம் தட்டாமல் சேவை செய்தார். இந்து பயங்கரவாதி ஜக்மோகனை பா.ஜ.க. நிர்ப்பந்தத்தால் காஷ்மீரின் ஆளுநராக்கினார். ஜக்மோகன் பதவி ஏற்ற நாளிலிருந்து இந்திய ராணுவம் காஷ்மீரில் பச்சை இரத்தம் குடிக்கத் தொடங்கியது. நாளுக்கு நாள் நூற்றுக்கணக்கான காஷ்மீரிகள் கொன்று வீதிகளில் வீசப்பட்டனர். நாடெங்கும் எதிர்ப்பு வலுத்த பின்னர் வேறுவழியின்றி சிங், ஜக்மோகனைத் திரும்ப அழைத்தார் . 'அதிகாரத்தை நோக்கி உண்மை' பேசும் அ.மார்க்ஸ், வி.பி.சிங்கின் இந்துத்துவ சேவையை மறைத்துவிட்டு இடஒதுக்கீடு மட்டும் பற்றிப் பேசுவது ஏன்?



திராவிடர் கழகம் நடத்திய அஞ்சலிக் கூட்டத்தில் வி.பி.சிங்கின் படத்தைத் திறந்து வைக்கும் அவரது துதிபாடியான தமிழக முதல்வர் மு.கருணாநிதி மற்றும் தி.க. பொதுச்செயலர் கி.வீரமணி.

வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது ஒருமுறை கூட பாபர் மசூதி பிரச்சினையில் தனது நிலைப்பாடு எதுவென கூறியது கிடையாது. 1990-இல் சோமநாத புரத்தில் இருந்து அத்வானி தொடங்கிய இரத யாத்திரையை அவர் எந்த இடத்திலும் தடுக்க முயலவே இல்லை. யாத்திரை சென்ற இடமெல்லாம் இரத்தக் களறியை ஏற்படுத்தி, முசுலிம்களைக் கொன்று குவித்தது. அத்வானியின் இந்துவெறி இரத யாத்திரை உ.பி. மாநிலத்தில் மட்டும் 3 மாதங்களில் 600 பேர்களைக் காவு கொண்டது. அலிகாரில் மட்டும் 88 பேரைப் படுகொலை செய்தது. இவ்வாறு நாடெங்கும் இந்துவெறி பயங்கரம் ஆட்டம் போட்ட போதும், தனது நாற்காலி மட்டும் கவிழ்ந்து விடாமல் சிங் பார்த்துக் கொண்டார். கடைசியில் பீகார் எல்லைக்குள் இரத யாத்திரை நுழையும் போதுதான் லாலுபிரசாத்தின் அரசு அத்வானியைக் கைது செய்தது. உடனே வி.பி.சிங் அரசும் கவிழ்ந்தது. மண்டலுக்காக ஆட்சியைப் பறிகொடுத்தவர் என்று சிங்குக்குப் பட்டம் சூட்டும் பெரியார் இயக்கம், அவர் இப்படி இந்து மதவெறியைக் கண்டும் காணாமல் இருந்ததை விமர்சிப்பதே இல்லையே, ஏன்?

ராஜீவால் ஈழத்துக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் பத்தாயிரம் தமிழர்களைக் கொன்று குவித்து, பாலியல் வல்லுறவுகளை நடத்தியது. சுமார் 3,000 வீரர்களைப் பலி கொடுத்துத் தோல்வியின் விளிம்பில் நின்று கொண்டிருந்த இந்தியப் படையை இலங்கை அரசும் வெளியேறச் சொல்லி அழுத்தம் கொடுத்து வந்தது. இன்னும் கேவலமாகத் தோற்பதை விட நாடு திரும்புவதே மேல் என்ற முடிவின் பேரில்தான் வி.பி.சிங், அந்தக் கூலிப்படையைத் திரும்பப் பெற்றார். ஆனால், அந்த முடிவை மட்டுமே மையப்படுத்தி, இவரை 'ஈழத்தமிழர்கள் பால் நேசம் கொண்டவர்' என்று இங்குள்ள ஈழ ஆதரவாளர்கள் சிலாகித்துக் கொள்கிறார்கள்.

**“ஒரு அரசியல் தலைவரை, எந்த வர்க்கத்துக்குச் சேவை செய்தார் என மதிப்பீடு செய்யாமல், தனிமனிதப் பண்புகளையும் ஒருசில சீர்திருத்த அறிவிப்புகளையும் மட்டும் வைத்து மதிப்பீடு செய்வது மோசடியாகும்.”**

ராஜீவ் காலத்தில் இந்திய அரசு மேற்கொண்ட அதே பிராந்திய மேலாதிக்கத்தைத் தான் வி.பி.சிங்கின் அரசும் பின்பற்றியது என்பதையோ, காஷ்மீர், அசாம் மாநிலத்தில் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை அவரின் அரசும் கொடூரமாக நசுக்கிக் கொண்டிருந்தது என்பதையோ பேச இவர்கள் வாய் திறப்பதில்லையே, அது ஏன்?

1990-இல் மண்டல் பரிந்துரையை நடைமுறைக்குக் கொண்டு வந்த வி.பி.சிங்கோ, மண்டல் முக்கியமாய் பரிந்துரைத்திருந்த நிலச் சீர்திருத்தத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு, அரசு வேலை வாய்ப்பில் 27


படிப்பகம்

சதவீதத்தை பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கினார். இதே வி.பி.சிங் தான் 1985-86-இல் ராஜீவ் காந்தியின் அரசில் நிதியமைச்சராக இருந்தபோது, அதுவரை அரசு வேலை வாய்ப்புக் களைக் கணிசமாக உருவாக்கி வந்த, நேரு பாணி கலப்புப் பொருளாதாரக் கொள்கையைக் கைவிட்டு, தனியார் மயத்துக்கு ஆதரவான பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டினார். பின்னாளில் நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தில் தனியார்மயம் முழுமையாக அமல் படுத்தப்பட்டாலும், ராஜீவ் அரசின் காலத்தில் இருந்தே அதற்கு அடித்தளம் போட்டவர்தான் வி.பி.சிங்.

2000-த்திற்குப் பிறகு ஏற்பட்டு வரும் மக்கள் போராட்டங் களின்போது வி.பி.சிங் இன்னொரு அவதாரமும் எடுத்தார். எங்கெல்லாம் உலகமயம், தனியார்மயத்துக்கு எதிரான மக்கள் திரள் போராட்டங்கள் நடக்கின்றனவோ, அங்கெல்லாம் சென்று உண்ணாவிரதம், ஆர்ப் பாட்டம் போன்றவற்றில் கலந்து கொண்டார். அங்கும் அவர் சிறப்புப் பொருளாதார மண்டலங்களைத் துரத்தி அடிக்கச் சொல்லிப் பேசவில்லை. நில மிழந்தவர்களுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டும் என்பதே அவரின் கோரிக்கையாக இருந்தது. மறுகாலனி யாதிக்கத்தை எதிர்க்கும் அரசியல் அவ ரிடம் கிடையாது. தாராளமயக் கொள் கைக்கு மனிதமுகம் தரும்படி, தன்னார் வக் குழுக்களின் பிரதிநிதியாகத்தான் அவர் இருந்தார். இந்தப் புள்ளிதான் வீரமணியில் இருந்து அ.மார்க்ஸ் வரை உள்ள 'சமூகநீதி' பக்தர்களையும் வி.பி. சிங்கையும் இணைக்கிறது.

கடந்த 15 ஆண்டுகளாக நடை முறைப்படுத்தப்பட்டு வரும் மறுகால னியாதிக்கம், பிற்படுத்தப்பட்டவர்க ளுக்கான அனைத்து அரசு வேலை வாய்ப்புகளையும் அடைத்துவிட்டது. ஆக, மண்டல் பரிந்துரையால் பிற்படுத் தப்பட்டவர்களுக்கு நடைமுறையில் எந்தப் பலனும் இல்லை. இருப்பினும், அது ஒரு சமூக நீதிப் புரட்சியை நடத்தி விட்டதாகக் கூறுவது, பிற்படுத்தப்பட்ட மக்களை ஏமாற்றும் தந்திரமே.

ஒரு அரசியல் தலைவரை, எந்த வர்க்கத்துக்குச் சேவை செய்தார் என மதிப்பீடு செய்யாமல், தனிமனிதப் பண்புகளையும் ஒருசில சீர்திருத்த அறி விப்புகளையும் மட்டும் வைத்து மதிப் பீடு செய்து துதிபாடிப் போற்றுவதென் பது இன்னுமொரு மோசடியே.

• கவி




ஈழத்தமிழர்கள் மீதான அழித்தொ ழிப்புப் போர் உச்சமடைந்து வரும் சூழ லில் பாசிச சிங்கள பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிராகவும், இப்படுகொலை களுக்குத் துணை நிற்கும் இந்திய அர சுக்கெதிராகவும், புரட்சிகர மாண வர்-இளைஞர் முன்னணி தொடர் பிரச் சார இயக்கத்தை நடத்திவருகிறது.

**திருச்சியில்,** 08.12.08 அன்று மாலை பாலக்கரை பிரபாத் திரையரங் கம் எதிரில் அனைத்து கல்லூரி மாண வர்களை ஒருங்கிணைத்து பு.மா.இ.மு. தலைமையில் ஈழத்தமிழரின் சுயநிர் ணய உரிமைப் போரை ஆதரித்து எழுச் சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட இணைச்செயலாளர் தோழர் கிளர்ச்சியாளன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் திருச்சி அரசு சட்டக் கல்லூரி, உருமு தனலெட்சுமி கல்லூரி, நேஷனல் கல் லூரி, பிஷப் ஹீபர் கல்லூரி, இன்ஃ பன்ட் ஜீசஸ் பாலிடெக்னிக் மற்றும் பார திதாசன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெருந்திரளாகப் பங்கேற் றனர்.பாரதிதாசன் பல்கலைக் கழக மாணவர்களான தோழர் கீர்த்திகா, தோழர் தமிழன்; பிஷப் ஹீபர் கல்லூரி மாணவி தோழர் ஜான்சி, அரசு சட்டக் கல்லூரி மாணவர் தோழர் அங்காளன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஈழத் தமிழர் படுகொலைக்குக் கார ணமான இந்திய அரசின் சதியை அம்ப லப்படுத்தி பு.மா.இ.மு. மாநில ஒருங்கி ணைப்பாளர் தோழர் பரமானந்தமும், சென்னை-டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்களிடையே நடந்த மோதலுக்குக் காரணமான ஆதிக்க சாதி வெறியர்களைக் கண்டித்து ம.க.இ.க தோழர் இராசாவும் சிறப்புரை யாற்றினர். ம.க.இ.க. மையக் கலைக் குழு தோழர்கள் பாடிய புரட்சிகர பாடல்கள் போராட்ட உணர்வூட்ட, எழுச்சியோடு நடந்த இந்த ஆர்ப்பாட் டம், உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

சேலம் மாவட்டம், **மேட்டூர் அணை**-சதுரங்காடி காந்திசிலை அருகே பு.மா.இ.மு. சார்பில் நடை பெற்ற பொதுக்கூட்டத்தில், இந்திய அர சின் பிராந்திய மேலாதிக்க சதிகளை அம்பலப்படுத்தியும் ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தும் தோழர் ஜெயகாந்த்சிங் உரையாற்றி னார்.

பேராசிரியர் பெரியார்தாசன், தனக்கே உரித்தான நையாண்டி பாணி யில், மலேகான் குண்டுவெடிப்பை நடத்திய இந்துவெறி பாசிசவாதிகளை அம்பலப்படுத்தியும் பார்ப்பன பயங்க ரவாதத்தை வீழ்த்த அறைகூவியும், சிறப்புரையாற்றினார். இந்து வெறியர் களை அங்குலம் அங்குலமாக அவர் தோலுரித்துக் காட்டியபோது, பெருத்த ஆரவாரத்துடன் மக்கள் வரவேற்றனர்.

ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும்-நாடகமும், புரட்சிகர அரசியலை மக்களின் நெஞ் சங்களில் உணர்வோடு பதிய வைத்தன.

- பு.ஜ.செய்தியாளர்கள்.

www.padippakam.com

## "கால்ஸ்" சாராய ஆலைக்கெதிராக...

# அடக்குமுறையை மீறி ஆர்த்தெழுந்த மக்கள் சக்தி



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக் கோட்டை வட்டத்திலுள்ள கல்லாக்கோட்டை கிராமத்தில், நிலத்தடி நீரைக் கொள்ளையிட்டு விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறித்து வரும் "கால்ஸ்" சாராய ஆலைக்கு எதிராக, இப்பகுதிவாழ் விவசாயிகள் தொடர்ந்து உறுதியாகப் போராடி வருகின்றனர். ஆலை கட்டுமானப் பணிகளை தடுத்து நிறுத்தியும், ஆலை நிர்வாகத்திடம் பணப்பெட்டி வாங்கிக் கொண்டு போராட்டத்தைச் சீர்குலைக்க முயன்ற துரோகிகளை அடித்து விரட்டியும், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் மற்றும் பல்வேறு ஜனநாயக இயக்கங்களின் பேராதரவோடும் கல்லாகோட்டை வட்டார விவசாயிகள் ஒன்றுபட்டுப் போராடி வருகின்றனர். (பார்க்க: "புதிய ஜனநாயகம், டிசம்பர் 2008)

போலீசார் மற்றும் துரோகிகளைக் கொண்டு மக்களை அடக்க முயற்சித்து தோல்வியடைந்த சாராய ஆலை கும்பல், நீதிமன்றத்தின் துணையோடும் போலீசை ஏவல் நாயாக்கிக் கொண்டும், கடந்த டிசம்பர் மாதத்தில் புதிய சூழ்ச்சிகள் - தாக்குதல்களுடன் இறங்கியுள்ளது. சாராய கும்பலிடம் பணப்பெட்டி வாங்கிக் கொண்டு, போராட்டத்தைச் சீர்குலைக்க முயன்று உள்ளூர் மக்களிடம் உதைபட்ட துரோகிகளான காங்கிரசு பிரமுகர் குஞ்சையா, தி.மு.க.வின் முத்துசாமி, ம.தி.மு.க.வின் ராஜப்பா ஆகியோர், தாங்கள் சாராய ஆலையில் வேலை செய்யும் ஊழியர்கள் என்றும், தங்களை உள்ளூர் மக்கள் தாக்கியதால் தங்களுக்கும் பிற ஊழியர்களின் உயிருக்கும் பாதுகாப்பு தரவேண்டும் என்று கோரி, "ஆலை ஊழியர்களின் உயிர் பாதுகாப்புக் குழு" என்ற பெயரில் மோசடியாக மதுரை உயர்நீதி மன்றத்தில் மனு செய்து, தமக்குச் சாதகமாக நீதிமன்ற உத்தரவையும் பெற்றனர். மேலும், புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி ஜெயசங்கரனைச் சரிகட்டி, "ஆலைக்குச் சொந்தமான இடத்தில் சாராய ஆலையை நிறுவும் பணிகளை மேற்கொள்ளலாம்" என்ற உத்தரவையும் சாராய கும்பல் பெற்றுள்ளது.

இவ்விரு நீதிமன்ற ஆணையிலும், ஆலை கட்டுமானப் பணிகளுக்குப் பாதுகாப்பு தருமாறு போலீசுக்கு எவ்வித அறிவுறுத்தலும் இல்லை. இருப்பினும், இரண்டு வேன்களுடன் ஏறத்தாழ 30 போலீசார் ஆலை வாயிலில் நிறுத்தப்பட்டுள்ளனர். ஆலைக்கு செங்கல், சிமெண்ட் ஏற்றிவரும் லாரிகளுக்கு முன்பு "சைரன்" ஒலியுடன் போலீசு வாகனங்கள் அணிவகுத்து பாதுகாப்பு கொடுக்கின்றன. இதுவொருபுறமிருக்க கடந்த 14.12.08 அன்று சீமைச்சாராய ஆலை எதிர்ப்புப் போராட்டக் குழு தலைவரான திரு.கணேசனின் வீட்டின் கதவை உடைத்து உள்ளே புகுந்த டி.எஸ்.பி. பழனிச்சாமி தலைமையிலான போலீசு கும்பல், வீட்டிலிருந்த பொருட்களை அடித்து நொறுக்கி, பணம் மற்றும் சி.டி. பிளேயரைக் களவாடிச் சென்றது. முன்னணியாளர்களான 8 பெண்கள் உள்ளிட்டு 15 பேர் மீது ஆலைக்கு வந்த மினி லாரியை மறித்து எரிக்க முயன்றதாக போலீசு கும்பல் பொய் வழக்கு போட்டு, கைது செய்யப் போவதாக பீதியூட்டி வருகிறது.

நீதிமன்ற ஆணை, பொய் வழக்குகள், வீடு புகுந்து சூறையாடல், தேடுதல் வேட்டை முதலான போலீசின் அடக்குமுறைகளைத் துச்சமாக மதிக்கும் இப்பகுதிவாழ் உழைக்கும் மக்கள், அடுத்தகட்டமாக புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் துணையோடு கந்தர்வக் கோட்டையில் 19.12.08 அன்று சாலைமறியல் போராட்டம் நடத்த முடிவு செய்து, இரவு - பகல் பாராமல் தொடர்ந்து பிரச்சாரம் செய்து மக்களை அணிதிரட்டினர்.


படிப்பகம்

www.padippakam.com

போராட்ட நாளன்று அதிநவீன துப்பாக்கிகள், குண்டாந்தடிகள், ''வஜ்ரா'' வாகனங்களுடன் டி.எஸ்.பி.க்கள், எஸ்.பி.கள் அணிவகுக்க, பெருமளவில் போலீசு குவிக்கப்பட்டு, கந்தர்வக் கோட்டைக்கு வரும் சாலைகள் அனைத்தும் கயிறுகள் கட்டி தடுக்கப்பட்டன. இருப்பினும், வேறு பாதைகளில் 5 கி.மீ. தூரத்துக்கு நடைபயணமாக வந்த கல்லாக் கோட்டை மக்கள், போலீசு தடுப்புக் கயிறுகளை அறுத்தெறிந்து விட்டு காட்டாற்று வெள்ளம் போல் அணிதிரண்டு, சாலை மறியல் போரில் இறங்கினர். தடியை உயர்த்தி மிரட்டிய போலீசாரிடம், செருப்பை தூக்கிக் காட்டி பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தனர்.



போலீசின் அடக்குமுறைக்கு எதிராகவும், சாராய கும்பலுக்கு எதிராகவும் இச்சாராய கும்பலின் பின்னணியுள்ள பெரும்புள்ளிகளை அம்பலப்படுத்தியும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் எழுப்பிய முழக்கங்களால் கந்தர்வக்கோட்டையே அதிர்ந்தது. போர்க்களத்தில் செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன. மறியலில் ஈடுபட்ட முன்னணியாளர்கள் கைது செய்யப்பட்ட போதிலும், ''கால்ஸ் சாராய ஆலைக்குக் கல்லறை கட்டும்வரை எமது போராட்டம் ஓயாது'' என்று கல்லாக்கோட்டை மக்கள் சூளுரைத்துள்ளனர்.

**- பு.ஜ. செய்தியாளர்கள், தஞ்சை.**

# துயரவெளள்ளத்தில் மக்கள் நிவாரணப் பணியில் புரட்சிகர அமைப்புகள்

கடந்த நவம்பர் இறுதியில் அடித்த புயலாலும், வழக்கத்தை விட 3 மடங்கு அதிகமாகப் பெய்த பெருமழையாலும் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. நீடாமங்கலம் தொடங்கி அதன் கீழ்பகுதி வரை ஓடுகின்ற கோரையாறு, ஓடம்போக்கி, பாமணியாறு, அடப்பாறு முதலான ஆறுகள் உடைந்து ஒன்றொடொன்று சேர்ந்து கடலிலும் கலக்க முடியாமல், மூன்று வாரங்களுக்கு மேல் நாகை-திருவாரூர் மாவட்டங்களின் பல கிராமங்கள் தனித்தனித் தீவுகளாகித் தத்தளித்தன.வடிகால்களை சீரமைக்காமல் புறக்கணித்த ஆட்சியாளர்களின் மெத்தனத்தால் பல கிராமங்களில் பயிர்கள் வெள்ளத்தில் அழிந்து போய், அவலத்தில் விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.

துயர வெள்ளத்தில் சிக்கித் தவித்த மக்களுக்கு நிவாரண முகாம்களில் ஒரு வேளை உணவு மட்டுமே வழங்கப்பட்டது.நாட்கள் பல கடந்தும் இழப்பீடுகளுக்கு உரிய நிவாரணம் அரசால் வழங்கப்படவில்லை. அன்றாடம் மக்களின் சாலை மறியல் போராட்டங்களால் இம்மாவட்டங்கள் அதிர்ந்தன. இம்மாவட்டங்களில் இயங்கிவரும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகவும் கூடுதலாகவும் நிவாரணம் வழங்கக் கோரியும், அதிகார வர்க்கத்தின் மெத்தனத்தை அம்பலப்படுத்தியும் சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து போராட்டக் களத்தில் நின்றன.

திருவாரூர் மாவட்டம், அம்மையப்பனில்...



இது மட்டுமின்றி, தஞ்சை, வல்லம், செங்கிப்பட்டி, திருவையாறு முதலான பகுதிகளிலிருந்து மக்களிடம் நிவாரணப் பொருட்களைப் பெற்று வந்து, நாகை-திருவாரூர் மாவட்டங்களில் பெரிதும் பாதிப்புக்குள்ளான அம்மையப்பன், கருப்பூர், திருமருகல், ஏர்வாடி முதலான பகுதிகளில் நிவாரண முகாம் அமைத்து அவற்றை உடனிருந்து விநியோகித்தன.

சென்னை-நெற்குன்றம், மதுரவாயல் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இப்பகுதியில் இயங்கிவரும் பு.மா.இ.மு. நிவாரணப் பணிகளைச் செய்ததோடு, வடிகால்களை ஆக்கிரமித்து கல்லூரி கட்டியுள்ள கல்வி வியாபாரி ஏ.சி.சண்முகத்தை கைது செய்யக்கோரி, பிரச்சார இயக்கத்தையும் மேற்கொண்டு வருகின்றது.

பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு நடுவே புரட்சிகர அமைப்புகள் மேற்கொண்ட இந்நிவாரணப் பணிகள் அளவில் சிறியவை தான் என்றாலும், அது உழைக்கும் மக்களின் நெஞ்சில் நீங்காத இடம் பெற்று, புரட்சிகர அமைப்புகளின் மீது மாளாத நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

**- பு.ஜ.செய்தியாளர்கள்.**

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

## முதலாளித்துவம் மறுக்கும் அரசியல் அறிவை தொழிலாளி வர்க்கத்திற்காய் படைக்கும் கீழைக்காற்று...




**லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்**
— ஸ்டாலின்




**முரண்பாடு பற்றி**
— மாசேதுங்




**கம்யூனிஸ்டு அறிக்கையின் கதை**



**அமெரிக்கப் பொருளாதார நெருக்கடியும் இந்தியாவில் அதன் பாதிப்புகளும்**



**காஷ்மீர் யாருக்குச் சொந்தம்?**




**உலகைச் சூறையாடும் உலகமயம்**
— இராயகரன்



**குண்டு வைப்புகளில் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. பயங்கரவாதிகள்**

சனவரி 8 முதல் 18 வரை
சென்னை ஜார்ஜ்
பள்ளி வளாகத்தில்
(பச்சையப்பன் கல்லூரி எதிரில்)
நடைபெறும் புத்தகக்
கண்காட்சியில்
கீழைக்காற்று அரங்கில்
கிடைக்கும்.

### ஒலி-ஒளி வட்டுகள்

- மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பாடல்கள்
- தஞ்சை தமிழ்மக்கள் இசைவிழா கருத்தரங்கம் – கலை நிகழ்ச்சிகள்
- தில்லைச் சமரில் வென்றது தமிழ்!
  — தில்லைப் போராட்டப் பதிவுகள், உரைகள்
- புரட்சித் திருமணம் இருக்க, போலித்தனம் எதற்கு? – உரை
  — தோழர் துரை.சண்முகம் – ம.க.இ.க.

## கீழைக்காற்று வெளியீட்டகம்

10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 044-28412367

கீழைக்காற்று



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

முதலாளித்துவம்
கொல்லும்!

கம்யூனிசமே
வெல்லும்!

ஜனவரி – 25, 2009
அம்பத்தூர், சென்னை



# முதலாளித்துவ பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு

கருத்தரங்கம் • பொதுக்கூட்டம் • கலைநிகழ்ச்சி

- ஒப்பந்த முறை – அவுட் சோர்சிங் போன்ற
  நவீன கொத்தடிமை வேலை முறைகளை முறியடிப்போம்!
- போராடிப் பெற்ற உரிமைகள் பறிக்கப்படுவதை முறியடிப்போம்!
- தொழிலாளி வர்க்கமாய் ஒன்றிணைவோம்!
  முதலாளித்துவத்தை வீழ்த்துவோம்!

பு ஜ தொ மு

**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**

தொடர்புக்கு : 94448 34519

படிப்பகம்